## கொல்லத் தான் நினைக்கிறேன்.

கொல்லத் தான் நினைக்கிறேன்.

**<u>நினைவு: 30</u>**

*மனித மூளையையும் தண்டுவடத்தையும் இணைக்கும் வகையில் உடலில் குறைந்தது 100 பில்லியன் நியூரான்கள் இருக்கின்றன. இந்த நியூரான்களின் வேலை நரம்பு மண்டலத்திற்கும் மூளைக்கும் செய்தி அனுப்புவதாகும். இந்தச் செய்திகள் ஒரு மணி நேரத்திற்கு 200 மைல்கள் என்ற வேகத்தில் கடத்தப் படுகின்றன. இந்த நியூரான் செல்களின் விட்ட அளவு 0.004 மில்லி மீட்டரில் இருந்து 0.1 மில்லி மீட்டர் ஆகும். இவற்றின் நீளம் சில இஞ்ச்களில் இருந்து சில அடிகள் வரை கூட நீளமாய் இடத்துக்குத் தகுந்தவாறு இருக்கின்றன. இவை கடத்தும் சமிக்ஞைகளின் மூலமே உடலில் அனைத்து செயல்பாடுகளும் தங்குதடையின்றி நடக்கின்றன. இந்த சமிக்ஞைகளை மின்-வேதியியல் (Electro-chemical) சமிக்ஞைகள் என்று சொல்கின்றார்கள்.*

தமிழகத்தின் தலைநகராய் விளங்கிடும் சிங்காரமில்லா சிங்காரச் சென்னை. இப்போது மழைக்காலம் இல்லை. ஆனால் மழை வெளுத்து வாங்கிக் கொண்டு இருக்கின்றது. "காலமே சரியில்லை. எல்லாத்துக்கும் கிறுக்கு புடிச்ச மாதிரி காலத்துக்கும் கிறுக்கு புடிச்சிப் போச்சு" என்று ஏதோ ஒரு கிழம் சொல்வது எங்கோ கேட்கின்றது ஒரு ஓரமாய்.

அது சைதாப்பேட்டை. மாலை 7 மணி. இப்போது தான் இருட்டி முடிந்திருக்கின்றது. சாலையில் ஆக்கிரமிப்பதற்காக மற்றவர்கள் கட்டிய கோவிலில் கம்பீரமாய் உட்கார்ந்திருக்கும் வெற்றி விநாயகர். நடுச்சாலையில் வெற்றி விநாயகர் கோவில் இருந்ததும் அப்போது அவர்களுக்கு வசதியாகத் தான் இருந்தது. அவர்கள் சாமி கும்பிட வந்தவர்களாய் தெரியவில்லை. மழை திடீரென்று வானம் பிளந்தது போல் பெய்ய ஆரம்பித்ததால் ஒதுங்கியவர்கள் போல் இருந்தார்கள்.

தொள தொளவென்று வெள்ளைச் சட்டை போட்டு தலையை உயர்த்திச் சீவி கொண்டை போடும் அளவுக்கு முடியை வளர்த்து மீசை இல்லாமல் தங்கத்தில் சின்னதாய் மைனர் செயின் அணிந்து கட்டம் போட்ட ஊதா நிறக் கைலி உடுத்தி 28 வயது ஆனாலும் சுமார் 25 வயதே மதிக்கத் தக்க உரமேறிய உடலுடன், அமைதியாய் இதோ இருக்கிறானே இவன் தான் ஜெயச்சந்திரன்.

அவன் பக்கத்திலேயே கால் முட்டி வரை இருக்கும் பெர்முடாஸ் என்னும் புதுவகை கால்சட்டை அணிந்து, அதில் என்ன எழுதியிருக்கின்றது என்றே அறியா வண்ணம் பல எழுத்துக்கள் காமா சோமாவென்று அச்சடிக்கப்பட்டிருக்கும் பனியன்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

அணிந்து கொண்டு, ஜாலியாய் அடிக்கடி ஜெயச்சந்திரனை அடித்துக் கொண்டும், இருக்கும் இடம் மறந்து சத்தமாய்ச் சிரித்துக் கொண்டும், அடர்த்தியான முடியும் மீசையும் வைத்துக் கொண்டு, ஆனால் முகத்தில் குழந்தைத் தனம் சிறிதும் மாறாமல், ஜெயச்சந்திரனை விட இரண்டு வயது குறைந்தவன் என்றாலும் சந்தர் என்று பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருக்கமாய் இருக்கின்றானே, அவன் தான் கதிர் என்று அனைவரும் செல்லமாய் அழைக்கும் கதிரேசன்.

இவர்கள் அடித்த லூட்டியைக் கண்டு மனம் பொறுக்காமல் கோவில் அர்ச்சகர் அவர்கள் அருகே வந்து, "ஏம்ப்பா கைலி உடுத்தி கோவிலுக்குள்ளே வரலாமோ? அபச்சாரம் இல்லையோ?" என்றார்.

அப்போதும் ஜெயச்சந்திரன் ஒன்றும் சொல்லவில்லை. அமைதியாய் இருந்தான். கதிர் தான் ஆரம்பித்தான். "இங்கே பார்றா. நீ டவுசர் போட்டு அதுக்கு மேல கைலி உடுத்திருக்க உன்னைக் கேக்குறாரு. ஆனா நான் வெறும் டவுசர் தான் போட்ருக்கேன். என்னைக் கேக்க மாட்றாரு. ஏதோ நாம இந்த விநாயகரைக் கும்புட வந்த மாதிரில்ல அலட்டிக்கிறாரு. சும்மாக்காச்சுக்கும் மழைக்கு ஒதுங்குனோம். அதோ எதுத்தாப்புல தெரியுது பாருங்க ஒயின் ஷாப். அங்கே தான் போகனும் நாங்க. அதுக்குள்ள மழை வந்துருச்சு. இப்போ வுட்டதும் கௌம்பிருவோம். நீங்க சாமியை ஒழுங்கா பார்த்துக்கோங்க." என்று கலாய்த்தான்.

அர்ச்சகர் பாவம். இவர்களிடம் பேசினால் நமக்குத் தான் கேவலம் என்று நினைத்தார் போலும். உள்ளுக்குள்ளேயே, "பார்த்தா படிச்ச பெரிய பசங்க மாதிரி இருக்காங்க. ஆனா நடத்தையப் பார்த்தா அப்படித் தெரியல" என்று முணங்கிக் கொண்டே மூலஸ்தானம் அருகில் சென்று உட்கார்ந்து கொண்டார்.

மழை கொஞ்சம் குறைந்தது போல் தெரிந்ததும் அர்ச்சகரைப் பார்த்து "மழை வெளியே விட்ருச்சு. உள்ளே ஆரம்பிக்கலாம்னு கிளம்புறோம்" என்று கதிர் சொல்ல குசும்பாய்ச் சிரித்த படி வெளியே கிளம்பினர் இருவரும். வெளியே வந்ததும் கதிர் கேட்டான். "என்ன சந்தர் அமைதியாவே இருக்க?" என்று.

"ஒன்னுமில்லடா. தண்ணியடிக்கன்னு வந்துட்டு கோயிலுக்குள்ள போய் உட்கார்ந்திருந்தோமே?" என்றான்.

"அட! மழை அதிகமா பெஞ்சா எங்கனாலும் போயி அடையலாம்! வருவானா. சும்மா அதையே நினைச்சிக்கிட்டு" என்றான் கதிர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"அப்படி இல்லைடா கதிரு. இதே பூசாரி ஒயின் ஷாப்புக்குப் பக்கத்துல வரும் போது மழை புடிச்சா அங்கே போய் அடைவாரா?" என்றான் பதிலுக்கு.

"நல்லா நனைஞ்சிக்கிட்டே போவாரு கோயிலுக்கு! குளிச்ச மாதிரி ஆச்சு. ஆனா நமக்கு அப்படியாடா? நாமளே சுதி ஏத்தப் போறோம். சரி சரி வா." என்ற படி இருவரும் ஒயின்ஷாப்பிற்குள் நுழைந்தனர். அங்கு ஏற்கனவெ நல்ல கூட்டம். அங்கிருந்த சிறு வயதே மதிக்கத் தக்க ஒருவன் சர்வர் போலும். இவர்களைப் பார்த்ததும் ரெகுலர் கஸ்டமர் என்று புன்னகைத்தான். "என்னடா இன்னைக்கு சீட் கிடைக்காதா?" என்றான் கதிரே இந்த முறையும்.

அதற்கு அவன், "உங்களுக்கு இல்லாத சீட்டா?" என்று ஒரு மூலையைக் காட்டினான். சரியாய் இருவர் மட்டும் உட்காரும் இடம் காலியாய் இருந்தது. சரியென்று அமர்ந்தனர். அவர்களின் வழக்கமான கச்சேரி ஆரம்பித்தது. அது ஒரு சுற்று முடிவதற்குள் இன்னொரு சுற்று நாம் அவர்களைப் பார்க்கலாம் சிறிது.

கதிர் - கம்ப்யூட்டர் மென்பொருள் ஜித்தன். எள்ளென்றால் எண்ணையாய் இருப்பவன். பொறியியல் கல்லூரியில் முதலாவதாய்த் தேறியவன். பெரிய கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கின்றான். அவனுக்கு அப்பாவும் அம்மாவும் மட்டுமே. கூடப் பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. பெற்றோர் விவசாயம் பார்க்கின்றார்கள் கிராமத்தில். ஆனால் இவன் வளர்ந்தது எல்லாமே ஹாஸ்டலில் தான். அவனது அப்பா விவசாயத்தில் மாய்ந்து மாய்ந்து ஒரு வருடத்தில் எடுக்கும் வருமானத்தை ஒரு மாதச் சம்பளமாய்ப் பெறுபவன். இப்போதைக்குத் திருமணத்தை நாசூக்காய்த் தள்ளி வைத்திருக்கின்றான்.

ஜெயச்சந்திரன் - சென்னை ஐ.ஐ.டி.யில் மைக்ரோ பயாலஜியில் எம்.டெக். படித்தவன். முழுதும் மெரிட்டில் கிடைத்த சீட். கிட்டத்தட்ட மருத்துவரைப் போல் தான். ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தில் வேலை செய்கின்றான். அவனுக்கும் 6 லக்கத்தை நெருக்கும் சம்பளம்.

ஜெயச்சந்திரனுக்கும் கதிருக்கும் எப்படி பழக்கம் வந்ததென்பது ஆச்சரியமான விஷயம் தான். சைதாப்பேட்டையில் ஜெயச்சந்திரனுடன் ஒரு வருடமாய் வாடகை வீட்டில் தங்கியிருந்தான் ரமேஷ். ரமேஷின் ஊரான மேலூர் தான் கதிருக்கும் ஊர். இருவரின் தந்தைக்கும் எப்படியோ பழக்கம். கதிருக்கு சென்னையில் வேலை கிடைத்ததும் ரமேஷைப் போய் பார்க்கச் சொல்லி அவன் தந்தை சொல்லி அனுப்ப,

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

கதிரையும் அவர்கள் இருவரும் இருக்கும் இடத்திலேயே தங்க வைத்தான் ரமேஷ். ஜெயச்சந்திரன் அமைதியான சுபாவம் உடையவன். கதிரோ நேர் எதிர். அவன் இருக்கும் இடம் எப்பவுமே கலகலப்பாய் இருக்கும். ஆறுமாதத்திற்கு முன் திடீரென்று ரமேஷுக்கு திருமணம் நடைபெற்று அவன் தனியாகச் சென்றதால் இவர்கள் இருவர் மட்டும் தனித்து விடப்பட்டனர். இந்த ஆறு மாதத்தில் தான் இத்தனை நெருக்கம்!

ஆ! அதற்குள் நிறைய சுற்றுக்கள் முடித்து விட்டனர் போல் இருக்கின்றதே. ஆனால் எவ்வளவு குடித்தாலும் இருவருக்கும் நிலை தப்பாது!

இவர்களுக்கிடையே இருக்கும் நெருக்கம் இ(ரு)றுக்குமா?
(நினைவுகள் கழியும்)

**<u>நினைவு : 29</u>**

*பிறந்த குழந்தை ஒரு வயதாகும் போது இருப்பது 100 பில்லியன் நியூரான்கள் (10^11). அதோடு அவற்றின் வளர்ச்சி முடிவடைகின்றது. அதன் பின் புதிய நியூரான்கள் பிறப்பதில்லை. அது மாத்திரமில்லை. ஒரு நாளைக்கு 200000 நியூரான்கள் என்ற முறையில் செயலிழந்து அழிந்து கொண்டிருக்கின்றன. இருந்தும் ஒவ்வொருவருக்கும் 1300 வருடங்கள் வாழ்வதற்கான நியூரான்கள் கையிருப்பு இருக்கின்றது. ஆனால் 50 வயதாகும் போது ஒருவர் 2 முதல் 5% நியூரான்களை இழந்திருப்பார். மூளையில் இருக்கும் ஒவ்வொரு நியூரானும் மற்ற நரம்பு மண்டலத்தின் நியூரான்களில் குறைந்தது 1000 நியூரான்களுடன் தொடர்பு வைத்திருக்கின்றது.*

சுரேஷ் பாண்டே. 49 வயது, வழுக்கைத் தலை. சிவப்பு நிறம். தினம் இரண்டு முறை முகச் சவரம் செய்வாரோ என்று அனைவரும் சந்தேகிக்கும் வழுவழு கன்னம். கூர் நாசி. கண்களில் செவ்வகமாய் ரிம்லெஸ் கண்ணாடி. போட்டிருக்கும் சட்டையில் ஒரு புள்ளி கூடத் தனியாகத் தெரியாத ஊதா நிற ப்ளைன் புல் ஆம் சர்ட். அதே ஊதா நிறத்தில் கொஞ்சம் திக்கான கலரில் டை. அதே நிறத்தில் பேண்ட்.

புது டில்லி. பல நாடுகளில் கால் பதித்திருக்கும் வங்கியின் பல மாடிக் கட்டிடம் கொண்டதலைமை அலுவலக கார் பார்க்கிங்கில் தானே ஓட்டிக் கொண்டு வந்த தனது ஹோண்டா சிட்டி காரை நிறுத்தி விட்டு வெளியே இறங்கினார். தனது ஐடெண்டிடி கார்டை கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டார். கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அவர் மூத்த பொது மேலாளர் பொறுப்பை வகிக்கின்றார் என்று தெரிகின்றது! அவருடன் நாமும் எளிதாய் உள்ளே நுழைந்து விடுவோம்! அவரைப் பார்த்ததும் ராயல் சல்யூட் வைத்தனர் செக்யூரிட்டிகள். அதை ஏற்றுக் கொண்ட பாண்டே உள்ளே நுழைந்தார்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

சில்லென்று முகத்தில் அடித்தது ஏ.சி. குளிர். நேராக அவரது அறைக்குச் சென்றார் பாண்டே. அவரது இருக்கையில் உட்கார்ந்து அவரது கணினியை ஆன் செய்தார்.

காலையிலிருந்து மதியம் வரை அவருக்கு இருந்த வேலைகளைப் பட்டியலிட்டாலே அவரது வேலையின் மதிப்பு தெரியவரும். அவர் தான் அந்த வங்கியின் கணினித் துறையும் மற்ற துறைகளும் இணைக்கும் பணியைச் செய்து வருகின்றார். ஓய்வு வருவதற்குள் நிர்வாக மேலாளராக ஆகி விடும் வாய்ப்பு அவருக்குத் தான் என்று எல்லோரும் பேசிக் கொள்கின்றார்கள். அந்த வங்கியின் மைய வழங்கியின் நிர்வாக கடவுச் சொல் அவரிடமும் இருந்தது. மொத்த வங்கியின் அனைத்துக் கட்டுப்பாடுகளும் அவர் கையில் தான். காலை வந்ததுமே தங்கள் வங்கியின் இணைய தளத்தினுள் லாகின் செய்தார். அனைத்து கிளைகளின் பேக்கப் லாக்கும் சரியாக இருக்கின்றதா என்று தான் முதலில் பார்த்தார். அனைத்தும் சரியாக இருந்ததைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

இந்த ஆண்டுக்குள் இன்னும் 200 பேரையாவது வீட்டுக்கு அனுப்பி விட்டு மீதி இருப்பவர்களிடமிருந்தே வேலை வாங்க வேண்டும் என்று நிர்வாகக் குழு கூட்டத்தில் முடிவெடுத்தார்கள். அது விஷயமாக மனிதவள பொது மேலாளருடன் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். இன்றைய டாலர் விலை வீழ்ச்சியால் வங்கிக்கு லாபமா நட்டமா என்று பார்த்துக் கொண்டார். எல்லாம் சரியாக நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவருக்கு இன்று ஏதோ தவறு நடந்திருப்பதாக மனதினுள் ஒரு சிறு உள்ளுணர்வு. ஆனால் எதுவும் கண்ணுக்குப் படவில்லை.

காலை 11 மணிக்கெல்லாம் ஆரம்பித்த பிசினஸ் மீட்டிங் தான். டீக் கோப்பைகளுக்கும் மேரி பிஸ்கட்டுகளுக்கும் இடையில் பல கோடி ரூபாய் பிரச்னைகள் சாதாரணமாக விவாதிக்கப்பட்டன. பலரின் பொருளாதார வாழ்வு தீர்மானிக்கப்பட்டது. அங்கேயே மதிய உணவும் முடிந்தது. தான் எதிர்பார்த்த படியே அனைத்தும் முடிந்த சந்தோசத்தில் மீண்டும் தன் இருக்கையில் வந்து அமர்ந்தார்.

மதியம் 3 மணியிலிருந்து 5 மணி வரை கோப்பு நேரம் அவருக்கு. அனைத்து கோப்புக்களையும் பார்வையிட்டு கையொப்பமிட்டு வழக்கமான அலுப்புடன் அவரது அன்றைய பணி 5 மணிக்கு முடிவடையும். அப்படியே வீட்டுக்குக் கிளம்பினால் அரை மணிநேரம் ஆகும். மாலை 6 மணிக்கெல்லாம் வீடு போய்ச் சேர்ந்து விடுவார். இத்தனை பொறுப்பில் இருந்தாலும் 6 மணிக்குத் தாமதமாக ஒரு நாளும் சென்றதில்லை.

அப்பேர்ப்பட்டவர் இன்று போன் செய்து "நான் கொஞ்சம் வர லேட்டாகும்"

கொல்லத் தான் நினைக்கிறேன்.

என்றார் மனைவியிடம். அவருக்கே ஆச்சரியம். "ஏதும் பிரச்னையா?" என்று மனைவி கேட்ட கேள்விக்குக் கூடப் பதிலளிக்க முடியாமல் போனைச் சடாரென்று வைக்குமளவுக்கு இன்று மட்டும் என்ன நடந்தது?

வழக்கம் போல் 5 மணிக்கு வேலை முடிந்து விட்டது. கிளம்புவதற்கு முன் கணினியை ஆப் செய்வதற்கு முன் தற்செயலாய் தன் சொந்தக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்று பார்ப்போம் என்று நினைத்தார். அதைப் பார்த்தவர் நேற்று இருந்த தொகையே இன்றும் இருப்பில் இருப்பதைப் பார்த்துத் திருப்திப் பட்டுக் கொண்டார். ஆனால் கொஞ்சம் கண்ணை உயர்த்தி இன்றைய நிகழ்வுகள் என்று இருக்கின்றதே என்ன என்று பார்த்தவர் அப்படியே இருக்கையில் சாய்ந்து விட்டார். அவர் மட்டும் நடுச் சாலையில் நடந்து செல்ல ஆயிரம் பேர் அவர் மேல் மிதித்துக் கொண்டு ஓடினால் எப்படி இருக்கும்? அதே உணர்வு அவருக்கு அப்போது ஏற்பட்டது.

அப்படி என்ன தான் நடந்தது?

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

**<u>நினைவு : 28</u>**

*நியூரான்கள் தான் மனித உடலில் அதிக காலம் வாழ்வதும், மிக வயதானதுமான செல்கள் ஆகும். குழந்தையாய் பிறந்த முதலாம் ஆண்டுக்குள் பிறந்து விடுகின்றது அல்லவா. இந்த முடிவுகள் எல்லாம் 1999 வரையே இருந்து வந்தது. 1999 ல் மூளையின் சில சிக்கலான இடங்களில் தேவைப்பட்டால் புது நியூரான்கள் பிறப்பதைக் கண்டறிந்துள்ளார்கள் விஞ்ஞானிகள். இந்த நியூரான்களைத் தேவையான இடங்களில் ஒட்டும் ஒட்டி (Glue) என்னும் பொருள் படும் படியான க்ளியால் செல்கள் மிகவும் முக்கியமானவை ஆகும்.*

அன்று கொஞ்சம் ஓவராகத் தான் போய் விட்டது. இரவு 11 மணி. அவங்க ரெண்டு பேரையும் போகச் சொல்லுப்பா. போலீஸ்காரங்க வந்து பாரை இன்னும் மூடலியான்னு வந்துருவாய்ங்க என்று சர்வரிடம் சொன்னார் முதலாளி. அவனும் வந்து இருவரையும் பார்த்தான். கதிர் தான் கொஞ்சம் தெளிவாய் இருப்பதாய்த் தோன்றியது. "சார் கடையைப் பூட்டனும் சார்" என்றான்.

கதிர் அவனைப் பார்த்து, "பூட்டிக்கோ." என்றான். மெல்ல தலையைச் சுற்றிப் பார்த்தான். வேறு யாருமே இல்லை அந்த 30 சதவீத வெளிச்சம் கொண்ட பாரில். "டேய் சந்தர். வாடா போலாம்." என்ற படி தள்ளாடி எழுந்தான். ஜெயச்சந்திரனையும் இழுத்தான். இருவரும் வெளியே வந்தனர் தள்ளாடிய படி.

அவர்கள் வாடகைக்கு இருந்த வீடு விநாயகர் கோவிலில் இருந்து 100 அடி இருக்கும். மெல்ல தள்ளாடிய படி நடக்க ஆரம்பித்தனர். அந்த போதையிலும் வீட்டுக்குள் சரியாகச் சென்று சரிந்தனர்.

மறுநாள் காலை, அனைவருக்கும் போலவே அவர்களுக்கும் விடிந்தது. 10 மணி அலுவலகத்துக்கு அவர்கள் எழும் போதே 9 ஆகியிருந்தது. மணியைப் பார்த்ததும் துள்ளிக் குதித்து 10 நிமிடத்தில் இருவரும் கிளம்பி 9.30 க்கெல்லாம் புதுமனிதர்களாக அவதாரம் எடுத்திருந்தனர் கதிரும் சந்தரும்.

மீண்டும் மாலை 6 மணிக்கு கதிர் முதல் ஆளாய் வந்து சேர்ந்திருந்தான். சந்தர் வந்து சேரும் போது மணி 7 ஆகியிருந்தது. இரவு உணவை கதிர் தான் சமைத்திருந்தான். இருவரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மணி 8. சாப்பிட்டுக் கொண்டே கதிர் கேட்டான். "என்ன சந்தர் ஒரு மாதிரி இருக்க? உடம்பு

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

சரியில்லையா? இன்னிக்கும் சுதி ஏத்திருவோமா?" என்றான்.

"ஆமாடா. உனக்கு எதுனாலும் உடனே சுதி தானா? எங்கிட்ட மட்டும் இருந்துச்சின்னா?" என்று பல்லைக் கடித்துக் கொண்டு நிறுத்தினான் சந்தர்.

"என்னடா ஆச்சு?" என்றான் கதிர்.

"இப்போ மட்டும் என்கிட்ட 1 கோடி ரூபா இருந்ததுன்னா போதும்." என்றான் சந்தர்.

"அச்சச்சோ. தமிழ்நாட்டுல லாட்டரிய நிறுத்தி மூனு வருசம் ஆச்சேடா. இல்லைன்னா டிக்கட் வாங்கியிருக்கலாம். அதான் லட்ச ரூபாயைத் தொட்ற அளவுக்கு சம்பளம் வாங்குறியே. உனக்கு எதுக்கு 1 கோடி?" என்றான் கதிர்.

"ஏண்டா எவ்வளவு சீரியஸாப் பேசிக்கிட்டு இருக்கேன். உனக்கு ஜோக்காத் தெரியுதா?" என்றான் சந்தர்.

"சரி சீரியஸாவே கேக்குறேன். உனக்கு எதுக்குடா 1 கோடி?" என்றான் கதிர்.

"எனக்கு சில இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாங்கனும். நியூரோஜெனிசிஸ் பத்தி நிறைய ஆராய்ச்சி செய்யனும்" என்றான் சந்தர்.

"ஆரம்பிச்சிட்டியா? ஏதோ வாய்க்குள்ள நுழையாத பேர? உனக்கு இதே வேலையாப் போச்சு. நீ வேலை பாக்குற கம்பெனியில ஆராய்ச்சி செய்ய வேண்டியது தானடா?" என்றான் கதிர்.

"இல்லைடா. இது கொஞ்சம் ரிஸ்க்கான ஆராய்ச்சி. சட்ட விரோதமும் கூட. அதான்." என்றான் சந்தர் கொஞ்சம் குரலைத் தாழ்த்தி.

"அப்படி என்னடா சட்ட விரோதம்?" என்ற கதிரை அழைத்துக் கொண்டு, அவர்களின் பிரத்யேக அறைக்குள் நுழைந்தான் சந்தர்.

உள்ளே...

(நினைவுகள் கழியும்)

# கொல்லத் தான் நினைக்கிறேன்.

**<u>நினைவு : 27</u>**

*மூளை செல்களில் க்ளியால் செல்களின் பங்கு மிக முக்கியமானது. க்ளியால் செல்கள் நியூரான் செல்களை ஒன்றையொன்று இணைப்பவையாக இருக்கின்றன. இவை எந்தத் தகவலையும் அனுப்புவதோ பெறுவதோ இல்லை. ஆனால் மூளையின் 90% செல்கள் க்ளியால் செல்களே ஆகும். அவற்றின் பணி தான் என்ன? இறந்து போகும் நியூரான்களைச் சாப்பிட்டு ஜீரணிப்பதும், நியூரான்களுக்குத் தேவையான மையிலீன் (myelin) என்னும் பொருளை உருவாக்குவதும் (மறு சுழற்சி முறை?) நியூரான்களைப் பாதுகாப்பதும் ஆகும்.*

சுரேஷ் பாண்டே அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தார். அவருக்குத் தரையே காலுக்குக் கீழ் நழுவுவது போல் தோன்றியது. அந்த சில்லென்ற ஏசியிலும் வியர்க்க ஆரம்பித்தது. கைகள் நடுக்கம் கண்டன. மீண்டும் ஒரு முறை தான் கண்டது சரி தானா என்று பார்க்கலானார்.

எத்தனை முறை பார்த்தாலும் உள்ளது தானே வரும்? ஏற்கனவே பார்த்தது உண்மை தான் என்று மீண்டும் வந்தது. ஆம். அவர் கணக்கில் நேற்று இரவு யாரோ எங்கிருந்தோ 1 கோடி ரூபாயை வரவு வைத்து அந்த ஒரு கோடி ரூபாயையும் உடனே ரொக்கமாக எடுத்துக் சென்றிருந்தனர்.

யார் செய்திருப்பார்கள்? எப்படிச் செய்ய முடியும்? என்ற பல கேள்விகள் ஒவ்வொன்றாய் அவருக்குள் முளைத்தது. வங்கியின் ஒவ்வொரு நடவடிக்கையும் மைய வழங்கியின் லாக்கில் (log) இருப்பதால் யாராயிருந்தாலும் கண்டு பிடிக்கலாம் என்ற எண்ணம் தோன்றினாலும், இதில் மாட்டியிருப்பது இவரது கணக்கு என்றதால் பயமும், தொகையின் அளவு தந்த பிரமிப்பும், கண்ணுக்கு முன்னே தெரிந்த அவரது எதிர்காலம் குறித்த கேள்விகளும் அவரை எந்த யோசனையும் செய்ய முடியாத அளவுக்கு வருத்தி எடுத்தன.

நிதானம் நிதானம் என்று பல முறை சொல்லிக் கொண்டாலும் அவரால் நிதானிக்க முடியவில்லை. முதலில் இத்தகவலை யாருக்குச் சொல்வது என்று கூட அவருக்குத் தோன்றவில்லை. கணினித் துறைக்கா? நிர்வாக இயக்குநருக்கா, காவல் துறைக்கா என்று சமைந்து போய் உட்கார்ந்தார்.

ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும். நேற்று ஏதோ நடந்திருக்கின்றது. இது மீண்டும்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

தொடர்ந்து விடக் கூடாது என்று அந்த நெருக்கடியான நேரத்திலும் எழுந்த முன்னெச்சரிக்கை உணர்வில் கணினித் துறைப் பொது மேலாளரை அவரே நேரில் சென்று பார்ப்பதென்று முடிவெடுத்தார். அவரது அறையில் இருந்து கிளம்பி இரண்டாவது தளத்தில் இருந்த கணினித் துறைக்குச் செல்லத் துவங்கினார். வழியிலேயே நிர்வாக இயக்குநருக்கும் செல்பேசியில் அழைப்பு விடுத்தார். சுருக்கமாக அவர் கண்ட விஷயத்தைச் சொன்னதும் அவரது மேலதிகாரியும் விக்கித்துப் போனார். மும்பை செல்ல வேண்டிக் கிளம்பிக் கொண்டிருந்த அவரும் பிரயாணத்தை உடனே ரத்து செய்து விட்டு உடனே கிளம்பி வருவதாகச் சொன்னார்.

அரை மணிநேரத்தில் அந்த அலுவலகத்தின் கணினிப் பிரிவு மொத்தமும் தகவல்களால் நிரம்ப ஆரம்பித்திருந்தது. உயர் மட்ட போலீஸுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டு டில்லி போலீஸின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆணையரே வந்து விட்டார். ஆணையர் நாயகமாய் அமர்ந்திருக்க, அவரருகே வங்கியின் நிர்வாக இயக்குநர், அவருக்கு வலப்பக்கம் சுரேஷ் பாண்டே, அவருக்கு எதிரே கணினித் துறைப் பொது மேலாளர் ஆகிய நால்வரும் ஓவல் வடிவ மேஜையில் அமர்ந்திருந்தனர். நிர்வாக இயக்குநர் தான் பேச ஆரம்பித்தார். "நீங்கள் முதலில் ஆசுவாசப் படுத்திக் கொள்ளுங்கள் சுரேஷ் பாண்டே. சீக்கிரமே குற்றவாளியைப் பிடித்து விடலாம்." என்றவர் காவல்துறை ஆணையரிடம் திரும்பினார். "சார், நீங்கள் தான் இந்தக் கேஸை ரகசியமாகவும், துரிதமாகவும் நடத்தி உடனடியாகக் குற்றவாளியைப் பிடிக்க வேண்டும்." என்றும் கெஞ்சும் குரலில் கேட்டார்.

ஆணையரும் தன் கரகர குரலில் ஆரம்பித்தார். "நீங்கள் வைத்திருக்கும் தகவல்களைப் பட்டியலிடுங்கள். அந்த பைலையும் எனக்குத் தாருங்கள்" என்றார்.

(நினைவுகள் கழியும்)

நினைவு : 26

*இது ஒரு நியூரான் செல்லின் படம்.*




*இதிலிருக்கும் இழைகள் பல நியூரான்களுடன் தொடர்பு கொண்டு இருக்கின்றன. இது மனித உடலில் இருக்கும் ஒரு மிகப் பெரிய பிணையம் என்று சொல்லலாம்.*

கதிரும் சந்தரும் நல்ல சம்பளத்துடன் வேலை பார்த்தாலும் வீட்டு வேலைக்குக் கூட யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. அவர்களே கவனித்துக் கொள்வார்கள். இந்த வீடு அமைந்தது அவர்களுக்கு ஒரு அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். வீட்டுக்குச் சொந்தக்காரர் துபாயில் இருக்கிறார். அவரது வங்கிக் கணக்கு எண்ணைக் கொடுத்திருக்கிறார். மாத மாதம் அந்தக் கணக்கில் பணம் செலுத்த வேண்டும் அவ்வளவே. வீட்டைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இவர்களுடையது.

வீட்டைச் சுற்றிலும் 10 அடி இடம் விட்டு விசாலமாக 4 அடி உயரத்தில் சுற்றுச் சுவரும் இருந்தது. பின்புறத்தில் இரண்டு தென்னை மரங்களும் இருந்தன. வீட்டுக்கு முன்பு மட்டும் மண் வீட்டுக்குள் வராமல் இருக்க சிமிண்டுக் கல் பதித்து இருந்தது. இருந்த போதும் சுற்றிலும் இருக்கும் செம்மண் வளமிக்கதாய் இருந்ததால் சில செடிகளும் முளைத்திருந்தன. இத்தனைக்கும் இவர்கள் உபயோகிக்கும் தண்ணீர்க் கழிவு மட்டுமே அந்தச் செடிகளுக்குப் பாய்ச்சப்படுவது போல் அமைக்கப்பட்டிருந்தது. இடம் தான் பெரிதே ஒழிய வீடு சின்னதாக இருந்தது. நுழைந்ததும் அழகு டிசைன் கிராதிகள் கொண்ட ஒரு சிறு வராந்தா. உள்ளே நுழைந்ததும் ஒரு ஹால். அதன்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

இருபுறமும் படுக்கை அறைகள். அதை அடுத்து வலதுபுறம் அடுப்பறையுடன் இணைந்த சாப்பிடும் அறை. இடது புறத்தில் நுழைந்தால் கொல்லைப்புறம் போகும் பாதை. அவ்வளவே. இரு அறைகளில் ஒன்றை மட்டுமே இருவரும் படுப்பதற்கு உபயோகித்தனர். அங்கிருந்த கட்டிலைக் கூட மடக்கி வைத்திருந்தனர். இருவருமே தரையில் படுக்கும் வழக்கம் கொண்டிருந்தனர்.

அதை எதிர்த்த இன்னொரு அறை தான் கொஞ்சம் விசாலமான அறை. அதில் கொல்லைப் புறம் போகும் பாதை மட்டும் இருந்ததால் கிட்டத்தட்ட ஹால் அளவுக்கே இருந்தது. அதில் தான் இப்போது உள்ளே நுழைந்தனர் கதிரும் சந்தரும். உள்ளே சுவரில் தலைக்கு மேல் ஒளிரும் குழல் விளக்கை ஒளிர விட்டான் கதிர். இருமுறை கண்சிமிட்டி வெள்ளை ஒளி பாய்ந்தது அறை முழுதும். உள்ளே இரு மேசைகள் இருந்தன. இரண்டிலும் தலா ஒரு கணினி இருந்தது. கதிரின் மேசை முழுதும் புத்தகங்கள். இடையில் கணினி ஒரு ஓரமாய் இடம் பிடித்திருந்தது. சந்தரின் மேசை சுத்தமாக இருந்தது. மற்ற படி அறை முழுதும் ஒரு நோட்டம் விட்டால், வீட்டிலேயே அந்த அறை தான் பிரம்மச்சாரிகள் அறை போல் தோன்றியது. எங்கு பார்த்தாலும் இருவரின் புத்தகங்களும் இரைந்து கிடந்தன.

உள்ளே கதிரை அழைத்துச் சென்ற சந்தர் அவனது கணினியைத் துவக்கினான். பக்கத்தில் ஒரு இருக்கையைப் போட்டு அமர்ந்தான் கதிர். கணினி முழுதும் துவங்கியதும் இணையத்திற்குள் சென்ற கதிர் ஒரு வலைத்தளத்தினை கதிருக்குக் காட்டினான். "இங்கே பார்டா கதிர், இப்போ வரைக்கும் மூளைக்கும் உடலுக்கும் தொடர்பான நியூரான் பத்தின ஆராய்ச்சில எலியோட நியூரான் பற்றித் தான் அதிகபட்சம் தெரிஞ்சிருக்கு. ஏன்னா அதுகிட்டத் தான் 100 மில்லியன் நியூரான் மட்டுமே இருக்கு. மனுசனுக்கு 100 பில்லியண்டா. அதைக் கண்டுபுடிக்க இப்போ தான் ஆராய்ச்சியில இறங்கிருக்காங்க. ஆனா என் உள்ளுணர்வு சொல்லுதுடா. நான் மூளையில ஒரு முக்கியமான பகுதில இருக்குற நியூரான் தொடர்பு பத்தி ஆராய்ச்சி செய்யனும். அதனால கிடைக்கப் போற பலனை நினைச்சா எனக்கு எவரெஸ்ட் சிகரத்துல நிக்குற உணர்வு வருதுடா." என்றான்.

கதிருக்கு அவன் சொல்வது எதுவும் புரியவில்லை. "டேய் நீ ஏதோ பெரிசா செய்ய நினைக்கிறேன்னு தோனுது. நீ தனியாளா இதச் செய்ய முடியாதுடா. கவர்ன்மெண்ட் துணையோட செய்யலாமே?" என்று கேட்ட கதிரை சந்தர் பார்த்த பார்வையில் பரிதாபம், கோபம், எரிச்சல் எல்லாம் கலந்திருந்தது.

"நான் என்ன சொல்ல வர்றேன்னே உனக்குப் புரியலடா. உள்ளுணர்வு

பத்தியெல்லாம் அறிவியலில் கவலையே கிடையாது. என்ன ப்ரூப் வைச்சிருக்கேன்னு தான் முதல் கேள்வியே இருக்கும்டா. தவிர மனித மூளை ஆராய்ச்சிக்கு இன்னும் சர்வதேச அளவுலேயே ஆரம்பகட்டத்தில் இருக்காங்க. நான் சொல்றது கிட்டத்தட்ட கடைசி நிலை. நான் சொல்ற உள்ளுணர்வு தவறாப் போச்சுன்னா எல்லாருக்கும் அவமானமாப் போயிரும். செலவழிச்சதெல்லாம் வேஸ்டாப் போயிரும்டா. ச்சே! நான் ஏன் இந்தப் பிரிவை எடுத்துப் படிச்சேன்னு எனக்கே என்னைப் பிடிக்கலைடா" என்றான் சந்தர்.

அவனை எப்படித் தேற்றுவது என்று யோசிக்க ஆரம்பித்தான் கதிர்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 25

*மனிதனின் அளப்பறிய ஆற்றல்களான மொழி, நினைவு, கற்றல், கற்பனை இவையனைத்திற்குமான வன்பொருள் (Hardware) ஆக விளங்குவது இந்த நியூரான்கள் தான். இந்த நியூரான்கள் அவற்றின் துருவங்களை வைத்து மூன்று வகைப்படும். அவை ஒருமுனைத் துருவ நியூரான். (Unipolar) இருமுனைத் துருவ நியூரான் (Bipolar), பலமுனைத் துருவ நியூரான் (Multipolar) ஆகும். ஒவ்வொன்றும் உடல், அறிவு நிலைகளில் ஒவ்வொரு விதமான செயல்களைச் செய்கின்றன.*

கணினித் துறைப் பொது மேலாளர் மெல்ல ஆரம்பித்தார். "இதோ உங்களுக்கும் ஒரு காப்பி இருக்கு சார்." என்ற படி தகவல்களை விளக்க ஆரம்பித்தார்.

1. லாக் எடுத்துப் பார்த்ததில் நேற்றிரவு சரியாக 12.08 மணிக்கு யாரோ சுரேஷ் பாண்டேயின் கடவுச்சொல்லைக் கொடுத்து உள்ளே நுழைந்திருக்கின்றார்கள். அது ஒரு பெர்பெக்ட் லாகின். அதாவது ஒரு முறை கூட தவறான கடவுச்சொல் கொடுத்ததாகத் தெரியவில்லை. எனவே குற்றவாளிக்கு சுரேஷ் பாண்டேவின் கடவுச்சொல் தெரிந்திருக்கின்றது. (இதைச் சொன்னவுடன் சுரேஷ் பாண்டேவின் அடிவயிற்றில் ஒரு பந்து எழுந்து அடங்கியது!)

2. குற்றவாளி உள்ளே நுழைந்த ஐபி எண் xxx.xx.xx.xxx . இது ஒரு அனானிமஸ் பிராக்ஸி சர்வரின் எண்ணாக இருக்கின்றது. இருந்தாலும் டிரேசிங் செய்து வருகின்றோம்.

3. உள்ளே நுழைந்ததும் அவன் தான் வைத்திருந்த ஒரு மென்பொருள் மாடூலையும் நிறுவி இருக்கின்றான். இதன் மூலம் எங்கள் வங்கியின் மென்பொருள் அமைப்பு பற்றியும் அவனுக்குத் தெரிந்திருப்பது நிரூபணம் ஆகின்றது. அந்த மாடூலை இப்போது தடை செய்து விட்டோம்.

4. அந்த மாடூல் மூலமாக அவன் செய்த வேலை என்னவென்றால், எங்களுடைய பல வங்கிக் கிளைகளிலும் இருக்கும் Inoperative Savings Bank அக்கவுண்டுகள் எனப்படும் யாருமே சீண்டாத முடக்கி வைக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகளில் இருந்து சுரேஷ் பாண்டேவின் கணக்குக்கு ஒரு கோடி ரூபாய் வருமாறு மாற்றி இருக்கின்றான். இத்தனைக்கும் இது போன்ற கணக்குகளில் நடவடிக்கை செய்வதற்கே முதலில் அந்தக் கிளை மேலாளரும், இன்னொரு அதிகாரியும் ஆதரைஸ் செய்ய வேண்டும். ஆனால்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

அவனது மென்பொருள் மூலம் அது தேவையில்லாதவாறு மாற்றி அமைத்து இருக்கின்றான்.

5. அடுத்ததாக நடந்தது தான் எங்களுக்கு இன்னும் புரிபடாமல் இருக்கின்றது. இதன் மூலம் குற்றவாளி நிச்சயம் ஒரு பெரிய நெட் வொர்க் வைத்திருப்பவன் என்று தெரியவருகின்றது. அவ்வாறு கணக்குக்கு மாற்றிய சில நிமிடங்களில் சரியாக நாட்டின் 400 ATM மையங்களிலிருந்து ஒரே நேரத்தில் சுரேஷ் பாண்டேவின் கணக்கிலிருந்து சரியான டெபிட் கார்டு போட்டு, சரியான பின் நம்பர் அளித்து ஒவ்வொரு ATM மையத்திலும் 25000 ரூபாய் எடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தனைக்கும் ஒரு கணக்கிலிருந்து ஒரு நாளைக்கு 25000 ரூபாய்க்கு மேல் எடுக்க முடியாத படி கணினியில் செட் செய்திருந்த செட்டிங்கையும் அவனது மென்பொருள் ஓவெர்லூப் செய்திருக்கின்றது.

அவர் சொல்லச் சொல்ல அனைவருமே யோசனையில் ஆழ்ந்தனர். இது மிகப் பெரிய ஒரு சூழ்ச்சி என்பது மட்டும் தெரியவந்தது.

ஆணையாளர், "நீங்க யூஸ் பண்றது நீங்களே தயாரிச்ச மென்பொருள் திட்டம் தானே?" என்றார்.

"இல்லை சார். நாங்க உபயோகிக்கிறது மார்க்கெட்ல இருக்குற ஜென்பேங்கிங் (GenBanking) அப்படீங்க்ற மென்பொருள். இதை நிறைய பேரு உபயோகிக்கிறாங்க. நாங்க எங்களுக்குத் தகுந்த மாதிரி கஸ்டமைஸ் செஞ்சிருக்கோம்." என்றார் கணினித் துறைப் பொது மேலாளர்.

"அப்போ இதே ரிஸ்க் இந்த மென்பொருள் யூஸ் செய்றவங்க எல்லாருக்கும் இருக்கலாம் அல்லவா?" என்று கேட்டார் ஆணையாளர்.

"நிச்சயமாக சார். இப்படி ஒரு மாடூல் இதில் சேர்க்க வேண்டுமென்றால் அந்த மென்பொருள் பற்றி முழுதும் அறிந்தவர்களாய்த் தான் இருக்கனும். அதுவும் மென்பொருளின் சோர்ஸ் கோட் தெரிஞ்சவங்களாத் தான் இருக்கனும்" என்றார் பொது மேலாளர்.

"உங்கள் கடவுச்சொல் என்ன?" என்று சுரேஷ் பாண்டேவைப் பார்த்து அடுத்த அதிரடிக் கேள்வியை வீசினார் ஆணையாளர்.

(நினைவுகள் கழியும்)

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 24

*மூளைச் சாவு என்பது சட்டப்படியான சாவின் வரையறை ஆகும். இந்த வரையறை இருதய மாற்று சிகிச்சைகள் போன்ற பல சிகிச்சைகளுக்கு உதவிகரமாய் இருக்கின்றது. தற்போதைய நவீன மருத்துவக் கருவிகள் மூலம் இருதயம், நுரையீரல் போன்ற சிக்கலான உடற்கூற்று இயந்திரங்களை நிற்காமல் ஓட வைக்கும் முயற்சிகள் வெற்றியடைந்திருக்கின்றன. இச்சூழ்நிலையில் ஒருவரின் இதயத்தை மற்றொருவருக்குப் பொருத்தவேண்டுமாயின் முன்னவர் இறந்திருக்க வேண்டும் அல்லவா? அதற்கான வரையறையே மூளைச்சாவு.*

*மூளைச்சாவு என்றால் என்ன? யாரை மூளைச்சாவு அடைந்தவர் என்று சொல்லலாம்?*

"நீ சொல்றதை நினைச்சா ஒரு பக்கம் பெருமையா இருக்கு. இன்னொரு பக்கம் பயமாவும் இருக்கு. இதுவரை இது மாதிரி ஆராய்ச்சி எங்கேயும் பண்ணவே இல்லையா? இந்தியாவில் இதுக்கு வசதியும் இல்லையா?" என்றான் கதிர்.

"அப்படி எல்லாம் இல்லை. ஹைதராபாத்ல கூட ஒரு பெரிய ரிசர்ச் செண்டர் இருக்கு. பெரிய ஆளுக எல்லாம் கூட அங்கே இருக்காங்க. ஆனால் அவங்க செய்றது எல்லாம் படிப்படியா ஏறுற மாதிரி. நான் செய்றது ஒரே தாவலா தாண்டுற மாதிரி. ஆனால் சரியாத் தாண்டிடலாம்னு நம்பிக்கை மட்டும் தான் இருக்கு." என்றான் சந்தர்.

"1 கோடிங்குறது பெரிய தொகையா இருக்கே?" என்றான் கதிர்.

"1 கோடி இந்த ப்ராஜெக்டைப் பொருத்த வரை ஒரு துவக்கம் தான். அதிநவீனக் கருவிகள் நிறைய வாங்கனும். முப்பரிமாண ஸ்டிமுலேசன் கம்ப்யூட்டர்கள், நேனோஸ்கோப் இப்படி நிறையத் தேவைப்படும்." என்றான் சந்தர்.

"நீ சொல்றதைப் பார்த்தா இத நீ ஒருத்தன் மட்டுமே முடிக்க முடியாது போல இருக்கே. உனக்குக் கீழ நிறைய பேரு சோதனைக்கு உதவுறதுக்கு வேணுமே" என்றான் கதிர்.

"வேண்டியதில்லை. இன்ஸ்ட்ருமெண்ட்ஸோட காஸ்ட் தான் அதிகம். மத்த படி எண்ணிக்கை குறைவு தான். நானே இருந்து இதையெல்லாம் பார்த்தாத் தான் எந்தத் தவறும் நிகழாம இருக்கும். அதுவும் போக இது ரகசியமாச் செய்ய வேண்டிய ஆராய்ச்சி. வெளியே தெரிஞ்சதுன்னா அவ்வளவு தான். நமக்குத் தேவை 4 வகையான

மூளைகள். ஒன்னு இப்போ வாழ்ந்துக்கிட்டு இருக்குறவரோடது. அவர் ஒத்துழைப்போட நாம் செய்யனும். அவருக்கு பாதகம் எதுவும் ஏற்படாது. அடுத்தது இப்போது தான் இறந்தவரோடது. இறந்து இரு நாட்களுக்குள் கிடைச்சா நல்லது. அடுத்தது மூளை மட்டும் உயிரோட இருக்குற ஒருத்தரோடது. இதாண்டா இருக்குறதுலேயே சிக்கலானது. சட்டப்படி மூளை இறந்தவங்க தான் இறந்தவங்க. இருதயம் துடிச்சிக்கிட்டு இருந்தாக் கூட மூளை இறந்து விட்டால் அப்புறம் அது வெறும் மிசின் தான் என்று சட்டம் சொல்கின்றது. ஆனா நமக்குத் தேவை இருதயம் துடித்து நின்று விட்டாலும், மூளை உயிருடன் இருப்பதான மூளை. அடுத்து ஒரு மனவளர்ச்சி குன்றியவரோட மூளை. அது உயிரோட இருந்தாலும் பரவாயில்லை. இல்லாட்டாலும் பரவாயில்ல" என்று ஏதோ மளிகைக்கடை லிஸ்ட் சொல்வது போல் சொல்லிக் கொண்டு சென்ற சந்தரைப் பார்த்து கதிருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை வார்த்தைகளில் அடக்க முடியாது.

அப்படியே மூச்சடைத்து விக்கித்து அமர்ந்து விட்டான். "நீ சொல்றதை எல்லாம் பார்த்தா, நீ கேட்ட ஒரு கோடி இப்போ ரொம்ப ஈசியாத் தோணுது" என்றான் பதிலுக்கு சுரத்தில்லாமல்.

ஆனால் சந்தரோ அதைத் தான் எதிர்பார்த்தவன் போல் படு வேகத்துடன், "எது எப்படி ஆனாலும் சரிடா, நீயும் என்னோட ஹெல்ப் பண்ணனும். இந்த ஆராய்ச்சியை நான் எப்படியும் நடத்தியே தீரணும். அப்போ பணம் புரட்றது ஈசின்னு சொல்றியா?" என்றான்.

கதிர் அவனை மீண்டும் பரிதாபமாய்ப் பார்த்தான். சந்தர் சொல்வதில் இருந்த ஆர்வம் அவனுக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. "இவ்வளவு ரிஸ்க் எடுத்துச் செய்ற இந்த ஆராய்ச்சியோட முடிவு நல்ல படியா முடிஞ்சதுன்னா என்னடா லாபம்?" என்றான் சந்தரைப் பார்த்து.

சந்தர் ரகசியமாக ஏதோ அவனிடம் சொன்னான். அதைக் கேட்டதும் கதிரின் முகத்தில் அந்த இருட்டையை கலங்கடிப்பது போல் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம். "உண்மையாவாடா சொல்ற? இந்த ஆராய்ச்சி செய்தா நீ சொல்ற மாதிரி நடக்க சாத்தியம் இருக்கா?" என்றான்.

"அதிலென்னடா சந்தேகம். அதனால தான் என்னோட வாழ்க்கையையே நான் இதுக்காகச் செலவிடத் தயாரா இருக்குறேன்னு சொல்றேன்." என்றான் சந்தர்.

"அப்படின்னா என்னோட பங்கு இதுல என்னான்னு எனக்கு விளக்கமாச்

சொல்லு" என்றான் கதிர்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 23

*மூளைக்கு அனுப்பப்படும் எலெக்ட்ரோகெமிக்கல் சமிக்ஞைகள் நியூரோன்களின் டெண்ட்ரைட்ஸ் (Dendrites) (முந்தைய படம் பார்க்கவும்)ல் துவங்குகின்றது. இந்த டெண்ட்ரைட்ஸ் மற்ற நியுரோன்களின் டெண்ட்ரைட்ஸினாலோ அல்லது ஏதேனும் தொடு உணர்ச்சியினாலோ செயலாற்ற ஆரம்பிக்கின்றது. இந்த சமிக்ஞை நியூரோனின் ஆக்சான் (Axon) (முந்தைய படம்) மூலமாக நியூரோனின் மற்றொரு முனையைச் சென்றடைகின்றது. இதன் மூலம் நூற்றுக்கணக்கான ஏன்? ஆயிரக்கணக்கான தொடர்புடைய நியூரோன்கள் மூலமாக தகவல் பரிமாற்றம் அடைகின்றது. சரி. அந்தப் பரிமாற்றத்தின் போது நிகழ்வது தான் என்ன?*

ஆணையாளர் மீண்டும் சுரேஷ் பாண்டேவைக் கேட்டார். "உங்க பாஸ்வேர்டைச் சொல்லுங்க."

சுரேஷ் பாண்டே எம்.டி.யையும் ஜி.எம். (ஐ.டி) யையும் பார்த்தார். அவர்கள் சொல்லுங்கள் என்று கண்களாலேயே சம்மதம் தெரிவித்தனர். Eig7791asH என்று எழுதிக் கொடுத்தார்.

"உங்கள் பாஸ்வேர்டை என்ன கால இடைவெளியில் மாற்றுகின்றீர்கள்?" என்றார் ஆணையர்.

இதற்கு ஜி.எம். (ஐ.டி.) பதில் சொன்னார். "சரியாக ஒவ்வொரு மாதமும் 1ம் தேதியும் 15ம் தேதியும் சிஸ்டம் பாஸ்வேர்டை ரீசெட் செய்துவிடும். அன்றைக்கோ, அல்லது மறுமுறை லாகின் செய்யும் போதோ பழைய பாஸ்வேர்டு கொடுத்து புது பாஸ்வேர்டும் கொடுக்க வேண்டும்.

புது பாஸ்வேர்டு இது வரை கொடுக்காததாய் இருக்க வேண்டும்.
எண்கள் இருக்க வேண்டும்.
கேபிடல் லெட்டர் ஸ்மால் லெட்டர் இருக்க வேண்டும்.
குறைந்த பட்சம் 8 எழுத்துக்களாவது இருக்க வேண்டும்.

இதெல்லாம் எங்கள் பாஸ்வேர்டு விதிகள் சார். மேலும் எங்கள் பாஸ்வேர்டுகள் ப்ளைன் டெக்ஸ்டாக அப்படியே சேமிக்கப் படுவதில்லை. 128 பிட் என்கிரிப்ஷனோடு தான் சேமிக்கப்படுகின்றன. சரியான பாஸ்வேர்டு மூன்று முறையில் கொடுக்காவிட்டாலும் பாஸ்வேர்டு ரீசெட் ஆகிவிடும். இந்த முறை மேலதிகாரியின்

துணையுடன் மட்டுமே பாஸ்வேர்டு மாற்ற முடியும்." என்று உபரி தகவல்களையும் தந்தார்.

"அப்போ இன்னைக்குத் தேதி 17 ஆகுது. அதனால நீங்க புதிய பாஸ்வேர்டுக்கு மாற்றி 2 நாட்கள் தான் முடிஞ்சிருக்கு. அப்படித் தானே?" என்றார் ஆணையர்.

"யெஸ் சார்." என்றார் பரிதாபமாக சுரேஷ்.

"இந்த பாஸ்வேர்டை எப்படி ஞாபகம் வச்சிக்கிறீங்க? எதிலாவது எழுதி வைத்திருக்கீங்களா?" என்றார் ஆணையர்.

"இல்லை சார். நான் ஏதாவது விஷயத்தை லிங்க் பண்ணி வச்சிப்பேன். இந்த பாஸ்வேர்டைப் பொருத்த வரை 'கார்-திருமணம்-மகள்' என்று ஞாபகம் வைத்திருக்கின்றேன். என் காரின் முதல் எண் 8. அதனால் முதல் மூன்றெழுத்து Eig என்றும், என் திருமண ஆண்டான 1977 ஐத் தலைகீழாய் 7791 என்றும், மகளின் பெயரான ஆஷாவில் asH என்றும் மொத்தத்தில் முதலெழுத்தும் கடைசி எழுத்தும் கேப்பிடல் எழுத்துக்களாகவும் தேர்ந்தெடுத்தேன். எனவே நான் எதிலுமே எழுதி வைக்கவில்லை சார். மேலும் இது போல் தான் நான் மனதிற்குள்ளேயே குறித்து வைத்துக் கொள்வது வழக்கம்." என்றார் சுரேஷ் பாண்டே.

கேஸ் மீண்டும் மீண்டும் சிக்கலாகிக் கொண்டே போவது போல் தோன்றியது கமிஷனருக்கு. அப்போது தான் "எக்ஸ்க்யூஸ் மீ" என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் ஒருவர்.

அவரை நாம் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 22




*நியூரான் நரம்புகள் தகவல்களைச் செலுத்தும் விதம்.*

இரவு வெகுநேரமானதால் கதிரும் சந்தரும் படுக்கைக்குச் சென்றனர். சந்தரின் ஆராய்ச்சி குறித்த எண்ணங்களால் கதிருக்கு உறக்கமே வரவில்லை. தான் இதில் ஈடுபடுவதால் தனக்குக் கிடைக்கும் சாதக பாதகங்களைப் பற்றி அலசினான். சந்தரைப் பற்றி இந்த ஆறு மாதத்தில் நன்றாகவே புரிந்து வைத்திருந்தான் கதிர். எதிலும் ஒரு ஒழுங்கைக் கடைபிடிப்பவன் சந்தர். ரொம்ப அமைதியானவன். தேவையில்லாமல் எந்தப் பிரச்னையிலும் தலையைக் கொடுக்க மாட்டான். பெரிய படிப்பாளி. திறமைசாலியும் கூட. அப்படிப்பட்டவன் இத்தனை உறுதியாய்ச் சொல்கின்றான் என்றால் அவனுக்கு நிச்சயம் தன்னாலான உதவியைச் செய்து கொடுக்கவேண்டும். மேலும் இந்த ஆராய்ச்சியின் பலன் என்ன கிடைக்கும் என்று அவன் சொன்னதைக் கேட்டதில் இருந்து கதிருக்கும் மனம் நிலை கொள்ளவில்லை. சந்தர் சொல்லும் ஆராய்ச்சிக்கு 1 கோடி என்ன எத்தனை கோடி வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். 1 கோடியைப் புரட்டுவது எப்படி என்ற நினைவிலேயே தூங்கியும் போனான்.

மறுநாள் கதிர் கண்விழித்துப் பார்த்த போது எட்டு மணிச் சூரியன் சன்னலைத் துளைத்து இவன் மேல் வெப்பத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். சந்தர் ஏற்கனவே எழுந்திருந்தான். நேற்று பேசியது அனைத்தும் கனவோ என்று நினைக்கும் படியாக வேலைக்கு வேகமாய்க் கிளம்பிக் கொண்டிருந்தான். கதிர் விழித்ததைப் பார்த்ததும்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

"என்னடா லேட்டாயிருச்சே. கிளம்பலியா?" என்று தான் சந்தர் கேட்டான். கதிருக்கும் வேலைக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. அவனும் கிளம்ப ஆரம்பித்தான். அலுவலகத்திலும் கதிருக்கும் சந்தருக்கும் வேலையே ஓடவில்லை. இதே நினைவாகவே இருந்தது. இருவருக்குமே வேலை முடிந்து எப்போது திரும்ப வருவோம். ஆராய்ச்சித் திட்டம் பற்றி அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி அலச வேண்டும் என்ற அவசரத்தில் இருந்தார்கள்.

வழக்கமாய் சனிக்கிழமை மாலை இருவருக்கும் உல்லாசபுரிக்கான திறவுகோல். அன்று வீட்டுக்கு வர எப்படியும் நடுநிசியைத் தாண்டி விடும். இருவரும் வழக்கமான பாரை விடுத்து வேறு ஏதேனும் பாருக்குச் செல்வார்கள். அன்று மட்டும் மறுநாள் விடுமுறை என்பதால் கணக்கே கிடையாது. ஆனால் இன்றும் சனிக்கிழமை தான். எந்த பாருக்கும் செல்லவில்லை. மாலை 7 மணிக்கெல்லாம் அவர்களின் ஆலோசனை ஆரம்பித்து விட்டது.

"நான் உன் ப்ராஜெக்டுக்கு ஹெல்ப் பண்றதுன்னு முடிவு பண்ணிட்டேன்." என்றான் கதிர்.

"தேங்க்ஸ்டா. நான் உங்கிட்ட மட்டும் தான் இதச் சொல்லிருக்கேன். வேற யாருக்கும் ஏன் எங்கப்பாக்குக் கூடத் தெரியாது. நீ கேட்டவுடனேயே ஒத்துக்கிட்டது ரொம்பச் சந்தோசமா இருக்கு. அதுவே பாதி ப்ராஜெக்ட் முடிச்ச மாதிரி இருக்கு." என்றான் சந்தர்.

"சரி. அதெல்லாம் இருக்கட்டும். இந்த வீடு லேபுக்குச் சரியா இருக்குமா?" என்றான் கதிர்.

அவன் கேட்டதும் வெடுக்கென்று சிரித்து விட்டான் சந்தர். "நாம செய்றது என்ன பள்ளிக்கூடத்துல படிக்கிற இயற்பியல் சோதனைன்னு நினைச்சியா? மனித மூளை பற்றிய நேரடி சோதனை. அதுக்கு இந்த வீட்டில் வச்சு எதுவும் செய்ய முடியாது. ரொம்ப ஹை டெக்கான ரிசர்ச் செண்டர் வேணும்டா. தேர்ட் லெவல் எண்ட்ரி ரெஸ்ட்ரிக்ஷனோட லேப் வேணும். அதாவது சோதனை நடக்கும் லேபுக்குப் போறதுக்குன்னு பிரத்யேக டிரஸ் உண்டு. கம்ப்ளீட் செண்ட்ரலைஸ்டு ஏ.சி. வேணும். கோர் லேப் க்ளஸ்டர்ல 16 டிகிரி செல்சியஸை விட அதிக வெப்பம் கூடவே கூடாது. அவுட்சைடு அட்மாஸ்பியரோட தாக்கம் எக்காரணம் கொண்டும் உள்ளே இருக்கக் கூடாது." என்று அடுக்கிக் கொண்டே போனான் சந்தர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"இதுக்கெல்லாம் இடத்துக்கு எங்கேடா போறது. அது கூட செஞ்சிடலாம். ஆனா ரகசியமாச் செய்றது தாண்டா ரொம்பக் கஷ்டம். யாருக்கும் தெரியாம இத்தனை பெரிய ரிசர்ச் செண்டரை எப்படி நம்ம ரெண்டு பேரு மட்டும் மெய்ண்டெயின் பண்ண முடியும்? இதெல்லாம் சாத்தியமா?" என்றான் கவலையுடன் கதிர்.

"அதுக்குத் தாண்டா நான் ஒரு யோசனை வச்சிருக்கேன். நாளைக்கு சென்னையிலேயே ஒரு நொடிச்சுப் போன லேபைப் பார்க்கப் போறோம். இடத்தை மட்டும் வாடகைக்குப் புடிக்கப் போறோம். தேவையான இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் கொஞ்சம் கொஞ்சமா உள்ள கொண்டு போகனும். வெளியே பார்த்தா ஏதோ ஒரு சாதாரண லேப் போலத் தான் இருக்கும். போக, நமக்குன்னு கஸ்டமர் யாரும் வரப்போறதில்ல. நாம போய் டாக்டர்ஸ் கிட்ட இந்த மாதிரி ஒரு லேப் திறந்திருக்கோம்னு சொன்னாலே தவிர யாரும் நம்மை ரெகமண்ட் செய்யப் போறதில்ல. அதனால அந்தப் பிரச்னை கிடையாது." என்றான் சந்தர்.

கதிரின் வேகமான மூளை வேலை செய்ய ஆரம்பித்திருந்தது.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 21

*முந்தைய படத்தைப் பார்த்திருப்பீர்கள். அதில் தகவலை வழிநடத்துவதில் நியூரானின் தோல்பகுதி மிக மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது என்பதைக் கண்டிருப்பீர்கள். உண்மை தான் நியூரான் செல்லின் தோலும் போஸ்போலிபிட் பைலேயர் (Phospolipid Bilayer) என்ற பெயருடன் வழங்கப்படும் மற்ற செல்களின் தோல் போன்றதே. இதில் பைலேயர் என்பது இரண்டு அடுக்குகள் என்று பொருள் படும். நியூரான் செல் தோலின் இந்த அடுக்குகளின் ஊடே தான் தகவல்கள் மின்வேதியியல் முறைப்படி கடத்தப்படுகின்றன. இது ஒரு சாண்ட்விச் ரொட்டித் துண்டைப் போன்றதாகும். படத்தைப் பாருங்கள் இதோ!*




"அடடே வாங்க." என்ற கமிசனரைப் பார்த்து விறைப்புடன் ஒரு சல்யூட் வைத்தார் வந்தவர். அந்த சல்யூட்டையும், விறைப்பையும், தோரணையையும் பார்த்ததுமே அவரும் ஒரு போலீஸ்காரர் தான் என்பது பார்த்தவுடன் தெரிந்தது. ஆனால் அவர் யுனிபார்மில் வரவில்லை. ஆங்காங்கே சிறு சிறு ஊதாப் புள்ளிகள் கொண்ட இன் பண்ணாத வெள்ளை அரைக்கைச் சட்டையும், ஊதா நிற ஜீன்சும் போட்டிருந்தார். இத்தனைக்கும் பிறகும் அவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்காவிட்டால் எப்படி? அவர் சங்கர். படு குழப்பமான கேஸ்கள் மட்டுமே பார்க்கும் வழக்கம் கொண்டிருக்கும் காவல் துறை அதிகாரி. சென்னை பூரணம் கூடு விட்டுக் கூடு பாயும் கேஸில் காவல்துறைக்குள் பிரபலமானவர். அவரது சாதனைகள் எதுவுமே பத்திரிகைக்கோ வெளி உலகுக்கோ தெரியவராத போதும் அதைப் பற்றிக் கவலைப்படாதவர். இப்போது டில்லிக்கு ஒரு பயிற்சிக்காக வந்திருந்தார்.

அங்கிருந்த வங்கி அதிகாரிகளுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார் சங்கர். "இந்த நேரத்துல நீங்களும் இங்கே இருக்குறது எங்களுக்கு நல்லதாப் போச்சு.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

உங்களுக்கு என்ன ஹெல்ப் வேணும்னாலும் டிபார்ட்மெண்டில் செய்து தரச் சொல்றேன். நீங்க இந்தக் கேஸை எடுத்துக்க முடியுமா? இது கொஞ்சம் சிக்கலான, உடனே தீர்க்கப்படவேண்டிய படுரகசியமான கேஸ்" என்றார் கமிஷனர்.

தனது கண்ணசைவினால் மொத்தத்தையும் ஏற்றுக் கொண்ட சங்கர், "தேங்க்யூ சார். என்னால் முடிஞ்சதைச் செய்றேன்." என்றார். இது வரை தான் விசாரித்ததைப் பற்றி விளக்கமாய்ச் சொன்னார் கமிஷனர். அத்தனை விபரங்களையும் கவனத்துடன் கேட்டுக் கொண்டார் சங்கர்.

மெல்ல கணினித் துறை ஜி.எம். பக்கம் திரும்பியவர், "எனக்கு இன்னும் கொஞ்சம் இன்பர்மேஷன் வேணும். மொத்தம் 400 ஏ.டி.எம்.களில் இருந்து பணம் ஒரே நேரத்தில் எப்படி எடுக்க முடியும்?" என்றார்.

"மே பி சுரேஷ் பாண்டேவோட ஏ.டி.எம். டெபிட் கார்டை அப்படியே டுப்ளிகேட் செய்திருக்க வாய்ப்பிருக்கு சார்." என்றார் ஜி.எம்.

"உங்க டெபிட் கார்டையும் ரகசிய பின் எண்ணையும் கொடுங்க மிஸ்டர் சுரேஷ்." என்றார் சங்கர்.

மெல்ல எடுத்துக் கொடுத்த சுரேஷ் பாண்டே மிகத் தளர்ச்சியாய்க் காணப்பட்டார். அவரிடம் தற்போது அதிகம் பேசிப் பலனில்லை என்று உணர்ந்த சங்கர், "நீங்க ரொம்ப ரெஸ்ட்லெஸா இருக்கீங்க. நீங்க வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்க. நான் நாளை உங்களை வீட்லயே வந்து பார்க்கின்றேன்." என்றார். சுரேஷ் பாண்டேவும் விட்டால் போதுமென்று வீட்டுக்குக் கிளம்பினார்.

அவர் சென்றதும், கமிஷனரும் கிளம்பினார். அவரை வழியனுப்பி வைத்து விட்டு மீண்டும் ஜி.எம்.மிடம் தன் விசாரணையைத் துவங்கினார் சங்கர்.

"மிஸ்டர் சுரேஷ் மேல சந்தேகப் படறதுக்கான காரணங்கள் எதுவும் இருக்கின்றது என்று நினைக்கின்றீர்களா?" என்றார் ஜி.எம். மற்றும் எம்.டி.யிடம் பொதுவாய்.

இருவரும் சிறிது நேரம் அமைதியாய் இருந்தனர். எம்.டி. தான் பேசினார். "இது வரை மிஸ்டர் க்ளீனாத் தான் இருந்திருக்கார் சுரேஷ். அவர் மேல எங்களுக்குச் சந்தேகம் வரல." என்றார்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"நீங்க என்ன சொன்னாலும் என்னோட ப்ரைம் டார்கெட் சுரேஷ் பாண்டே தான். சரி எனக்கு அந்த 400 ஏ.டி.எம்களின் அட்ரெஸ், எந்தெந்த சேவிங்ஸ் அக்கவுண்டிலிருந்து எவ்வளவு ரூபாய் சுரேஷ் கணக்கில் மாற்றப்பட்டது. போன்ற தகவல்கள் கிடைக்குமா?" என்றார்.

"இன்னும் பத்தே நிமிடத்தில் கிடைக்க ஏற்பாடு செய்றோம் சார்." என்றார் ஜி.எம்.

பதினைந்து நிமிடங்கள் ஆகியிருந்தது. சங்கர் அதற்குள் ஒரு முறை சுரேஷ் பாண்டேவின் அறையை ஒரு நோட்டம் விட்டு வந்திருந்தார்.

இரண்டு சிறு போல்டர்களில் சில காகிதங்களில் அவர் கேட்டிருந்த தகவல்கள் வந்திருந்தது. அவற்றைப் பார்த்ததும் சங்கரின் முகத்தில் சிறு புன்முறுவல் வந்து உட்கார்ந்தது.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 20

*இந்த அசைபடத்தைக் கூர்ந்து கவனித்தால் செல்களின் தோல்களினூடே புரோட்டீன் கடந்து செல்லும் வழியைக் காணலாம்.*






*இப்படிப் பெற்று அதை இப்படி வெளியே விடுகின்றது!*



ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

மறுநாள் ஞாயிறன்று காலை 8 மணி. இனி தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் ஆராய்ச்சியைத் தாமதப் படுத்தும் என்பதால் சீக்கிரமே தயாராகினர் இருவரும். 9 மணிக்கெல்லாம் ஒரு தரகர் வருவதாய்ச் சொன்னார். அவருக்காக ஒரு மணி நேரத்திற்கு முன்பே காத்திருக்க ஆரம்பித்தனர் இருவரும்.

"பணத்துக்கு என்னடா செஞ்சிருக்க?" என்றான் சந்தர்.

"நிறைய பேரு பணத்தைப் போட்டுட்டு என்ன செய்றதுன்னு தெரியாம இருக்கானுங்க. நம்ம பசங்க 400 பேரைத் தேர்ந்தெடுத்திருக்கேன். 400 x 25000 ம்னு ஒரு ஸ்கீம் ஒன்னு வச்சிருக்கேன். அது மட்டும் ஒர்க் அவுட் ஆயிருச்சின்னா நீ கேட்ட பணம் ரெடி." என்றான் கதிர் ஏதோ திட்டத்துடன்.

"அட! கண்கட்டு வித்தை மாதிரி இருக்கே? எப்படின்னு எனக்கும் சொல்லேன்" என்றான் சந்தர்.

"எப்படி வருதுங்குறது முக்கியமில்லை. வருதாங்குறது தான் முக்கியம். இப்போ நீ கூடத் தான் சொல்ற. ஆராய்ச்சி பத்தி. நான் விலாவாரியா கேக்குறேனா? உன் மேல நம்பிக்கை வச்சிருக்கேன்ல. அது மாதிரி நீயும் என் மேல நம்பிக்கை வையி. கேள்வி மேல கேள்வி கேக்குற வழக்கத்தை விடு. உன் ஆராய்ச்சில அதெல்லாம் வச்சிக்கோ. சரியா?" என்றான் கதிர் வெடுக்கென்று.

"அதுவும் சரி தாண்டா. இன்னைக்குச் சாயங்காலம் நெட்ல இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ் லிஸ்ட் படி நான் கேட்ட கொட்டேசனுக்கு எல்லாம் வந்த மெயில் அவ்வளவும் பார்த்து எது எது எங்கே வாங்கனும். எப்படி பணம் அனுப்புறதுன்னு எல்லாம் கம்பேர் செஞ்சு பார்க்கனும். வேலையை விட்டுடலாம்னு பார்க்குறேன்." என்றான் சந்தர்.

"வேண்டாம். வேலையை விட வேண்டாம். அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதையா ஆவக் கூடாது." என்றான்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே தரகர் வந்து விட்டார். சரியென்று அவருடன் கிளம்பினார்கள். அவர் டி.வி.எஸ். 50 லும் இவர்கள் கதிரின் பைக்கிலும் கிளம்பினார்கள். சென்னை வண்ணார் பேட்டைக்குச் சென்றது வண்டி. கிட்டத்தட்ட 20 கி.மீ.க்கு மேல் இருக்கும் இவர்களது வீட்டிலிருந்து. பூட்டப்பட்டிருந்த ஒரு லேப் முன்னால் வண்டி நின்றது. தரகரை நம்பிச் சாவியைக் கொடுத்திருந்தார்கள் போலும். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர்.

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

விசாலமாகவே இருந்தது லேப். சந்தடி மிக்க சாலையில் இல்லாமல் கொஞ்சம் ஒதுக்குப் புறமாய் இருந்தது அந்தக் கட்டிடம். இது போதுமா என்ற கேள்வியுடன் சந்தரைப் பார்த்தான் கதிர். கண்களால் ஆமோதித்தான் சந்தர். ஒரு ரிசப்ஷன் மேஜை, வந்தவர்கள் உட்கார சில பெஞ்ச்சுகள், மறைவில் இருப்பது போல் இரண்டு அறைகள் தற்காலிகமாக பிரிக்கப்பட்டிருந்தன. மற்ற படி எந்த வசதியும் இல்லாமல் இருந்தது.

தரகரைப் பார்த்து, "இது லேப் வைக்கிறதுக்கான இடம் போலவே தெரியலயே. ஒரு ப்ரொவிஷனும் இல்ல. எல்லாமே நாங்களே தான் வாங்கனும் போல. நிறைய ஆல்ட்ரேஷன் செய்யனுமே. அதுக்கெல்லாம் இடத்துக்காரரு சம்மதிப்பாரா? வாடகை எவ்ளோ சொன்னீங்க?" என்றான் கதிர்.

"ஐயா, இந்த இடத்துக்குப் பக்கத்துல ஒரு பேமஸ் டாக்டர் இருந்தாரு. அவர் இருந்தவரை இந்த லேப் கன்னா பின்னான்னு ஓடுச்சி. அவரு திடீர்னு ஒரு ஆக்சிடெண்ட்ல போய்ச் சேர்ந்துட்டாரு. இந்த இடத்து மேலயும் சனிபார்வை விழுந்திருச்சி. அநேகமா இந்த இடம் உங்களுக்கு வாடகைக்குக் கிடைக்காதுன்னு நினைக்கிறேன்." என்றார் தரகர்.

"என்ன தரகரே முத முதல்ல ஒரு இடத்துக்குக் கூட்டியாந்துட்டு இது கிடைக்காதுன்னா அப்புறம் எதுக்குக் கூட்டி வந்தீங்க?" என்றான் கதிர் எரிச்சலுடன்.

"முழுசா பேச விடுங்க தம்பி. இதை வாடகைக்கு விட முடியாது. இதை அப்படியே விலைக்கு எடுத்துக்கோங்க. அவங்க விக்கலாம்னு முடிவோட இருக்காங்கன்னு சொல்றேன். ஒரு 30 லட்ச ரூபா இருந்தா சொல்லுங்க. இந்த இடத்தையே முடிச்சிடலாம். நானும் லேப் லேப்னு தேடிப் பார்த்தேன் இது ஒன்னு தான் சிக்குச்சி. இப்போ இந்தத் தொழில் அமோகமா நடக்குதுல்ல. அதான் சொல்றேன். இந்த ஏரியாவுல ஒரு லேபும் இல்ல. உங்களுக்கு நேரம் நல்லாருந்ததுன்னா சும்மா பிச்சிக்கிட்டு ஓடும்ல." என்றார் தரகர்.

"என்னது? விலைக்கா? அதுவும் முப்பது லட்சமா?" என்று வியப்புடன் கேட்ட சந்தரைக் கதிர் பார்த்த பார்வையில் பல அர்த்தங்கள் இருந்தன.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 19

*நரம்புகளில் ஓடும் ரத்தத்தில் கலந்திருக்கும் பல்வேறு மாசுகள் நியூரான்களைத் தாக்க வாய்ப்பிருக்கின்றது. இதிலிருந்து தப்பிப்பதற்காக மூளையையும் ரத்ததையும் பிரிக்கும் வகையில் ஒரு தடுப்புச் சுவர் இருக்கின்றது. அது தான் மூளை கேப்பில்லரி செல்கள் ஆகும். இவை blood-brain barrier (BBB) என்று அழைக்கப் படுகின்றன. இவை எண்டோதிலியல் செல்கள் எனப்படும் ஒரு காகிதம் போன்ற பிணைப்பால் இயங்குகின்றன. இதை நிரூபிக்க மருத்துவ விஞ்ஞானிகள் ஒரு எளிய வழியைத் தேர்ந்தெடுத்தனர்.*

அந்த ரிப்போர்ட்டை ஆழமாகப் பார்த்த சங்கர், "எனக்கிருக்கும் இரு முக்கியமான சந்தேகங்கள் என்னவென்றால் 1. ஏன் எந்த ஒரு சேமிப்புக் கணக்கிலிருந்தும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் எடுக்கப்படவில்லை? 2. ஏன் ஒரு கோடிக்கும் மேல் கொள்ளையடிக்க அவர்களுக்கு வாய்ப்பிருந்தும் கொள்ளையடிக்கவில்லை? என்பது தான்" என்றார். "இன்னும் ஒன்னு..." என்ற படி ஆரம்பித்தவர், "சரி. இருக்கட்டும்" என்று தலையைக் குலுக்கிக் கொண்டார்.

அவர்களிடம் அதன் பின் அதிகம் பேசிக் கொள்ளவில்லை சங்கர். ரிப்போர்ட்டுகளை வாங்கிக் கொண்டு உடனே கிளம்பி விட்டார். மள மளவென்று பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அந்த மென்பொருள் உபயோகிக்கும் அனைத்து வங்கிகளும் உடனே எச்சரிக்கப்பட்டன. அநாமதேய ப்ராக்ஸி வழங்கிகள் மூலம் எந்த இணைப்பு வந்தாலும் உடனடியாக அனைத்து செயல்பாடுகளும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்றும், அத்தகைய இணைப்புக்கள் நிர்வாகப் பகுதிக்குள் நுழைய முடியாவண்ணம் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஏ.டி.எம்களில் சந்தேகப்படும் படியாக யார் நடமாடினாலும் தகவல் தருமாறு அனைத்து ஏ.டி.எம். காவலர்களும் எச்சரிக்கப் பட்டனர்.

அடுத்து ஜென்பேங்கிங் மென்பொருள் உருவாக்கியவர்களின் தலைமையகத்தை விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். விசாரித்ததில் அதன் தலைமையகம் சென்னையில் இருப்பதாய்க் கேள்விப்பட்டவுடன் வேலை கொஞ்சம் எளிதாகிவிட்டதே என்று எண்ணிக் கொண்டார்.

அடுத்து அவர் சென்றது காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்கு. நேராக

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

ஆணையர் முன் நின்று விறைப்பாக ஒரு சல்யூட் வைத்து விட்டு நின்றார்.

"உட்காருங்க சங்கர்." என்று ஆணையர் சொன்னதும் மெல்ல அமர்ந்தார் சங்கர்.

"மேலிடத்திலிருந்து டார்ச்சர் ஆரம்பிச்சாச்சு. ரிசர்வ் பேங்குக்குத் தகவல் போயாச்சு. அவங்க உடனடியா ஆக்சன் எடுக்கனும் இல்லைன்னா வங்கியின் நம்பகத் தன்மை போயிரும். கணக்கு வச்சிருக்குறவங்க எல்லாரும் இப்பவே எங்க பணம் வேணும்னு கேக்க ஆரம்பிச்சா நாட்டின் வங்கிப் பணிகள் அத்தனையும் முடங்கிப் போயிரும்னு பயப்பட்றாங்க. அதனால தகவல் இன்னும் ரகசியமாத் தான் இருக்கு. நமக்கு மிகக் குறுகிய அவகாசம் தான் இருக்கு. இப்போ கேஸ்ல என்ன டெவலப் மெண்ட் இருக்கு?" என்றார் ஆணையர்.

"சார் சில க்ளூஸ் கிடைச்சிருக்கு. உதாரணமா 400 ஏ.டி. எம்.ல இருந்து பணம் எடுத்திருக்காங்க. ஒரு ஒற்றுமை பார்த்தா, அத்தனை ஏ.டி. எம். களும் பெங்களூரைச் சுற்றித் தான் இருக்கு. அப்புறம் சுரேஷ் பாண்டேவின் பாஸ்வேர்டு. அதற்கடுத்து சாப்ட்வேர் மாட்யூல் பிரச்னை. இந்த முக்கோணப் பிரச்னையின் ஆணி வேர் எங்கேன்னு பார்க்கனும். ஒரு பக்கம் 400 பேர் கொண்ட ஒரு குழு. இன்னொரு பக்கம் சுரேஷ் பாண்டேவின் பாஸ்வேர்டு தெரிந்த ஒரு நபர். அவர் சுரேஷ் பாண்டேவாவும் இருக்கலாம். இன்னொரு பக்கம் சாப்ட்வேர் மாட்யூல் எழுதினவங்க."

"நான் இப்பவே சுரேஷைப் பார்த்துட்டு, அப்புறம் பெங்களூர் போய் அப்போது டியூட்டியில் இருந்த எல்லா ஏ.டி.எம். காவலர்களையும் வைத்து ஒரு மீட்டிங் போட்டுட்டு, அடுத்து சென்னையில் அந்த சாப்ட்வேர் கம்பெனிகாரங்களையும் விசாரிக்கனும்னு நினைக்கிறேன் சார். ஷேல் ஐ ப்ரோசீட்?" என்றார்.

ஆணையர் தலையை ஆட்டிக் கொண்டே, "ஐ.சி. ப்ளீஸ் ப்ரோசீட் மிஸ்டர் சங்கர். என்ன உதவின்னாலும் என்னைக் கேளுங்க" என்றார்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 18

*விஞ்ஞானிகள் கேடில்லாத நீல நிறச் சாயத்தை ஒருவரின் ரத்தத்தில் கலந்தனர். அந்தச் சாயம் எங்கெல்லாம் படர்கின்றது என்று பார்த்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியம் கொடுக்கும் வகையில் உடலின் எல்லாப் பாகங்களிலும் நீல நிறம் படிந்தது. முதுகுத் தண்டிலும் படிந்தது. ஆனால் மூளை மட்டும் அதனால் பாதிக்கப்படவே இல்லை. நீல நிறச் சாயம் இந்தத் தடையைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. இதன் மூலம் ரத்தம் மூளைக்குப் பாய்ந்தாலும், அது வடிகட்டப்பட்டுத் தான் செல்கின்றது என்பது விந்தையாகும். இந்தப் படத்தில் கீழே மட்டும் திறப்பு இருப்பதைப் பாருங்கள்.*

"என்னது முப்பது லட்சமா? இவ்வளவு பெரிய சென்னையில வேற இடம் வாடகைக்குக் கிடைக்காதா என்ன?" என்றான் சந்தர்.

"அப்படி இல்ல தம்பி. நீங்க அவசரமா கேட்டதாலயும், ஒதுக்குப் புறமா கேட்டதாலயும் தான் இதைக் காட்டினேன். இன்னும் இரண்டு இடம் இருக்கு. ஆனா அதெல்லாம் ரோட்டு மேல இருக்கு. காட்டுறேன் இரண்டையும். உங்களுக்கு எது புடிக்குதோ அதை வாடகைக்கு எடுத்துக்கோங்க." என்றார் தரகர்.

சரியென்று கிளம்பினார்கள். முதலாவதாகக் காட்டிய இடம் இரண்டாவது மாடியில் இருந்தது. இரண்டாவது மாடி என்றதுமே உதட்டைப் பிதுக்கி விட்டான் சந்தர். அடுத்ததாகக் காட்டியது மவுண்ட் ரோடிலேயே இருந்தது. வாடகை மாதம் 40000 ரூபாய். ஆனால் 24 மணி நேர ஜன சந்தடி இருக்கும். வாடகையும் அதிகமாகத் தோன்றியது. மாலையில் களைப்பாக மீண்டும் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர் இருவரும்.

தரகர், "பேசாம நீங்க முத இடத்தையே முடிச்சிருங்க தம்பி. அதான் பிரச்னையில்லாதது. வாடகை கொடுத்து மாளாது உங்களால. நாளைக்குள்ள எனக்கு முடிவு சொல்லுங்க. முதல்ல 15 லட்சமும், இரண்டு மாசம் கழிச்சு 15 லட்சமும் கொடுக்கலாமான்னு கேட்டுச் சொல்றேன். ஆனா என் கமிசன் 30 லட்சத்துக்கு 1/2% பதினைந்தாயிரம் உடனே கொடுத்துடுங்க. சரியா?" என்ற படி கிளம்பினார்.

தலையைச் சொறிந்த படி உட்கார்ந்திருந்தான் சந்தர். "கவலைப்படாதே. பேசாம நாம விலைக்கே வாங்கிடலாம் அந்த இடத்தை. அது தான் பிரச்னை இல்லாதது. வாடகைன்னா எப்பன்னாலும் பிரச்னை தான். தவிர அது ஒதுக்குப்புறமா நமக்கு வசதியா வேற இருக்கு." என்றான் கதிர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"எல்லாம் சரி தாண்டா. ஆனா ப்ராஜெக்ட்ல 15% கட்டிடத்துக்கே சரியாப் போச்சுன்னா அப்புறம் மத்த இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்லாம்?" என்றான் சந்தர். கடலே முழங்கால் மட்டம்னு துணிஞ்சி முடிவெடுத்தாச்சு. இதுல என்னடா 15 லட்சத்தைப் பத்தி யோசிக்கிற? பணத்தைப் பத்தின கவலையை எங்கிட்ட விட்டுடு. அதுக்கும் ஒரு வழி செஞ்சிட்டாப் போகுது. இந்த கட்டிடத்தை நமக்குத் தேவையான இண்டீரியர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா செஞ்சு முடிக்க எவ்ளோ ஆகும்? எத்தனை நாள்ல உன்னால இந்த ப்ராஜெக்ட முடிக்க முடியும்? சக்சஸ் ஆயிடும்ல? என்றான் கதிர் ஊக்கமாய்.

"இந்த ப்ராஜெக்ட் சக்சஸ் பத்தி எனக்கு எந்த சந்தேகமும் இல்லைடா. ஆனா நாம எடுக்கிற ரிஸ்கை நினைச்சாத் தான் இது தேவையான்னு தோனுது." என்றான் சந்தர்.

"இப்படில்லாம் ரிஸ்க் எடுத்துத் தாண்டா பெரிய பெரிய விஞ்ஞானிங்க எல்லாம் எல்லாத்தையும் கண்டு புடிச்சிருக்காங்க. நாம எப்படியும் ஜெயிச்சே ஆகனும். உன்னோட இந்த சோதனை வெறும் சோதனையிலேயே நின்னுடக் கூடாது. சாதனையா ஆகனும். அதுக்கு என்ன வேணா செய்யலாம்டா." என்றான் கதிர்.

சரியாகப் பதினைந்து நாட்கள் கழிந்திருந்தன. மொத்தமாய் ஒரு கோடியை நூறு 1000 ரூபாய்க் கட்டுக்களாக சந்தர் முன் காட்டினான் கதிர்.

"எப்படிடா இது சாத்தியம்?" என்றான் சந்தர்.

"சஸ்பென்ஸ்டா. ப்ராஜெக்ட் முடியும் போது எல்லாம் சொல்றேன். அது வரை எதுவும் கேட்காதே. உன் ப்ராஜெக்ட்ல மட்டும் கண் வை. பணம் தேவைன்னா மட்டும் என்கிட்டக் கேளு. சரியா?" என்றான் கதிர்.

கதிர் சொன்ன படி அந்தக் கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டது. மள மளவென்று உள்ளே எல்லா வேலையும் முடித்தார்கள். அதற்கே 10 லட்சத்துக்கும் மேல் செலவானது. சி.கே. லேப் என்று அதற்கு பெயர் சூட்டினார்கள். அந்தப் பெயரிலேயே ஒரு வேன் ஒன்றும் வாங்கினார்கள். ஒரு நல்ல நாளில் லேபைத் திறந்தார்கள். வெளியே சின்னதாய் லேப் பெயரில் ஒரு போர்டு மட்டும் இருந்தது. அந்தப் பகுதி மக்களெல்லாம் ஏதோ பெரியதாக வரப்போகின்றது என்று ஆச்சரியமாகப் பார்த்துப் போனார்கள்.

ஆனால் அவர்களது ஆச்சரியத்தை அதிகப்படுத்தும் வகையில் அந்த லேப்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

பெரும்பாலான சமயங்களில் வெளியே பூட்டியே இருந்தது. ஆர்வப்பட்டு வந்து கேட்டவர்களுக்கெல்லாம் ஏதோ பணமுடை என்று மட்டும் சொல்லி வைத்தான் கதிர். "அதாங்க. இந்த இடமே ராசியில்லாத இடம்." என்றார் ஒருவர். "நீங்க சொல்றதும் சரி தாங்க" என்றான் கதிர். அடுத்த கொஞ்ச நாட்களில் மக்கள் பல் வேறு பிரச்னைகளில் இந்த லேபைப் பற்றியே மறந்து போனார்கள்.

கதிருக்கும் சந்தருக்கும் வேறு வேலைகள் இருந்தன. முக்கியமாக அரசு மருத்துவமனையில் அநாதைப் பிணங்களில் இருந்து அப்போது தான் இறந்த பிணத்தைப் பேரம் பேசி 10000 ரூபாய் என்று அங்கிருக்கும் காவலாளியிடம் அட்வான்ஸ் கொடுத்து வைத்திருந்தார்கள். அதே போல் ஏதேனும் ஒரு விபத்தில் மூளை தவிர மற்ற பாகங்களில் பலத்த அடிபட்டு மூளை இன்னும் உயிருடன் இருக்கும் ஒரு உடலுக்கு அதே அரசு மருத்துவரிடம் சொல்லி வைத்தனர்.

நெற்றியைச் சுருக்கி அவர்களை ஒரு மாதிரி பார்த்த அந்த மருத்துவர் "எதற்கு உங்களுக்கு?" என்றார்.

உடனே தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் காட்டினான் சந்தர். "சார் நான் இந்தக் கம்பெனியில் தான் ஆராய்ச்சிப் பிரிவில் இருக்கேன். ஒரு ஆராய்ச்சிக்காக உயிரோட இருக்குற ஆனால் காப்பாத்த முடியாத ஒரு மூளை தேவைப்படுது. இது சட்டப்படி செய்ய முடியாது. இதுல உங்களுக்கு ஒரு பிரச்னையும் வராது." என்றான் சந்தர்.

வெகு நேரம் அந்தக் கார்டை திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர், "இது ரொம்ப ரிஸ்கான வேலை. எனக்கு 2 லட்சம் வேணும்." என்றார்.

சந்தரைப் பார்த்துக் கண்களை மெல்ல மூடித் திறந்தான் கதிர் ஆமோதிக்கும் விதமாய்.

"சரி சார். இது என்னோட மொபைல் நம்பர். அப்படி ஒரு பேஷண்ட் கிடைச்சதும் எனக்கு இந்த நம்பர்ல கால் பண்ணுங்க. நாங்க வந்து கலெக்ட் பண்ணிக்கிறோம்." என்றான் சந்தர்.

அடுத்து இவர்களிடத்தில் சிக்கியது பாலா தான். அவள் சிக்கிய விதமே தனி.

(நினைவுகள் கழியும்)

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 17

*இந்தத் தடை தாண்டி மூளைக்குள் செல்ல முடிபவை பற்றிப் பார்ப்போமா? திரவக் கொழுப்பு, குளுக்கோஸ் மூலக் கூறுகள் ஆகியன மட்டுமே இந்தத் தடை தாண்டிச் செல்லக் கூடியவையாக இருக்கின்றன. மற்ற தசைகளால் கொழுப்பை எரிக்க முடியும். ஆனால் மூளையோ தன் சக்தி அனைத்தையும் குளுக்கோஸிலிருந்தே தான் பெறுகின்றது. உடலின் மொத்த எடையில் 2% மட்டுமே இருக்கும் மூளை ஓய்வில் இருக்கும் போது உடலுக்குள் வரும் பிராணவாயுவில் 20% அளவினை உபயோகிக்கின்றது.*

பெங்களூர் ரயில் நிலையம். கையில் ஒரு சிறு பெட்டி மட்டும் கொண்டு மூன்றாம் வகுப்பு குளிரூட்டப் பட்ட பெட்டியில் இருந்து வெளியேறினார் சங்கர். பெங்களூரே ஒரு குளிரூட்டப் பட்ட பெட்டியோ என்று எண்ணிக் கொண்டார். வெளியே வந்து அவருக்கென காத்துக் கொண்டிருந்த ஜீப்பில் முன் சீட்டில் ஏறிக் கொண்டார். ஜீப் ஆணையாளர் அலுவலகம்நோக்கி விரைந்தது. அப்போது தான் மழை பெய்து முடிந்திருந்தது. சில்லென்ற காற்றும், தரையைச் சுத்தமாய் மழை நீரால் கழுவிய சாலைகளும், இருபுறமும் பசுமையான மரங்களும், தற்போது வந்த தொழில் நுட்ப டிமாண்டில் முளைத்து வரும் பெரிய கட்டிடங்களும் சங்கரை ஆசையாய் வரவேற்றன. இருந்தும் சங்கருக்கு மனம் அதில் செல்லவில்லை.

அவரது எண்ணங்களில் அப்போது இருந்ததெல்லாம் சுரேஷ் பாண்டேவும். அவருடனான 2 நாட்களுக்கு முந்தைய சந்திப்புமே.

அந்த சந்திப்பு ஒரு விசாரணைக்குச் சென்றது போல் இது வரை தோன்றவில்லை அவருக்கு. ஒரு நண்பரைச் சந்தித்து வந்தது போல் தோன்றியது. மாலையில் அவர் வீட்டு காலிங் பெல்லை அழுத்தி உள்ளே சென்றது, மருத்துவக் கல்லூரியில் பயிலும் அவரது மகள் சங்கரை அழைத்து உள்ளே சென்றது ஞாபகம் வந்தது.

சிறு குடும்பம் பாண்டேவுனுடையது. சீரான வாழ்வும் தான். நேரம் பார்த்து வேலை, காலண்டர் பார்த்துச் சம்பளம். வீட்டை நிர்வகிக்கும் சிறந்த மனைவி. அடிக்கடி வெளியூர் மாறிக் கொண்டே இருந்தாலும் நண்பர்களை விட்டுப் பிரிய வேண்டியிருக்கின்றதே என்று கொஞ்சமும் கோபிக்காத செல்ல மகள். வீடு முழுக்க சுத்தம் என்றால் படு சுத்தம். பெரிய வங்கி அதிகாரி என்ற தோரணை கொஞ்சமும்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

இல்லை. பாவம், மேலாளராய் ரிஸ்க் எடுக்காமல் வெறும் அதிகாரியாகவே இருந்திருந்தாலும் வாழ்க்கையை இப்படித் தான் வாழ்ந்திருப்பார் என்று தோன்றியது சங்கருக்கு.

சங்கரைப் பார்த்ததுமே, "என்ன சார். எனி டெவலப்மெண்ட்?" என்று தான் கேட்டார் சுரேஷ். அவரது கண்களை அப்படியே ஊடுருவிப் பார்த்தார் சங்கர். அதில் பொய் பேசுவதாய்த் தெரியவில்லை.

"யெஸ் சார். இரண்டு மூன்று க்ளூ கிடைச்சிருக்கு. நெருங்கிட்டோம். சீக்கிரம் புடிச்சிடலாம்." என்று தூண்டில் போட்டு மீண்டும் அவரது கண்களைப் பார்த்தார் சங்கர். அப்போது அவரது கண்களில் கொஞ்சம் நிம்மதி தென்பட்டது. கொஞ்சம் கூட அதிர்ச்சியே தெரியவில்லை. "சரி ஒன்னு பார்ட்டி ரொம்ப இன்னொசண்ட்டா இருக்கனும், இல்லைன்னா ரொம்ப கில்லாடியா இருக்கனும்." என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார் சங்கர்.

"உங்களோட லைப்பைப் பத்திக் கொஞ்சம் ப்ரீபா சொல்லுங்க சார்." என்றார் சங்கர் வந்திருந்த காபியை உறிஞ்சிக் கொண்டே. சுரேஷின் மனைவியும் மகளும் கூட எதிரில் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் முழுக் கதையையும் சொல்லியிருந்தார் சுரேஷ். அவர்கள் முகத்திலும் கலக்கம். "இது ஒரு பொதுவான, வழக்கமான விசாரணை தான். பயப்படத் தேவையில்லை. எனக்கு நீங்க கொடுக்கிற இன்பர்மேஷன் ரொம்ப யூஸ்புல்லா இருக்கலாம். அதனால் பயப்படாமச் சொல்லுங்க", என்றார் சங்கர்.

"சார் எனக்கு மடியில் கனமில்ல. அதனால் வழியில் பயமில்ல. எங்க பாங்க் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கு. கொள்ளையடிச்சவங்க தண்டிக்கப்படனும். பணம் மீட்கப் படனும். அதுக்கு என்னோட ஒத்துழைப்பு உங்களுக்கு முழுமையா இருக்கும். எங்கப்பா அம்மா ரொம்பக் கஷ்டப்பட்ற விவசாய பேமிலி தான் சார். பரம்பரை பரம்பரையா வைச்சிருந்த ரெண்டு ஏக்கர் நிலத்தைக் கூட வித்துத் தான் என்னைப் படிக்க வைச்சாங்க. நான் பி.எஸ்.சி. மாத்ஸ் படிச்சி வெளியே வரும் போதெல்லாம் வங்கி வேலை சர்வ சாதாரணமாக் கிடைச்சது. அப்படி ஒரு கிளர்க்காத் தான் இந்த பேங்கில் சேர்ந்தேன். அப்புறம் படிப்படியா பீல்டு ஆபீசர் ஆனேன். அந்த வேலையில் இருந்தே மேற்படிப்பு படிச்சி முடிச்சேன். என்னோட வேலையைப் பார்த்து எனக்கு ஒரு ரூரல் மேனேஜர் போஸ்ட் கொடுத்தாங்க. ஏற்கனவே விவசாயமும் தெரிஞ்சதுனால நல்லா டெவலெப்மெண்ட் காட்ட முடிஞ்சது. அப்படியே முன்னேறி கமர்சியல் பிராஞ்ச் மேனேஜர், அசிஸ்டண்ட் ஜெனரல் மேனேஜர்னு ப்ரோமேசன்லேயே வண்டி ஓடுது. இப்போ சேர்மனுக்கு அடுத்த படியா உட்கார்ந்திருந்தாக் கூட எனக்கு அப்போ பட்ட

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

கஷ்டமெல்லாம் மறக்காது. என் மகளை டாக்டருக்குப் படிக்க வைச்சிருக்கேன். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சிக் கொடுக்கனும். அவ்ளோ தான். என்னோட கடமை முடிஞ்சிரும். அவ்வளவு தான் சார் என் கதை" என்றார் சுரேஷ்.

ஏனோ சங்கருக்கு அவரைப் பிடித்திருந்தது. "இது போல் தான் பேமிலியோடவே இருக்கனும்னு நானும் நினைக்கிறேன். ஆனா முடியல." என்று சொல்லிக் கொண்டார் சங்கர். வந்த வேலையை நினைக்காம வேறேதோ நினைக்கிறோம் என்று சுதாரித்துக் கொண்டு, ஒரு கேள்வி கேட்டார் சுரேஷ் பாண்டேவை. "யாராலும் அப்படி எளிதில் யூகிக்க முடியாத அதே சமயம் வேறெங்கும் எழுதி வைக்காத 5 தினங்களுக்குள்ளே மாற்றப்பட்ட ஒரு பாஸ்வேர்டைச் சரியாக எப்படி ஒருவரால் கண்டறிய முடியும்னு நீங்க நினைக்கிறீங்க? எங்கேயாவது இதைப் பற்றிப் பேசிருக்கீங்களா? எப்படியாவது லீக் அவுட் ஆகச் சான்ஸ் உண்டா?"

"எனக்கு அது பெரிய அதிசயமாவும், ஆச்சரியமாகவும் இருக்கு சார். இப்போ வரைக்கும் என்னால் எப்படி இது சாத்தியம்னே சொல்ல முடியல." என்றார் சுரேஷ்.

அவரது மகள் குறுக்கிட்டு, "சார், நேத்தும் இன்னைக்கும் எங்கப்பா இதே பேச்சுத் தான். எப்படி இவ்வளவு சீக்ரெட்டான பாஸ்வேர்டைச் சரியா யூகிக்க முடியும்னு." என்றாள்.

மெல்லத் தலையசைத்த சங்கர் அடுத்த கேள்வியை வீசினார். "இந்த ஐந்து நாட்கள்ல நடந்த விஷயங்கள் ஒன்று விடாமச் சொல்லுங்க. டைரி எழுதும் வழக்கம் இருந்தா அதைக் காட்டலாமா?" என்றார்.

யோசனையில் ஆழ்ந்தார் சுரேஷ். "குறிப்பிட்ற மாதிரி எந்த நிகழ்ச்சியும் இல்லியே சார். வழக்கம் போல ஆபீசுக்குப் போனேன் வந்தேன். மத்த படி என்ன நடந்துச்சு? என்ற படி தாடையைச் சொறிந்தார். ஹாங்! ஒன்னு மட்டும் ஞாபகம் வருது." என்றார்.

நிமிர்ந்து உட்கார்ந்தார் சங்கர்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 16

*மூளையில் நடப்பது மின்வேதிப் பரிமாற்றம் என்று பார்த்தோம். வேதியியல் பரிமாற்றம் நியூரோ பரிமாற்றமா, ஹார்மோன் பரிமாற்றமா என்று முக்கியமாய்ப் பிரித்தறிய முடியாத படியான பரிமாற்றங்கள் மூலமாய் நிகழ்கின்றது. இந்த ஹார்மோன் பரிமாற்றத்தின் போது சிறுநீரகத்தின் பங்கு பெருமளவு இருக்கின்றது.*

*மற்ற செல்களைப் போலவே நியூரான்களும் DNA க்களினால் கட்டுப்பாட்டில் வைக்கப் படுகின்றன. எல்லா செல்களின் குரோமோசோம்களும் டி.என்.ஏ.வை ஒத்தே இருக்கின்றன. ஆனால் அந்த செல் மூளை நியூரானாகவும், கிட்னி செல்லாகவும், முதுகுத் தண்டு செல்லாக மாறுவதும், அந்த டி.என்.ஏ.யின் பாகங்களை வெளிக்காட்டுவதைப் பொறுத்தே இருக்கின்றது. புரோட்டீன்கள் எத்தனை நெருக்கமாய் இர்ருக்கின்றன, அவை டி.என்.ஏ. உடன் எப்படி உறவாடுகின்றன என்பதைப் பொறுத்தே டி.என்.ஏ. வின் எந்தப் பாகம் வெளிக்காட்டிக் கொள்கின்றது என்று தீர்மானிக்கப்படுகின்றது. ஆக மொத்தம் புரோட்டீன் முக்கிய பங்கு வகிக்கின்றது.*

கதிர் கொடுத்த பணம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைய ஆரம்பித்திருந்தது. கட்டிடத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் மெருகேற்றி இருந்தனர். சொந்தக் கட்டிடம் ஆகி விட்டதால் எதைப் பற்றியும் கவலையின்றி அவனுக்குத் தேவையான அளவுக்கு சந்தர் நவீனப் படுத்தியிருந்தான். வெளியிருந்து பார்க்க வெகு சாதாரண கட்டிடமாகத் தெரிந்த அவர்களின் சோதனைக் கூடம் உள்ளே பிரமாண்டமாய்த் தயாராயிருந்தது. கணினிகள் உள்நாட்டு உபகரணங்கள் எனத் தேவையான அனைத்தும் வந்து சேர்ந்திருந்தன.

"வெளிநாட்டுல இருந்து வர்ற இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் எல்லாம் எப்போ எப்படி கொண்டு வரப் போற?" என்றான் கதிர்.

"அது ஒன்னும் கஷ்டமே இல்லடா. இத்தாலில எலைட் இண்டெர்நேஷனல்னு ஒரு கம்பெனி இருக்குடா. அவங்களோட வேலையே இது போன்ற அண்டர்கிரவுண்ட் சமாச்சாரம் தான். அவங்களுக்கு எல்லா நாட்லயும் ஆட்கள் இருக்காங்க. எந்தக் கரன்சியும் கொடுக்கலாம். எதாவது ஒரு பெயரில் பில் போட்டு கருவாடுன்னு சொல்லிக் கூட நம்ம இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வந்து சேர்ந்துடும். எல்லாம் நெட் கைங்கரியம் தாண்டா" என்றான் சந்தர்.

"என்னமோ, ரொம்ப ஜாக்கிரதையா இருக்கனும்டா." என்றான் கதிர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"அப்படித் தாண்டா இருக்கோம். நெட்ல நான் போறதே அனானிமஸ் பிராக்ஸி ஒன்னு மூலமாத் தான். தவிர, நம்மோட இந்த பிராஜக்ட் இத்தனை நாள் இத்தனை கஷ்டப்பட்டு, இத்தனை இன்ஸ்ட்ருமெண்ட்ஸைக் கொண்டு வந்து சேர்த்து செஞ்சாலும், மிஞ்சி மிஞ்சிப் போனா பத்து நாளைக்கு மேல ஆகாது. வெகு சீக்கிரமே நமக்கு வெற்றி கிடைச்சிடும். அதுக்கப்புறம் நாம எதைப் பற்றியும் கவலைப் படவேண்டியதில்லை." என்றான் சந்தர்.

"சரிடா. அடுத்து நாம என்ன செய்யனும்?" என்றான் கதிர்.

"இப்போதைக்கு மூன்று மூளை ரெடி பண்ணியாச்சு." என்ற சந்தரை வழிமறித்து "ரெண்டு தானடா ரெடி பண்ணினோம்?" என்றான் கதிர்.

சந்தர் சிரித்துக் கொண்டே, "உன் மூளையும் சேர்த்துச் சொன்னேண்டா. உனக்கு மூளை இருக்குல்ல? கவலைப்படாத உன் மூளைக்கு ஒன்னும் ஆகாம பார்த்துக்கிறேன்." என்றான்.

"ஓ. நீ அப்படி வர்றியா? சரி சொல்லு." என்றான் கதிர்.

சந்தர், "இன்னும் நமக்குத் தேவை ஒரு மனநலமில்லாதவரின் மூளை." என்றான்.

ஆனால் அவர்களின் துரதிர்ஷ்டமோ அல்லது பாலாவின் அதிர்ஷ்டமோ பாலா இவர்களிடம் வந்து மாட்டினாள்.

அவளின் சொந்தப் பெயர் யாருக்கும் தெரியவில்லை. வயது 20 இருக்கும். சென்னையின் கூவக் கரையோரமாய் நெடுக பரவியிருக்கும் சேரி பகுதியைச் சேர்ந்தவள். தாய் தந்தை யாரென்று தெரியாதவள். அவளையும் அறியாதவள். கிறுக்கி என்று தான் அவளை எல்லாரும் அழைத்தனர். வழிந்தோடும் எச்சிலைத் துடைத்ததில்லை. ஆடை பற்றிய கவனம் இல்லை. யார் எதிரே வந்தாலும் கை நீட்டி "காசு கொடு" என்று மட்டுமே கேட்குமாறு பழக்கி இருந்தனர் அந்தச் சேரியில் சில கயவர்கள். தினம் ஒரு ஏரியா என்று அவளை அனுப்பி விட்டுக் கண்காணிக்க ஒருவன் பின்னே செல்வான். சேர்ந்திருக்கும் காசைப் பிடுங்கிக் கொண்டு தின்ன ஏதோ வாங்கித் தந்து முழு நேரப் பிச்சைக்காரியாய் இருந்தாள் கிறுக்கி.

கதிரும், சந்தரும் களைத்துப் போய் வீடு வந்து சேர்ந்தனர்.

"என்னடா இது. நல்ல மூளைக்காரன் எத்தனை பேர் வேணாலும் கிடைப்பான்

போல. மூளை கலங்குனவன் கிடைக்க மாட்டான் போல. நாமளும் பைத்தியக்கார ஆஸ்பத்திரி ஏறி இறங்கிட்டோம், ஒருத்தனும் மசிய மாட்டேங்குறானே. ஒன்னு ஏதாவது தர்ம ஸ்தாபனம் நடத்துது. சட்டச்சிக்கல்னு சொல்றாய்ங்க. இல்லாட்டி அந்த பைத்தியத்தோட சொந்தக் காரங்கன்னு கூடவே இருக்காய்ங்க. ரொம்பக் கஷ்டமா இருக்கே." என்றான் கதிர்.

மறுநாள் சந்தரின் அலுவலக ஏரியா தான் கிறுக்கியின் டியூட்டி ஏரியா போலும். காசு கொடு என்று வழக்கம் போல் சுற்றி வந்தாள். வண்டியில் அப்போது தான் ஏறி உட்கார்ந்த சந்தர் அவளது நடை உடை பாவனை பார்த்ததுமே அவளுக்கு மனநிலை சரி கிடையாது என்று புரிந்து கொண்டான். அவனிடமும் கேட்டாள். "காசு கொடுக்குறேன். நீ எங்கே இருக்கே?" என்றான்.

அவளோ "காசு கொடு" என்று மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தாள். கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை வைத்துக் கொண்டு, "நீ எங்கே தங்கிருக்கேன்னு சொல்லு நான் பணம் தர்றேன்." என்றான் சந்தர். அவன் பணத்தை நீட்டிக் கொண்டு, அவளிடம் ஏதோ பேசிக் கொண்டே இருப்பதைப் பார்த்த கிறுக்கியின் கண்காணிப்பாளன் சந்தரின் தோளில் பின்னாலிருந்து கை வைத்தான்.

"என்ன சார்? அவ கிட்ட என்ன பேச்சு?" என்றான்.

"ஒன்னுமில்லையே. பார்க்க பாவமா இருந்துச்சு. அதான் வீடு எங்கேன்னு கேட்டுக் கிட்டு இருந்தேன்." என்றான் சந்தர்.

"பாவமா இருந்தா பணம் கொடு. வீடெல்லாம் எதுக்கு கேக்குற?" என்று கடுமையான குரலில் சொன்னவன் அவளை வா என்று கையைப் பிடித்து இழுத்துச் செல்ல ஆரம்பித்தான். அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் சந்தர்.

பாலா. அந்தப் பெண்ணுக்கு கதிரும் சந்தரும் இட்ட பெயர்.

(நினைவுகள் கழியும்)

நினைவு: 15

*புரோட்டீன்களும் என்சைம்களும் (கிரியாவூக்கி புரோட்டீன்கள் எனலாம்) நியூரான் செல்கள் மட்டுமின்றி எந்த ஒரு செல்லையும் நிர்வகிப்பதாக இருக்கின்றது. எந்த புரோட்டீன் எந்த செல்லில் உருவாக வேண்டும் (நியூரான் செல் உதாரணமாக) என்பது DNA வின் நியூக்ளியஸில் உள்ள RNA சங்கிலித் தொகுப்பில் உள்ளது. அந்தச் சங்கிலித் தொகுப்பும் டி.என்.ஏக்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டு புரோட்டீன்களால் தீர்மானிக்கப்படுகின்றது.*

சங்கரின் புலன்கள் அனைத்தும் கூர்மையாகின. சுரேஷ் பாண்டேவின் வார்த்தைகளின் இடைவெளி முதற்கொண்டு கூர்ந்து கவனிக்கலானார். "சொல்லுங்க சார். என்ன நடந்தது?" என்றார்.

சுரேஷ் பாண்டே தொடர்ந்தார், "ஒன்றும் முக்கியமான விஷயமில்லை சார். இந்த சம்பவம் நடக்குறதுக்கு 2 நாட்களுக்கு முன்னாடி எங்க வங்கியின் உயரதிகாரிகளுக்கு ப்ருந்தாவன் ஹாஸ்பிடலில் வைத்து ஒரு ஸ்பெஷல் ஹெல்த் செக் அப் நடந்தது. அப்போ திடீர்னு நான் மயக்கம் போட்டு விழுந்திட்டேன். 3 மணி நேரம் கழிச்சி தான் எனக்கு நினைவு வந்தது. வேற ஒன்றுமில்ல சார்." என்றார்.

சங்கர் கொஞ்சம் ஏமாற்றத்துடனே தன் மனதுக்குள் இந்தத் தகவலைக் குறித்துக் கொண்டார். "அந்த மயக்கம் எதுனால வந்தது? இதற்கு முன் உங்களுக்கு இப்படி வந்திருக்கா? உங்க பேமிலி டாக்டர்ட்ட கன்சல்ட் செஞ்சீங்களா?" என்று கேட்டார்.

"இது வரை எனக்கு அப்படி எல்லாம் வந்ததே இல்ல சார். அதான் முதல் தடவை. லோ ப்ரஷர். அதனால பயப்பட்றதுக்கு ஒன்னுமில்லைன்னு அங்க இருந்த டாக்டர்ஸே சொன்னாங்க. நல்ல வேளையா ஹாஸ்பிடல்லையே மயங்கியது அதிர்ஷ்டம்னும் சொன்னாங்க." என்றார்.

இப்படி நினைத்துக் கொண்டே வருகையில் பெங்களூர் கமிஷனர் அலுவலகம் வந்திருந்தது. விறைப்பாய் இறங்கிய சங்கர், 2 வது மாடியில் இருந்த கமிஷனர் ஆபீஸுக்கு அழைத்துச் செல்லப் பட்டார். 2 வது மாடி கொஞ்சம் களேபரத்துடன் இயங்கிக் கொண்டிருந்தது. சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே கம்ப்யூட்டர்கள். யூனிபார்மிலும் யூனிபார்மில் இல்லாமலும் போலீஸ் அதிகாரிகள். வயர்லெஸ் சத்தங்கள் அனைத்தும் கொண்டு எதற்கோ தயாராகிக் கொண்டிருப்பது

போல் இருந்தது கமிஷனர் அலுவலகம்.

கமிஷனரின் அறை வெளிப்புறத்திற்கும் அவரது அறைக்கும் எந்த சம்பந்தமுமின்றி அமைதியாய் இருந்தது. ஏதோ பெரிய நிறுவனத்தின் முதலாளி அறைக்குள் நுழைந்தது போல் உணர்வு. உள்ளே நுழைந்த சங்கரை வரவேற்ற கமிஷனர் எதிரிருக்கையில் அமரச் சொன்னார். "கேஸ் டீடெயில்ஸ் டெல்லி கமிஷனர் சொன்னார் மிஸ்டர் சங்கர். உங்களுக்கு என்ன உதவின்னாலும் தரத் தயாரா இருக்கோம்." என்றார்.

"இந்த லிஸ்ட்ல சிட்டியைச் சுற்றி இருக்குற 400 ஏ.டி.எம். செண்டர்ஸோட அட்ரெஸ் இருக்கு சார். சம்பவம் நடந்த அன்றைக்கு அங்கே வேலையில இருந்த எல்லா செக்யூரிட்டி கார்ட்ஸும் வைத்து ஒரு சின்ன விசாரணை பண்ணனும் சார்." என்றார் சங்கர். "விஷயம் கொஞ்சம் அர்ஜெண்ட். அதனால இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ள அரேஞ் பண்ணினா நான் நாளைக் காலை ப்ளைட்ல சென்னை போகலாம்." என்றார்.

"ஓகே மிஸ்டர் சங்கர். அரேஞ் பண்ணிடலாம்." என்ற கமிஷனர், தன் உதவியாளரை அழைத்து உடனுக்குடன் உத்தரவைப் பிறப்பிக்க, அழைப்புக்கள் காட்டுத் தீயென அனைத்து காவல் நிலையங்களுக்கும் பறந்தது.

சங்கர் கையில் இன்னுமொரு ஸ்டேட்மெண்ட் இருந்தது. சேமிப்புக் கணக்குகளின் பட்டியல் தான் அது. ஏதேனும் பொறி சிக்குமா என்று அவரும் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். சரியாக ஆயிரம் ரூபாய்க்கு மேல் எந்தக் கணக்கிலும் பற்று வைக்கப்படவில்லை. இந்தப் பத்தாயிரம் கணக்குக் காரர்களுக்கும் தன் கணக்கிலிருந்து ஆயிரம் ரூபாய் எடுக்கப்பட்டது தெரிந்திருக்குமா? ஏற்கனவே இது எந்த செயல்பாடுமில்லாத கணக்குகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதால் யாருக்கும் தெரியப் போவதில்லை. அடுத்து சென்னையில் நமக்கு ரொம்பத் தான் வேலையிருக்கின்றது என்று நினைத்துக் கொண்டார்.

அன்று மாலை. ரிசர்வ் போலீஸ் மைதானம். 200க்கும் மேற்பட்ட செக்யூரிட்டிகளால் நிறைந்திருந்தது. ஒரு சிலர் விடுப்பில் இருந்ததாலும், சிலர் ஏற்கனவே அப்போது டியூட்டியில் இருந்ததாலும் வரவில்லை. எதற்காக அழைத்திருக்கின்றார்கள் என்று தெரியாததால் சலசலத்தது கூட்டம். கமிஷனரும் சங்கரும் மைதானத்துக்கு வந்தனர். சங்கர் கையில் ஒரு மைக் கொடுக்கப் பட்டது. தெளிவான குரலில் பேச ஆரம்பித்தார் சங்கர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"உங்களை எல்லாம் இங்கே வரவழைக்க என்ன காரணம்னு எல்லாரும் யோசிச்சிட்டு இருப்பீங்க. கடந்த வாரம் வெள்ளிக்கிழமை நீங்க எல்லாரும் டியூட்டியில் இருக்கும் போது சரியா நள்ளிரவு 1 மணிக்கு பெங்களூர் சிட்டியைச் சுற்றி உள்ள 400 ஏ.டி.எம். செண்டரில் இருந்து சரியா 25000 எடுக்கப்பட்டு மொத்தம் ஒரு கோடி ரூபாய் களவு போயிருக்கு. இப்போ உங்களை ஏன் வரச்சொல்லி இருக்கோம்னா உங்கள்ல யாராவது இதைக் கவனிச்சிருக்கலாம். கார் நம்பர் ஏதாவது நோட் பண்ணிருக்கலாம். அடையாளம் ஞாபகத்தில் இருக்கலாம். ஏன்னா சம்பவம் நடந்தது இரவு நேரம். ஜன சந்தடியே இல்லாத நேரம். ஏதாவது யாராவது வித்தியாசமாப் பார்த்திருந்தாலோ அல்லது உங்களுக்கு ஏதாவது சொல்லனும்னு தோணினாலோ அவங்க கையை உயர்த்தலாம்." என்றார்.

கொஞ்ச நேரம் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தனர் காவலர்கள். ஒருவரும் கையை உயர்த்த வில்லை. "இதில் உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது. நாங்க கியாரண்டி தர்றோம்." என்றார் மீண்டும் சங்கர். அப்போதும் ஒருவரும் முன்வரவில்லை.

என்ன இது? ஒருவருக்குக் கூடவா ஒன்றும் தோன்றவில்லை? என்று சங்கர் நினைத்துக் கொண்டிருக்கும் போது கூட்டத்தின் மத்தியில் ஒரு கை உயர்ந்தது.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 14

*இப்போது மொழி வடிப்புக்கும் மொழி பெயர்ப்புக்கும் வித்தியாசம் தெரிந்தால் நல்லது. அதென்ன மொழி வடிப்பு? மை நேம் இஸ் ரத்தினகிரி. என்பது மொழி வடிப்பு (Transcription) என் பெயர் ரத்தினகிரி என்பது மொழி பெயர்ப்பு (Translation) அதெல்லாம் எதுக்கு இங்கே வருது? என்கின்றீர்களா?*

*டி.என்.ஏ. விலிருந்து RNA க்கு மாற்றப் படுவது மொழி வடிப்பு. ஆனால் ஆர்.என்.ஏ.விலிருந்து புரோட்டினாக மாறும் போது நடப்பது மொழி பெயர்ப்பு. மிக அதிசயிக்கின்றார்கள் விஞ்ஞானிகள். ஜீன்களில் இரண்டு வகை இருக்கின்றது. கட்டமைப்பு ஜீன்கள். கட்டுப்பாட்டு ஜீன்கள். அவை பற்றியும் காணலாம்.*

"அடேங்கப்பா! அம்பதாயிரம் ரூவாவா? முடிவா என்ன தான் சொல்றீங்க? நீங்க கேட்கிற அமௌண்ட் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. 10 வருசம் அலைஞ்சு திரிஞ்சாக் கூட இந்தப் பொண்ணை வைச்சி உங்களால இந்தப் பணம் சம்பாதிக்க முடியாது." என்றான் கதிர். சேரியில் முருகனின் குடிசை. எப்படித் தான் இந்த நாற்றத்தில் இருக்காங்களோ என்று எண்ணிக் கொண்டான் கதிர்.

அந்தக் குப்பத்துக்காரன் பேச ஆரம்பித்தான். "இங்கே பாருங்க சார். இதென்ன ஆடா மாடா? நீங்க கேக்குற விலைக்கு விக்க? நாங்க கஷ்டப்பட்டு வளர்த்த பொண்ணு சார். நீங்க கஷ்டப்படாம வச்சிக்கிறேன்னு சொன்னதுனால தான் நாங்க சரின்னு கொடுக்கவே வந்தோம். பொண்ணு நல்லா இருந்தாப் போதும் சார். பணம் கூட வேண்டாம்." என்று ஏதோ சேவை செய்தவன் போல் பேசினான் மன நலம் இல்லாத பெண்ணை பிச்சை எடுக்க வைத்து விட்டு!

"உன் பேரு என்ன சொன்ன? முருகனா? இங்கே பாருப்பா, நாங்க ஒன்னும் இவளை இங்கேயே விட்டுப் போகச் சொல்லி எல்லாம் கேக்கல. இவளுக்கு வைத்தியம் பண்ண முடியுதான்னு பாக்கத் தான் கேக்குறோம். இவ உங்க இடத்திலேயே இருக்கட்டும். இனி பிச்சை எல்லாம் எடுக்க அனுப்பாதே. நாங்க வரச் சொல்றப்ப ஒரு இரண்டு நாள் மட்டும் எங்க லேப்ல தங்கனும். அப்போ நீயும் கூட இருக்கலாம். உனக்கு பத்தாயிரம் ரூபாய் தர்றோம். எல்லாம் ஒரு இரண்டு வாரத்துக்குத் தான். அப்புறம் உன் பாதையில் கூட நாங்க குறுக்கிட மாட்டோம். சரியா?" என்றான் கதிர்.

அப்படி இப்படிப் பேசி பேரம் இருபதினாயிரம் ரூபாய்க்கு படிந்தது. இது எதுவும்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

தெரியாமல் வேறெங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் பாலா. "பெரிய பிரச்னை ஈசியா சால்வ் ஆயிருச்சிடா" என்றான் சந்தரிடம்.

"எல்லாம் சரி தாண்டா. அடுத்த வாரம் இண்டெர்நெட்ல ஆர்டர் போட்ட முக்கியமான இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் எலைட் இண்டெர்நேஷனலில் இருந்து கண்டெய்னரில் சென்னைக்கு கப்பல்ல வருது. ஹைதராபாத்ல ஒரு ரிசர்ச் செண்டர் இருக்குனு சொன்னேன்ல அவங்க பேர்ல ஏதோ இண்ஸ்ட்ருமெண்ட்ஸ்னு பில் போட்டு வருது. அதுக்கு மொத்தம் ஐம்பது லட்சம் இங்கே ஒரு மார்வாடி கிட்ட கொடுக்கனுமாம். இங்கே நாம ரூபாயாக் கொடுத்தா அங்கே அவங்களுக்கு டாலரா போயிருமாம். அது வந்துட்டா நம்ம வேலையை ஆரம்பிச்சிடலாம்." என்றான் சந்தர்.

"இங்கே நாம மார்வாடிட்ட கொடுத்தா அதை அந்த ரிசர்ச் செண்டர்காரங்க எப்படிடா அங்கே அனுப்ப முடியும்?" என்றான் கதிர் யோசனையாய்.

"அதெல்லாம் பத்தி யோசிக்காதடா. என்னவும் செஞ்சுட்டுப் போறாங்க. நமக்கு இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் கிடைச்சாப் போதும். சரி தானே?" என்றான் சந்தர் உற்சாகமாய். தலையசைத்து வைத்தான் கதிர்.

எல்லாம் சுமுகமாகத் தான் சென்று கொண்டிருந்தது. கதிர் சங்கரைப் பார்க்கும் வரை.

(நினைவுகள் கழியும்)

நினைவு: 13

*மனிதன் தன் லாஜிக்கல் எண்ணங்களைச் சேமிக்கும் பகுதி எது என்பதில் குழம்பிய விஞ்ஞானிகள் லண்டனில் 11 டாக்ஸி டிரைவர்களை அழைத்தனர். அவர்கள் அனைவரும் 38 முதல் 52 வயது வரை இருந்தனர். அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. கேட்டவுடன் அவர்களின் மூளை எவ்வாறு செயல்படுகின்றது என்று நியூரான்கள் மூளைக்கு ரத்தத்தைச் செலுத்தும் இடத்தை positron emission tomography (PET) scanner என்பதை வைத்துக் கண்காணிப்பதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது.*

*அதாவது லண்டனில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்துக்குச் செல்லும் சுருக்கு வழி எது? என்று கேட்ட போது அனைவரும் சிந்தித்து லாஜிக்காக அவர்களுக்கு இருப்பதிலேயே சுருக்கமான பாதை என்று சொல்லும் போது ரத்த நாளங்களில் இருந்து ரத்தம் மூளையின் வலது ஹிப்போ காம்பஸுக்கு வேகமாய்ப் பாய்ந்தோடியது கண்டறியப்பட்டது. இது பல சாதனைகளுக்கு வழி வகுத்தது.*

"அது யாரு கை தூக்கியது? முன்னால வாங்க" என்றார் சங்கர்.

அந்தக் கைக்குச் சொந்தக்காரரின் முன்னால் உட்கார்ந்திருந்தவர்கள் பின்னால் திரும்பி யாரென்று பார்த்தனர். கூட்டத்தின் மொத்தக் கண்களும் கை தூக்கிய அந்த பாதுகாவலரின் மேல் சட்டென்று மொய்த்தது. அவருக்கு 50 வயது இருக்கும். இருந்தும் 40 வயதுக்கு மேல் மதிக்க முடியவில்லை. தலையில் மிகக் குறைந்த முடி. சுத்தமாக மழிக்கப்பட்ட கன்னங்கள். மீசை ஒதுக்கியதில் கூட ஒரு நேர்த்தி. அவர் போட்டிருந்த உடை கூட கசங்காமல் விறைப்பாய் இருந்தது. ஷூ கூட தினம் பாலிஷ் போட்டு பளபளத்தது. தானியங்கிப் பண வழங்கியின் பாதுகாவலர் போல் இல்லை அவரைப் பார்த்தால். ஏதோ கருப்புப் பூனைப் படையைச் சார்ந்தவர் போல் இருந்தார். அனைவரின் பார்வையும் அவரைத் தொடர்ந்து வர முன்னே வந்து நின்றார்.

"நீங்க அன்றைக்குப் பார்த்த விபரத்தைச் சொல்லுங்க." என்றார் சங்கர்.

"சார் என் பெயர் ராஜ்கோபால். நான் இதுக்கு முந்தி ஆர்மில 20 வருசம் வேலை செய்துட்டு இப்பத் தான் 2 வருசமா ரிடையராகி இந்த வேலை பார்த்துக்கிட்டு இருக்கேன். சார் சொல்ற சம்பவம் நடந்த அன்னைக்கு எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. நானும் ஏ.டீ.எம்ல வெளியே ஒரு சேரைப் போட்டு உட்கார்ந்து எல்லா நியூஸ் பேப்பரையும் வரி விடாம வாசிச்சிட்டு உட்கார்ந்திருந்தேன். யாரோ ஏ.டி.எம்.மைப்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

பார்த்துட்டே இருக்குறா மாதிரி ஒரு பிரமை. சட்னு நிமிர்ந்து பார்த்தேன் ரோட்டுக்கு அந்தப் பக்கம் நின்னு ஏ.டி.எம்மையே பார்த்துட்டு இருந்தான் ஒருத்தன். ஆள் ரொம்ப டிப் டாப்னு சொல்ல முடியாது. பேண்ட் சட்டை தான் போட்டிருந்தான். முடி கூட லைட்டா கலைஞ்சி தான் இருந்துச்சு. கையில் செல்போன் ஒன்னு வைச்சு அதைப் பார்க்குறதும் அப்புறம் ஏ.டி. எம்மைப் பார்க்குறதுமா இருந்தான். சரி யாராவது பொண்ணைக் காதலிச்சிட்டு இருப்பான். அவ வந்து இப்போ இவனை கூட்டிப் போயிருவான்னு நானும் கண்டுக்கல.

ரொம்ப நேரம் இருக்கும். ரோட்ல சந்தடியே இல்லை அப்போ. திடீர்னு பார்க்குறேன் ஆளைக் காணோம். என்னடான்னு பார்த்தா ரோட்டைக் கடந்து எங்க ஏ.டி.எம். முக்கு சைட்ல இருந்த சுவர்ல சாய்ந்துக்கிட்டு ஒரு கால்ல நின்னுக்கிட்டு இன்னொரு காலை சுவத்திலேயே சப்போர்ட்டுக்கு வைச்சிக்கிட்டு இப்பவும் செல்போனைப் பார்த்துட்டு இருந்தான். நான் அவனைக் கவனிக்காத மாதிரி கவனிச்சிட்டே இருந்தேன்.

திடீர்னு செல்போன்ல ஒரு மெசேஜ் வந்த சத்தம் கேட்டது. அப்போத் தான் தெரிஞ்சது அவன் அதுக்காகத் தான் காத்துட்டு இருந்திருப்பான் போல. மெசேஜ்ல அப்படி என்ன இருந்துச்சோ தெரியல. ஏ.டீ.எம்முக்கு உள்ளே நுழைந்தான். பைக்குள்ள இருந்து ஒரு கார்டைப் போட்டான். பணம் ஏதோ எடுத்தான். பணம் எவ்வளவு வந்ததுன்னு சொல்ற சீட்டைக் கூட எடுத்து தன் பைக்குள்ள மடிச்சி வைச்சிக்கிட்டான். வெளியேறிக் கிளம்பிப் போயிட்டான். அநேகமா அவ்வளவு பணம் எடுத்ததுல இவனும் ஒருத்தனா இருக்கும்னு நினைக்கிறேன். அவ்வளவு தான் சார் நான் பார்த்தது." என்று முடித்தார்.

"ரொம்பத் தேங்க்ஸ் மிஸ்டர் ராஜ்கோபால். இதே மாதிரி வேறு யாரும் பார்த்தீங்களா? கவனிச்சீங்களா? என்று கேட்டார் சங்கர். யாரும் எந்தப் பதிலும் சொல்லவில்லை. இனி கொஞ்சம் கவனமாய் இருங்கள் என்று சொல்லிவிட்டு கமிசனரும் அவரும் கிளம்பிச் சென்றார்கள். ஜீப்பில் ஏறியதுமே சங்கர் தன் வேலையை ஆரம்பித்து விட்டார்.

"சார் மொபைல் இண்டெலிஜன்ஸ்க்கு டேட் அண்ட் டைம் கொடுக்கணும் சார்.

அந்த நேரத்தில் பெங்களூர் சிட்டியில் இந்தக் குறிப்பிட்ட எ.டி.எம் கவர் ஆகுற டவர்ஸ் என்னென்ன சர்வீஸைச் சார்ந்தது?

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

குறிப்பிட்ட சம்பவம் நடக்குறதுக்கு 10 நிமிசம் முன்னேயும் பின்னேயும் போன குறுந்தகவல்கள் எந்த நம்பரில் இருந்து, எந்த நம்பருக்குப் போயிருக்கு? அதில் என்னென்ன விஷயம் இருந்தது?

அப்புறம் அதே போல் இந்த சம்பவம் நடந்த மற்ற ஏ.டி.எம். செண்டர்ஸ் கவர் ஆகுற டவர்ஸ்லயும் இதே மாதிரி மெசேஜ் போயிருக்கா? என்பது போன்ற விபரமெல்லாம் வேண்டும் சார்" என்றார்.

அவர்கள் மீண்டும் கமிஷனர் ஆபீஸுக்கு செல்வதற்குள் அவர் சொன்ன பணிகள் செயல்பட ஆரம்பித்திருந்தன. கணினியின் பயன்பாடு பற்றி சங்கர் அசந்து போன தருணங்களில் அதுவும் ஒன்று எனலாம்.

கேட்ட விஷயங்கள் அத்தனையும் கேட்ட படி அச்சு அச்சாக அவர் கைகளில் வந்த் சேர ஆரம்பித்திருந்தது. அந்தக் காகிதங்கள் சொன்ன தகவல்கள் அவரை ஆச்சரியப்பட வைத்தது மட்டுமின்றி எதிராளி எவ்வளவு சாமர்த்தியமாக இதைச் செய்திருந்தாலும் ஓரிடத்தில் கோட்டை விட்டு விட்டானே? என்று நினைக்கத் தூண்டியது. இந்தக் கேஸில் ராஜ்கோபால் தான் துருப்புச் சீட்டு என்று நினைத்துக் கொண்டார்.

ஆனால் அந்த ஆதாரமும் வெகு விரைவில் பயனற்றதாகி விடுமோ என்னும் எண்ணத்தைக் கொண்டு வரப்போகின்றது என்பதை அவர் அறிந்தால்?

(நினைவுகள் கழியும்)

# கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு: 12



"டேய்! சக்சஸ்டா. இன்னைக்கு ஹார்பர்ல இருந்து நம்ம கண்டெய்னர் நம்பர் 1453-JE-839 ரிலீஸ் பண்றாங்களாம். நாம் போய் அந்த லாரியை அப்படியே டெலிவரி எடுத்து நம்ம இடத்துக்குக் கூட்டி வர வேண்டியது தான். அந்தக் கண்டெய்னர்ல நம்மோட இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் 10 பொட்டிங்க இருக்கு. மீதி இருக்குறத அப்படியே ரிசர்ச் செண்டருக்கு அனுப்பி வைக்கனுமாம். அந்தப் பெட்டியில என்னென்ன நம்பர்ஸ் இருக்கும்னு ஒரு லிஸ்டும் நமக்கு மெயில் வந்தாச்சு. இதோ இந்த கிளியரிங் அண்ட் ஃபார்வேர்டிங் கம்பெனியோட போன் நம்பரும் வந்திருக்கு. போன் பண்ணிப் பார்ப்போமா?" என்றான் ஆர்வத்துடன் சந்தர்.

பாலாவுக்கான பணம் கொடுத்ததிலிருந்து சரியாக 10 நாட்கள் ஆகியிருந்தன. இதற்குள் இரண்டு முறை அரசு மருத்துவமனை பிணக்கிடங்கிலிருந்து அவர்களுக்கு அழைப்பு வந்திருந்தது. அப்போது தான் இறந்தவரின் உடலை டெலிவரி எடுத்துக் கொள்ளச் சொல்லி மார்ச்சுவரி காப்பாளர் அழைத்திருந்தார். இரண்டு முறையும் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வராத காரணத்தால் வேண்டாம் என்று சொல்லிவிட்டிருந்தனர் கதிரும் சந்தரும்.

"என்ன சார் நீங்க. வேணும்னு சொல்றீங்க. ஆனா இப்போ வேணாம்னு சொல்றீங்க? நானும் அடிக்கடி டியூட்டி மாறிட்டே இருக்கேன். திடீர்னு டிரான்ஸ்பர்

வந்துடலாம் அதனால சீக்கிரம் பாடியை வாங்கிக்கோங்க. வேணும்னா ப்ரீசர்ல வைச்சிக்கோங்க." என்றார் அவர்.

சந்தர், "அதெல்லாம் இல்லை. எனக்குத் தேவை மூளை இறந்து, உடல் பாகம் வேலை செய்து கொண்டிருக்கும் உடல். அதனால் அடுத்த தடவை எப்படியும் வாங்கிக்கிறோம்." என்றான்.

அப்படியே டாக்டரையும் பார்த்து வந்தார்கள். "இன்னும் நீங்க கேக்குற மாதிரி மூளை மட்டும் இயங்கிக் கொண்டு மற்ற பாகங்கள் செயலிழந்த கேஸ் எதுவும் வரலியே" என்று கையை விரித்தார் அவர்.

சோகமாக உட்கார்ந்திருந்த சமயத்தில் தான் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் குறித்த மின்னஞ்சல் அவர்களுக்கு வந்து சேர்ந்தது. ஏதோ கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது.

கிளியரிங் ஏஜென்சியிடம் பேசிய போது அனைத்தும் உறுதி செய்தனர். அன்று மாலை லாரியில் கண்டெய்னர் ஏற்றப்படும் என்றும். அது ஹைதராபாத் செல்லும் வழியில் இவர்கள் இடத்தில் வந்து பெட்டிகளை இறக்கி விட்டுச் செல்லும் என்றும் தகவல் தந்தனர். ஆவலுடன் காத்திருந்தனர் கதிரும் சந்தரும்.

சரியாக மணி 10. பெரிய 40 அடி கண்டெய்னர் லாரி ஒன்று வந்து அவர்களின் லேப் முன்னால் நின்றது. வண்டியை ஓட்டிச் செல்ல ஒரு டிரைவரும் மேலும் ஒரு க்ளீனரும் மட்டுமே வந்திருந்தனர். பின்னால் ஒரு ஜீப்பில் ஹைதராபாத் ரிசர்ச் செண்டரிலிருந்து இருவர் வந்திருந்தனர் டெலிவரி எடுக்க. "பெட்டியை இறக்கி வைக்க லோடுமேன் யாரும் இல்லயா?" என்று சலித்துக் கொண்டே இறங்கினார் டிரைவர்.

"எங்களுக்கு எதுவும் தெரியாதே! எங்களிடம் யாரும் இது பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?" என்றான் கதிர்.

"ஆமா, இது வேற சொல்வாங்களாக்கும்? ஹைதராபாத்துக்கு லோடுமேனையும் கூட்டிட்டேவா போகமுடியும்? நீங்கள்லாம் இறக்குமதி பண்ண வந்துட்டீகளாக்கும்?" என்றார் ஏளனமாய் டிரைவர்.

"சரி இப்போ என்ன செய்யலாம்?" என்றான் சந்தர்.

"போன் பண்ணி வரச் சொல்றேன். எக்ஸ்ட்ரா பணம் ஆவும். நாங்க வேற அது வரைக்கும் காத்துக் கிடக்கனும். ச்சே. நாளைக் காலை 5 மணிக்குள்ள ஹைதராபாத்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

போனா போனஸ் 500 ரூபாய் கிடைக்கும். அதுவும் போயிரும் போல இருக்கு" என்று சலித்துக் கொண்டார் டிரைவர்.

ரிசர்ச் செண்டர் ஆட்களும், "இது என்ன சார் நீங்க? லேட்டாக லேட்டாக எங்களுக்கும் பிரச்னை." என்றனர்.

"செலவைப் பத்திக் கவலை இல்லை. உடனே வரச்சொல்லுங்க லோடுமேனை." என்றான் கதிர்.

"அவர்களிடம் இருந்தே போனை வாங்கி யாருக்கோ பேசினார் டிரைவர். அரைமணி நேரத்தில் ஒரு மீன்பாடி வண்டியில் நால்வர் கொண்ட குழு ஒன்று வந்து சேர்ந்தது. வரும் போதே சரக்கை ஏற்றிக் கொண்டு வந்திருப்பார்கள் போல. ஒரே நாற்றம். "இன்னாபா? எதை எறக்கனும்னாலும் பொட்டிக்கு 100 ரூபா வேணும். பாத்துக்கோ" என்று பேரம் பேச ஆரம்பித்தனர்.

போனால் போகின்றதென்று கொடுக்க சம்மதித்தான் கதிர். கண்டெய்னரைத் திறந்தால் உள்ளே நிறையப் பெட்டிகள். இவர்களுக்கு வரவேண்டிய பெட்டிகள் உள்ளே இருந்தன. சில பெட்டிகளை இறக்கி வைத்து விட்டு, ஒவ்வொரு எண்ணாக இவர்களின் பெட்டியின் எண்ணைச் சரிபார்த்து வெளியே செல்ல அனுமதித்தனர் ரிசர்ச் செண்டர்காரர்கள். கதிரும் சந்தரும் அதைச் சரிபார்த்து இறக்கிக் கொண்டனர்.

அனைத்தும் நடந்து முடிய 1 மணி நேரம் ஆகியிருந்தது. இரவு 12.30 போல் கிளம்பியது கண்டெய்னர் லாரி. லோடுமேன்களுக்கு உண்டான பணத்தை செட்டில் செய்து, டிரைவருக்கு 300 ரூபாயும் கொடுத்து அனுப்பி வைத்தனர். உடன் ஜீப்பும் கிளம்பிச் சென்றது. ஆயாசத்துடன் வியர்க்க விறுவிறுக்க லேபின் உள்ளே வந்து அமர்ந்தனர் கதிரும் சந்தரும்.

வந்து பார்த்தால் 11 பெட்டிகள் இருந்தன!

(நினைவுகள் கழியும்)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு: 11

In wet lab 412C on the University of Southern California’s Los Angeles campus, Vijay Srinivasan is poking a long, evil-looking needle at a slice of rat brain about half the size of a fingernail. All around him, coils of cable are piled near hulking microscopes. Glass vials and fluid-filled plastic dishes compete for space with spare keyboards and computer chips. The place looks more like a computer-repair shop than a world-class laboratory.

சங்கர் கமிஷனரிடம் விளக்கிக் கொண்டிருந்தார். "சார். அந்த ஏ.டி.எம். கவர் ஆகின்ற டவர்ல இருந்து டெலிவெர் ஆன மெசேஜெஸ் இதெல்லாம். அது இரவு நேரம்கிறதுனால நிறைய மெசேஜெஸ்லாம் போகலை. அப்படியோ போய்ட்டிருந்தாலும் அதெல்லாம் பெர்சனல் மெசெஜெஸ் தான். தவிர அன்னைக்கு வாட்ச்மேன் சொன்னதை வைச்சுப் பார்த்தால் மெசேஜ் வந்தவுடன் அவன் ரிப்ளை பண்ணலை. எனவே ரிப்ளை பண்ணப்படாத மெசேஜஸா பில்டர் பண்ணோம். அப்படியும் 14 மெசேஜஸ் இருந்தது.

அத்தனை மெசேஜ்ல ஒரு மெசேஜ் மட்டும் எனக்கு கொஞ்சம் டிபரெண்ட்டாத் தெரிஞ்சது. அந்த மெசேஜ்ல "S" அப்படின்னு மட்டும் அனுப்பிருந்தது.

சரி அப்போ இதே மாதிரி ஏதும் மெசேஜ் மற்ற ஏடிஎம் கவர் பண்ற டவர்ஸ்ல இருந்தும் டெலிவர் ஆகியிருக்கான்னு பார்க்கச் சொன்னேன். என்ன ஒரு ஆச்சரியம் பாருங்க! ஒரே ஒரு மொபைல் எண்ணிலிருந்து 400 ஏ.டி.எம். களுக்கும் 'S' அப்படீன்ற மெசேஜ் மட்டும் டெலிவர் ஆகியிருக்கு. எனவே இது "Yes" என்பதன் சங்கேதக் குறியா இருக்கலாம். அங்கே சுரேஷ் பாண்டேவின் பாஸ்வேர்டு தெர்ந்து மென்பொருளை உபயோகித்து அவர் கணக்குக்கு 1 கோடி ரூபாய் வரவு வந்ததும் அதைச் சொல்வதற்காக இருந்த சங்கேதக் குறியாய் இருந்திருக்கலாம்." என்றார்.

கமிஷனர், "அருமையான இன்வெஸ்டிகேஷன் சங்கர். இப்போ யார்கிட்ட இருந்து இந்த மெசேஜ் அனுப்பப்பட்டிருக்குன்றதை வைத்து ஈசியா கல்பிரிட்டை அரெஸ்ட் செய்துடலாம் தானே?" என்றார்.

"அதில் தான் சார் சிக்கல் இருக்கு." என்றார் சங்கர்.

"அப்படி என்ன சிக்கல்?" என்றார் கமிஷனர்.

"எந்த எண்ணிலிருந்து மெசேஜ் அனுப்பப்பட்டிருக்கோ அந்த எண் இப்போ உபயோகத்தில் இல்லை. அது ஒரு ப்ரீபெய்ட் எண். அதுமட்டுமில்லை. அந்த 400 எண்கள் கூட உபயோகத்திலேயே இல்லை. எல்லாம் மாயமா இருக்கு! டிரேஸ் அவுட் பண்ணச்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

சொல்லிருக்கேன். எனக்கு எல்லாமே போகஸ் அட்ரெஸா இருக்கும்னு தான் தோணுது. எதிராளி நாம் நினைப்பது போல் அத்தனை சாதாரணமானவன் இல்லை."

"அப்போ எப்படித் தான் பிடிக்கிறது? நல்லா இன்பர்மேஷன் கிடைச்சதுன்னு நினைச்சேன்." என்றார் கமிஷனர்.

"இது ஒன்னும் மோசமான இன்பர்மேஷன் இல்லை சார். நல்ல இன்பர்மேஷன் தான். கொள்ளையன் தான் தப்பிட்டோம்னு நினைச்சிக்கிட்டு இருக்கான். ஆனா போலீஸ் அத்தனை சாதாரணமானதும் இல்லை. அவன் ஒன்னும் சாட்சியே இல்லாத தப்பு பண்ணிட்டான்னும் அர்த்தம் இல்லை."

"உதாரணத்துக்கு, இந்த எவிடென்ஸ்ல இன்னோரு விஷயம் என்னான்னா மெசெஜ் அனுப்பப்பட்ட மொபைல் எண் மட்டுமில்ல. அது எந்த IMEI எண் உடைய செல்போனில் இருந்து வந்தது என்பது முதற்கொண்டு சேமிக்கப் படுதுன்ற விஷயம் பாவம் எதிராளிக்குத் தெரியாதுன்னு நினைக்கிறேன். மற்ற 400 போனும் ஸ்விட்ச் ஆப் ஆயாச்சு. ஆனால் மெசேஜ் அனுப்ப உபயோகித்த எண் மட்டும் உபயோகத்தில் இருக்குன்னு நினைக்கிறேன்.. கடைசியா அந்த எண்ணிலிருந்து 2 நாட்களுக்கு முன்பு வரை ஆபரேஷன் நடைபெற்றுக் கொண்டு இருந்திருக்கின்றது. ஆனால் அதன் பின் எந்த உபயோகமும் இல்லை.

எப்பவாவது அந்த போனை ஸ்விட்ச் ஆன் செய்தாக் கூட எனக்குத் தகவல் வந்துடும். மற்ற 400 தொலைபேசிகள் கப்சிப்னு இருக்கிறதும் ஆச்சரியம் தான்." என்றார் சங்கர்.

அவர் சொல்வதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் கமிஷனர்.

"சரி சார். நான் சென்னை கிளம்புறேன் இன்னைக்கு. இந்த செல்போன் பற்றிய விஷயத்தை மட்டும் கேர்புல்லா வாட்ச் பண்ணச் சொல்லுங்க. ஏன்னா நமக்கு இப்போதைக்கு இருக்கும் ஒரே தடயம் இந்த IMEI நம்பர் தான்."

ஆனால் பாவம் இதற்குள் அடுத்த கேஸ் வரும் என்று அவருக்குத் தெரிந்திருக்குமா என்ன?

(நினைவுகள் கழியும்)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு: 10

*"Watch this," says Srinivasan, a design engineer working with USC's Center for Neural Engineering. A thin wire runs between the needle and a tiny silicon chip hooked up to a boxy signal transmitter. He flips a switch, and a series of small waves shimmers across a nearby screen—waves that mean exactly zilch to me. Watch what? I wonder.*

முதலில் கதிரும் சரி, சந்தரும் சரி அந்தப் பெட்டி பற்றிக் கவலைப்படவில்லை. எப்படியும் இன்றோ அல்லது நாளையோ ஹைதராபாத்திலிருந்து வந்து அந்தப் பெட்டியைக் கேட்பார்கள் கொடுத்து விட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டார்கள். அன்று இரவோடு இரவாக பத்து பெட்டிகளையும் பிரித்து அந்த விலையுயர்ந்த கருவிகளைப் பொன் போல் பூப்போல் தாங்கிப் பொருத்தினர். காரியத்தில் கண்ணாயிருப்பவர்களுக்குப் பகலில்லை இரவில்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தனர் இருவரும்.

மறுநாள் காலை, சந்தருக்கு பொன்னாளாய் விடிந்தது. ஆம், அன்று அவனுக்கு புதிய கருவி மட்டுமின்றி, அதிசயமாக பிணத்துடன் உயிரும் (மூளை மட்டும் இறந்து), உயிருடன் பிணமும் (மூளை இயக்கத்தில் மற்ற உறுப்புகள் சிதிலமடைந்த) கிடைத்தன!

காலை 8 மணிக்கே மார்ச்சுவரியில் இருந்து போன் வந்தது. அனாதைப் பிணத்தைப் பெற்றுக் கொள்ளும் படி. இரவு வந்து பெற்றுக் கொள்வதாகச் சொன்னான் சந்தர். இரவு 9 மணி இருக்கும் மார்ச்சுவரியில் இருந்து பிணத்தைப் பெற்று வேனில் ஏற்றிக் கொண்டிருக்கும் போது மற்றொரு அழைப்பு.

அரசு மருத்துவர் செல்போனில் அழைத்து விபத்தில் முழு உடலும் இறந்தும் மூளை உயிருடன் இருக்கும் ஒரு உயிருள்ள உடலைக் கொடுப்பதாகச் சொன்னதும் சந்தருக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. அவன் மொத்த உடலும் உணர்வும் துள்ளி எழுந்தன. அன்றே அவனது சோதனை நடைபெறப் போகின்றது என்ற உற்சாகம் அவனைத் தொற்றிக் கொண்டது. கதிர், சந்தர் இருவரும் அவரைப் போய்ப் பார்த்து உயிருள்ள அந்தப் பிணத்தைப் பெற்றுக் கொண்டனர். மூன்று மணி நேரம் தான் மூளை தாக்குப் பிடிக்கும் என்று மருத்துவர் சொன்னதும், காலைக்குள் அவ்வுடலை மீண்டும் அவரிடமே சோதனை முடிந்து ஒப்படைப்பதாகக் கூறினான் சந்தர்.

அதன் பின் அவர்களுக்கு நேரம் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றியது. நேராகச் சேரிக்குச் சென்று பாலாவையும் முருகனையும் கூட்டிக்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

கொண்டனர். பின்னால் பிரேதங்களைப் பார்த்ததும் அவனுக்கு பகீரென்றது. கதிர் தான் வண்டி ஓட்டினான். சந்தர் முருகனின் அருகில் உட்கார்ந்து பயப்படத் தேவையில்லை என்றும், இது ஒரு சின்ன சோதனை தான் என்றும் ஆறுதல் படுத்திக் கொண்டே வந்தான்.

இரவு மணி 10.30. ஆள் நடமாட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது. இல்லங்களில் அனைவரும் டி.வி. சீரியலில் மூழ்கியிருந்தனர். கடைகள் யாவும் மூடப்பட்டுக் கொண்டிருந்தன. இவர்களின் லேபின் காம்பவுண்டிற்குள் வண்டி சென்றது.

மணி 11. கதிர், பாலா, கோமாவில் இருக்கும் ஒரு உடல் (மூளை இறந்தது, இதயம் துடிப்பது), மூளை மட்டும் இயக்கத்தில் கொண்ட அரசு மருத்துவர் கொடுத்த உயிர் மட்டும் இருக்கும் ஒரு உடல் இந்த நால்வரில் முதலில் கெட்டுப் போகும் வாய்ப்புடைய மூளை மட்டும் இயக்கத்தில் இருந்த உடலை சோதனைக்கு எடுத்துக் கொண்டான் சந்தர். அதன் தலையில் பல வயர்கள் மாட்டப் பட்டன. அவன் சொல்வதையெல்லாம் கதிர் மிகத்துல்லியமாகச் செய்து கொண்டிருந்தான்.

முருகன் இவர்கள் செய்வதை மிக ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மணி 12. உயிருள்ள அந்த மூளையைப் பல விதமாகப் படம் எடுத்தான் சந்தர். அது எவ்வாறெல்லாம் உடல் இன்னும் இருக்கின்றது என்ற நினைவில் கட்டளைகள் தருகின்றது என்று பார்த்தான். கணினியில் இத்தனையையும் சேமித்தான். அவனுக்கு இருந்த நேரம் குறைந்து கொண்டே வந்தது. அந்த ஏசியிலும் அவனுக்கு வியர்க்க ஆரம்பித்தது. இன்னும் அவன் எதிர்பார்த்த அந்த நியூரான் இழை பற்றிக் கண்டறியவில்லை. தான் கண்டது ஒரு வேளை கனவே தானோ என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் சிறிது நேரத்திலேயே அவன் நினைத்ததைக் கண்டதும் அவன் பிரமிப்பு சொல்லில் அடங்காததாக இருந்தது.

ஆனால் அதைப் படம் பிடித்த வேளையில் மூளை தன் கடைசிக் கட்டளையினைப் பிறப்பித்துப் பார்த்து விட்டு மரித்தது. கதிர் சந்தரைப் பார்த்தான். சந்தர் திருப்தியுடன் கட்டை விரலை உயர்த்தினான்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 9

*Srinivasan explains that the chip is sending electric pulses through the needle into the brain slice, which is passing them on to the screen we're watching.*

வெகுநாட்களுக்குப் பிறகு சென்னை வந்தார் சங்கர். வீட்டுக்கு வந்ததுமே பேட்டரியில் புல் ரீசார்ஜ் ஆனது போல் ஒரு தெளிவும் உத்வேகமும் பிறந்தது அவருக்கு. அவர் மனதுக்குள் சில எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. இப்போதைக்கு சுரேஷ் பாண்டேவை சந்தேகிக்க முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டார்.

காரணம் இந்த செல்போன் தான். செல்போன் தகவல் அனுப்பும் போது அந்த செல் சென்னையில் இருந்திருக்கின்றது. 2 நாட்களுக்கு முன் அந்த செல்போன் அணைத்து விட்டார்கள். அதற்கு முன்பு ஆனால் அந்த சிம்கார்டு வாங்கியதில் இருந்து வேறு யாருக்கும் பேசவே இல்லை. இந்த எஸ். எம்.எஸ். மட்டுமே.

இவ்வளவு ஆட்களை வைத்து இத்தனை பக்காவாக பிளான் போட்டு தன் வங்கியிலேயே கொள்ளை அடிப்பாரா பாண்டே? அதுவும் தன் கணக்கில் தொகையை மாற்றி? அவர் நினைத்தால் யார் கணக்கிலாவது தொகையை மாற்றிக் கொண்டு பணத்தை எடுத்து விட்டு தெரியாத மாதிரி இருந்திருக்கலாமே?

எனவே அவரை சந்தேகத்திலிருந்து அகற்றினார் சங்கர். இப்போதைக்கு இந்த செல்போன் IMEI எண் தான் தனக்குக் கிடைத்த ஒரே துருப்புச் சீட்டு. அதை விடக் கூடாது என்று நினைத்துக் கொண்டார். அந்த எண்ணுக்குரிய தயாரிப்பாளர் யார், அது என்ன மாடல், எங்கே விற்கப்பட்டது, யாருக்கு போன்ற தகவல்கள் சீக்கிரமே வரும் என்று நினைத்துக் கொண்டார்.

மனைவியின் கையால் கிடைத்த காபியை ரசித்து ருசித்தவரைப் பார்த்து சிரித்தார் அவர் மனைவி. "நீங்க எப்போ தான் எந்த யோசனையும் இல்லாம இருப்பீங்க? எப்போடா ரிடையர் ஆவீங்கன்னு இருக்கு எனக்கு" என்றார். "அப்பவும் உன் யோசனையாத் தான் இருப்பேன் நான்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் சங்கர்.

"உன் முகம் பார்த்துட்டேன்ல. இன்னைக்கு அநேகமா கண்டுபுடிச்சிருவேன்னு நினைக்கிறேன் இந்தக் கேஸை." என்றார் சங்கர். "ஆமா. நீங்களும் உங்க கேஸும். எதுவும் எங்கிட்ட சொல்லாதீங்க." என்ற படி எழுந்தார் சங்கரின் மனைவி. சிரித்துக் கொண்டே கிளம்பினார் சங்கர்.

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

காலை 11 மணி. ஜீனியஸ் சிஸ்டம்ஸ் அலுவலகம். பன்னாட்டு நிறுவனம் போல் இருக்கு கெட்டப்லாம் என்று நினைத்துக் கொண்டார் சங்கர். பெங்களூர் போல் சென்னையிலும் கம்ப்யூட்டர் நிறுவனங்கள் வளர ஆரம்பிச்சிருச்சே என்று வியந்து கொண்டார். பேங்குக்கே சாப்ட்வேர் எழுதுறாங்கன்னா பெரிய கம்பெனி தான் என்று நினைத்துக் கொண்டே எம்.டியைச் சந்திக்கச் சென்றார்.

வளவன். ஜீனியஸ் சிஸ்டம்ஸ் நிறுவன எம்.டி. வயது சங்கர் எதிர்பார்த்ததை விடக் குறைவு. 35 வயது தான் இருக்கும். இப்போல்லாம் இளைஞர்கள் எல்லாத் துறையிலும் எட்ட முடியாத உயரத்துக்குப் போறாங்க என்று நினைத்துக் கொண்டார் சங்கர். 'யெஸ் சார். ஹௌ கேன் ஐ ஹெல்ப் யூ" என்று கேட்டான் வளவன்.

"ஹா ஹா. நீங்க தான் சொல்லனும் மிஸ்டர் வளவன். உங்க கம்பெனி டெவலப் பண்ணிய சாப்ட்வேர் யூஸ் பண்ணி பெரிய மோசடியே நடந்திருக்கு. அதுவும் ஒரு மாட்யூல் ஆட் பண்ணி செக்யூரிட்டிய ப்ரீச் பண்ற அளவுக்கு மோசமா இருந்திருக்கு." என்று கேள்விக்குறியுடன் அவரைக் கேட்டார் சங்கர்.

முகத்தில் எந்த ஒரு அதிர்ச்சியோ, சலனமோ காட்டாத வளவன் ஆரம்பித்தான். "சார் எங்க இண்டஸ்ட்ரியில தான் எம்ப்ளாயி டர்ன் ஓவர் ஜாஸ்தி. யாரும் ஒரு வருசம் மேல நிலைக்குறதே இல்லை. என் கிட்ட இருக்குற ப்ரோகிராம்மர்ஸ் இப்படி பண்ணி இருக்க சான்ஸ் இல்ல. ஏன்னா நாங்க இந்த ஜென்பேங்கிங் சாப்ட்வேர் உருவாக்கி கிட்டத்தட்ட 4 வருசம் ஆச்சு. இப்போ ஒன்லி சின்னச் சின்ன அப்கிரடேசன்ஸ் தான் பண்ணிட்டு இருக்கோம். எங்க சாப்ட்வேர் மட்டும் குறை சொல்லவே முடியாது நீங்க. பேக் எண்ட் டேட்டாபேஸ் பற்றிய விபரம் தெரியாம சோர்ஸ் கோடு இருந்தாலும் ஒன்னும் செய்ய முடியாது. தவிர உங்க கேஸ் பற்றி நானும் பார்த்தேன். அட்மின் பாஸ்வேர்ட் யூஸ் பண்ணி ஒருத்தர் உள்ளே போன பின்னால என்ன வேணா செய்யலாம். மாட்யூல் இன்ஸ்டால் பண்ணித் தான் செய்யனும்னு இல்லை. சாவியைத் தொலைச்சிட்டு பூட்டு செஞ்சவனை வந்து நீங்க கேள்வி கேட்டா எப்படி சார்? பூட்டு உடைபடலையே. சரியான பாஸ்வேர்டு கொடுக்காட்டாலும் உள்ளே போயிருந்தா என்னைச் சொல்லலாம் நீங்க. ஆனா, இங்கே சரியான பாஸ்வேர்டு கொடுத்து உள்ளே போயிருக்காங்க. எங்க சாப்ட்வேர்ல பிரச்னைன்னு என்னால் ஒத்துக்கவே முடியாது. புது மாட்யூல் யார் வேணா எழுதலாம் சார். வேணும்னா கம்பெனி ஆரம்பிச்சதில் இருந்து இப்போ வரை வந்த புரோகிராம்மர்ஸ் லிஸ்ட் தரச் சொல்றேன்." என்றான் வளவன்.

சிறிது நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருந்தார் சங்கர். "ஓகே மிஸ்டர் வளவன்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

என் முதற்கட்ட விசாரணை இத்துடன் முடிச்சிக்கிறேன். மேலும் தகவல் வேணும்னா உங்களை த் தொடர்பு கொள்றேன். ஹெல்ப் பண்ணுங்க." என்ற படி எழுந்தார்.

"ஷ்யூர் சார்." என்ற படி அவனும் எழுந்தான்.

வெளியேறி நடந்தார் சங்கர். பின் பாக்கெட்டில் வைத்திருந்த கர்சீப்பை எடுக்கும் போது அவரது பர்ஸும் கீழே விழுந்தது. கார்பெட் தரையில் எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அவர் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்.

"சார்! உங்க பர்ஸை விட்டுட்டுப் போறீங்க பாருங்க. இந்தாங்க சார்." என்ற குரல் கேட்டுத் திரும்பினார் சங்கர்.

கையில் பர்ஸுடன் சிரித்த படி நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து, "தேங்க் யூ வெரி மச் மிஸ்டர்..." என்று இழுத்தார் சங்கர்.

அவன் தன் சிரிப்பைக் கொஞ்சமும் மாற்றாமல், "கதிர், கதிரேசன், சீப் ப்ரோஜெக்ட் மேனேஜர்" என்றான்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 8

*“The difference in the waves’ modulation reflects the signals sent out by the brain slice,” he says. “And they’re almost identical in frequency and pattern to the pulses sent by the chip.” Put more simply, this iron-gray wafer about a millimeter square is talking to living brain cells as though it were an actual body part.*

"நல்ல வேளைடா. மூளை இறக்குறதுக்குள்ள நமக்குத் தேவையான விஷயம் கிடைச்சாச்சு" என்றான் மகிழ்ச்சியில் சந்தர்.

அடுத்ததாக இன்னும் இதயம் துடித்துக் கொண்டு இருந்தும் மூளை இறந்து போன அந்த அனாதைப் பிரேதத்தின் மூளையை அதே போல் சோதனை செய்ய ஆரம்பித்தான் சந்தர். இது அவன் அடிக்கடி பார்த்த ஒரு சோதனை தான். ஒவ்வொரு பாகமும் மூளைக்கு எவ்வாறு சமிக்ஞைகள் அனுப்பி ஓய்ந்து போகின்றன. திரும்ப பதில் சமிக்ஞை கிடைக்காவிட்டால் எப்படி இறந்ததாய் எடுத்துக் கொள்கின்றன என்று கணினியில் சேமித்துக் கொண்டிருந்தான் சந்தர். சந்தர் அசைக்கச் சொன்ன படி உடலை இயந்திரத்தில் நகர்த்திக் கொண்டிருந்தான் கதிர்.

மூன்றாவதாக, பாலாவை அமரச் சொன்னான் சந்தர். பாலா சோதனை நாற்காலியில் உட்கார பயங்கரமாய் முரண்டு பிடித்தாள். முருகனை எதிரில் நிற்கச் சொன்னார்கள். அவன் வந்து அவளைச் சமாதானப் படுத்தி அமரவைத்தான்.

வெளியே விடிந்திருந்ததா, இரவா என்ற கவலை அங்கிருந்த யாருக்குமே இல்லை. கிட்டத்தட்ட 4 மணி நேரம் அசராமல் பாலாவின் மூளையினைப் பல கோணங்களில் அலசி ஆராய்ந்தான் சந்தர். முருகனை வைத்து அவளுக்கு பிஸ்கட் கொடுத்தால் எங்கு சிக்னல் செல்கின்றது. அவள் ஏதாவது அவளது பாஷையில் முருகனிடம் கேட்டால் மூளையில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்று மாற்றி மாற்றிப் பார்த்து, ஒரு கட்டத்தில் பாலா தூங்கி விட, அப்போதும் என்னென்ன மூளையில் நிகழ்கின்றது என்று சளைக்காமல் கணினியில் சேமித்துக் கொண்டிருந்தான் சந்தர். ஏதொ ஒரு வெறியில் இருப்பவன் போல் தோன்றியது.

இறுதியில் கதிர். முருகனை பாலாவை அழைத்துக் கொண்டு கிளம்பச் சொன்னார்கள். ஆனால் அவன் கிளம்பவில்லை. "நான் இங்கயே இருக்கேன் சார். எல்லாம் முடியட்டும். முடிஞ்சதும் நீங்களே கொண்டு போய் விடுங்க" என்று சொல்லிவிட்டான். கதிரின் மூளை ஆரோக்கியமான மூளை என்பதால் அவனுடையதை மாடலாக வைத்துக் கொண்டான் சந்தர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

திடீரென்று "வலது கைக் கட்டை விரலை அசை" என்பான். சின்னச் சின்னக் கணக்குகள், நகைச்சுவை, பழைய ஞாபகங்கள், பழகிய நபர்கள், கோபமூட்டிய எதிரிகள் என்று என்னென்னவோ கேட்டான் சந்தர். அத்தனைக்கும் பதிலளித்துக் கொண்டிருந்தான் கதிர். அவனது மூளையில் ஏற்படும் சிறு சிறு மாற்றங்களும் அங்கே கணினியில் துல்லியமாகப் பதிவாகிக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் சோதனை ஓடியது என்பதை வெளியே வந்தே உணர்ந்தார்கள் கதிரும் சந்தரும். ஆம் மீண்டும் இருட்டியிருந்தது. ஒரு நாள் முழுதும் சோதனை நிகழ்த்திய களைப்பில் நால்வரும் அங்கேயே தூங்கி விட்டார்கள்.

மறுநாள் காலை சந்தரை எழுப்பியது செல்போன் ஓசை. அரசு மருத்துவர் தாம் தூம் என்று குதித்தார். காலையில் பிணத்தைக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டு வராததற்கு. இன்று காலை வந்து தருவதாக உறுதி அளித்து விட்டு, கிளம்பினார்கள். இரண்டு பிணங்களையும் உரிய இடத்தில் சேர்ப்பித்தார்கள். பாலாவையும் முருகனையும் திரும்ப சேரியில் கொண்டு போய் விட்டார்கள்.

மீண்டும் லேபுக்கு வந்தார்கள். "என்னடா நீ என்ன நினைக்கிறே?" என்றான் கதிர்.

"ம். 25% வேலை முடிஞ்சதுடா. இனி இந்த டேட்டா எல்லாத்தையும் அனலைஸ் பண்ணி நான் சில முடிவுகள், சில மருந்துகள் தயாரிக்கப் போறேன்." என்றான் சந்தர்.

பேசிக் கொண்டே இருந்த சந்தரின் பார்வையில் அந்தப் பெட்டி பட்டது. "டேய் இது இன்னும் இங்கேயே தான் இருக்கா? ஏண்டா அவங்க வந்து வாங்க வரல?" என்றான்.

"அட, கவர்மெண்ட் ரிசர்ச் செண்டர்னா எப்படி இருக்கும்னு தெரியாதாடா? மறந்திருப்பாங்கடா. நாம் போன் பண்ணிச் சொல்லலாம்" என்றான் கதிர்.

"வேண்டாம்டா. நாமளே கொண்டு போய்க் கொடுக்கலாம். அந்த ரிசர்ச் செண்டர்ல சீப் மகேந்தர் ராவ் இந்த பீல்ட்ல கில்லாடிடா. அவர் கிட்ட சந்தேகம் கேக்குறதுக்கு இது தான் சரியான சந்தர்ப்பம். நாம நாளைக்கே போலாம்டா நம் வேனிலேயே" என்றான் சந்தர்.

இப்படித் தான் வம்பை யாராவது விலை கொடுத்து வாங்குவார்களா என்ன?

(நினைவுகள் கழியும்)

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

# கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு : 7

*Ted Berger, Srinivasan's boss and the mastermind behind the tangle of coils and electrodes, has arranged this demonstration to provide a small but profound glimpse into the future of brain science. The chip's ability to converse with live cells is a dramatic first step, he believes, toward an implantable machine that fluently speaks the language of the brain—a machine that could restore memories in people with brain damage or help them make new ones.*

இந்த மென்பொருள் நிறுவன விசாரணையும் பிசுபிசுத்துப் போனதில் கொஞ்சம் சலிப்புடனே இருந்தார் சங்கர். செல்போன் பற்றிய தகவலும் எதுவும் வந்து சேரவில்லை. எங்கு போனாலும் முட்டுச் சந்தில் போய் முட்டுவதாகவே இருக்கின்றதே இந்தக் கேஸ், என்று நினைத்துக் கொண்டார்.

இது வரை தனக்குக் கிடைத்த எந்தத் தகவலும் உருப்படியானதாக இல்லை என்று நொந்து கொண்டார். எதிராளியின் சாமர்த்தியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை அவரால். இது போன்ற சமயங்களில் அவருக்குத் தோன்றுவதெல்லாம், நாம் தான் எதையோ பார்க்க மறந்து விட்டோமே தவிர, குற்றவாளி தடயம் விடாமல் செல்ல முடியாது என்றே நினைப்பார். ஆனால் இந்தக் கேசைப் பொருத்தவரை, அவன் மிக நேர்த்தியாய்ச் செய்திருப்பதாய்த் தோன்றியது.

இப்படி யோசித்துக் கொண்டே சென்னையில் இரண்டு நாட்கள் இருந்தார் சங்கர். வீட்டுச் சாப்பாடு அவரைக் கொஞ்சம் மென்மைப் படுத்தியிருந்தது. அவ்வப்போது கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்திருப்பார். தலையை உதறிக் கொள்வார். அவரைப் பார்த்து அவர் மனைவிக்கு சிரிப்பாய் இருந்தது. "எவனோ ஒருவன் செஞ்ச குற்றத்துக்கு நீங்க ஏங்க இப்படி படாத பாடு பட்றீங்க?" என்றார். "நாம சாப்பிட்றதே இந்தப் பாட்டில் தான்ம்மா" என்று பேசிக் கொண்டிருக்கும் போது தான் அவருக்கு சென்னை கமிஷனர் அலுவலகத்திலிருந்து போன் வந்தது.

தகவலைக் கேட்ட மாத்திரத்தில் அவர் உடலில் விறைப்பேறியது. "அப்படியா? எப்போ சார்? இதோ கிளம்பிட்டேன்" என்று கிளம்பி விட்டார். அவர் மனைவி இதே வார்த்தையை எத்தனை முறை கேட்டிருப்பார்?! "போச்சுடா! புது கேஸா?" என்று சங்கரின் முகத்தைக் கேள்விக் குறியுடன் பார்த்தார். "ம்" என்று ஒற்றை எழுத்தில் பதில் சொல்லி விட்டுக் கிளம்பினார் சங்கர்.

சங்கர் போய்ச் சேருவதற்குள் பெருங்கூட்டம் கூடியிருந்தது. போலீஸ் ஜீப்புக்களும், கட்சிக்காரர்களும், பொதுமக்களும், உறவினர்களும் குவிந்த வண்ணம் இருந்தன. ஆம், மத்திய அமைச்சர் கந்தசாமி திடீரென மாரடைப்பில் போய்ச்

சேர்ந்திருந்தார். இந்த ஒரே அமர்வில் ரொம்ப அதிகமான உயரத்தை எட்டியவராயிற்றே! கட்சித் தலைமையின் கண் பார்வை இவர் பக்கம் பெறுவதற்கு எத்தனையோ கோடி கொடுத்தார் என்று பேசிக் கொள்வார்கள். சரி, அதெல்லாம் நமக்கெதற்கு?

"என்ன சார் என்ன ஆச்சு? ஹார்ட் அட்டாக்ல தான மந்திரி இறந்தாரு?" என்றார் சங்கர் கமிஷனரிடம்.

"ஆமா மிஸ்டர் சங்கர். அதில் ஒன்னும் சந்தேகமே இல்லை. டாக்டர் அப்படித் தான் சொல்றார். ஆனால் மாரடைப்புக்கான காரணம் தான் நம்மை யோசிக்க வைக்குது" என்றார் கமிஷனர்.

"என்ன சார் காரணம்?" என்ற சங்கர். என்னை ஏன் கூப்பிட்டுருக்காங்க? இவங்களே பார்த்துக்கலாமே இதை என்று நினைத்துக் கொண்டார்.

அவரது யோசனை என்ன என்று தெரியாமல் இருந்தால் கமிஷனராக ஆக முடியுமா என்ன? கமிஷனர், "சங்கர், நீங்க இங்க தான் இருக்கீங்கன்னு எனக்கு தகவல் வந்தது அதான் உங்களையும் வரச் சொன்னேன். மற்ற படி இந்த இன்வெஸ்டிகேசன் நீங்க பார்க்கப் போறதில்ல. ஜஸ்ட் உங்களோட சஜ்ஜெசன் சொல்லுங்க. அவ்ளோ தான்" என்றார்.

தொடர்ந்தார் கமிஷனர். "மந்திரி இறந்து 3 மணி நேரம் தான் ஆகுது. உள்ளே யாரையும் எதையும் நாங்க தொட விடல. அவர் பாடி ஹால்ல படுக்க வைக்கப் பட்டிருக்கு. எங்களுக்கு என்ன சந்தேகம்னா, மந்திரியோட கடைசி போன் கால் தான். உங்களுக்குத் தான் தெரியுமே இப்ப உள்ள சி.எம். பத்தி. எல்லா மந்திரியோட போன்ஸும் கண்காணிக்கப் படுது. மந்திரி கடைசியா பேசியது அவரோட மச்சினன் கிட்ட. அவர் பேசிய கடைசி வார்த்தைகள் "நாம மோசம் போய்ட்டோம்டா". அடுத்த ஐந்து நிமிசத்துல அவர் இறந்து போய்ட்டார்" என்றார் கமிஷனர்.

"சார் அந்த மச்சினனைப் பிடிச்சி ரெண்டு இழுப்பு இழுத்தா எல்லாம் வெளியே வந்திரும் சார்" என்றார் சங்கர்.

"நோ மிஸ்டர் சங்கர். அவர் மச்சினனும் கட்சியில் பெரிய ஆள் தான். பதவி இல்லை. அவ்ளோ தான். இப்போ நமக்குத் தேவை மந்திரி பேசிய பேச்சிற்கு என்ன அர்த்தம்? இதற்கும் அவர் சாவுக்கும் சம்பந்தம் உண்டா?" என்பது தான். என்றார்.

"சரி சார். நான் கொஞ்சம் அந்த ரூமைப் பார்க்கட்டுமா?" என்று கேட்டார் சங்கர்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

"தாராளமா" என்றார் கமிஷனர்.

உள்ளே நுழைந்த சங்கர், ஹாலில் படுக்க வைக்கப்பட்டிருந்த மந்திரியின் உடலின் மீது விழுந்து அழுது கொண்டிருந்த அவரது மனைவியைப் பார்த்தார். அதெல்லாம் அவருக்கு சகஜமே. எந்த சந்தடியும் இன்றி அவரது பெர்சனல் அறைக்குச் சென்றார் சங்கர். உள்ளே ஏற்கனவே இன்ஸ்பெக்டர்கள் இருந்தனர். இவரைப் பார்த்ததும் விறைப்பாய் எழுந்து நின்று சல்யூட் வைத்தனர்.

"எதுவும் இம்ப்ரூவ்மெண்ட் இருக்கா?" என்றார் சங்கர்.

உதட்டைப் பிதுக்கினார்கள் காவலாளிகள்.

மந்திரியின் பீரோவைத் திறந்தார் சங்கர். அவரது உடைகள் ஒரு வரிசையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஒரு பக்கம் பைல்களாய் இருந்தது. சொத்து டாக்குமெண்டுகளாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டார் சங்கர். எதையும் தொடவில்லை.

ஆனால் அவர் கண்களைக் கவர்ந்தது ஒரு புத்தம் புதிய டைரி. சிவப்பு நிறத்தில் இருந்தது. அதைக் கையில் எடுத்தார். "2006ம் ஆண்டு டைரி" என்று வாய் விட்டுச் சொன்னார். மெல்லப் பக்கங்களைத் திருப்பினார். புத்தம் புதியதாய் ஒன்றுமே எழுதாமல் இருந்தது டைரி. சரி என்று மீண்டும் வைக்கப் போனவர், ஏதோ ஞாபகத்தில் மீண்டும் எடுத்தார். "இப்போ நடக்குறது 2007ம் வருசம், எதுக்கு 2006ம் வருச டைரி இங்கே இருக்கு?" என்றவர் தன் ஆராய்ச்சி புத்தியைக் காட்ட ஆரம்பித்தார்.

(நினைவுகள் கழியும்)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு : 6

*Remedying Alzheimer's disease would, if Berger's grand vision plays out, be as simple as upgrading a bit of hardware. No more complicated drug regimens with their frustrating side effects. A surgeon simply implants a few computerized brain cells, and the problem is solved.*

"பழைய வருச டைரி ஏன் இங்கே இருக்கனும்? அதில் தான் எதுவுமே எழுதலியே?" என்று யோசித்துக் கொண்டே இருந்தவர், "இந்த டைரியில் ஏதோ இருக்கு. இல்லைன்னா இது ஏன் இத்தனை பத்திரமா இங்கே வைக்கனும்?" என்று மீண்டும் மீண்டும் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டார்.

டைரியைக் கையில் வைத்துத் தட்டிக் கொண்டே இருந்தார். சட்டென்று அவருக்குத் தோன்றியது. டைரியின் சிவப்பு நிற உறையைக் கழட்டினார். ஆஹா! அதன் பின்னே ஒரு 20 இலக்க சங்கேதக் குறியீடு இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே இருந்தார் சங்கர். அது என்ன எண் என்று விளங்கவில்லை. எதுவும் முக்கியமான எண்ணாக இருக்கக் கூடும். பேங்க் லாக்கர் எண்ணா? அல்லது கிரெடிட் கார்டு எண்ணா? என்று யோசனையில் ஆழ்ந்தார்.

அந்த டைரியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு கிளம்பி விட்டார். நேராக கமிஷனரிடம் சென்றார். அவர் முதலமைச்சர் வரும் நேரம் என்று பரபரப்பில் இருந்தார். அவரிடம் சென்று விஷயத்தைச் சொல்லிய சங்கர், அந்த எண்ணைத் தான் குறித்துக் கொள்வதாகவும், அந்த எண் குறித்து அவரது மச்சினனிடம் தகுந்த முறையில் விசாரிக்குமாறும், எதுவும் தகவல் தெரிந்தால் தனக்குத் தெரிவிக்குமாறும் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டார்.

முக்கிய தடயம் தந்ததற்கு கமிஷனரும் அவருக்கு நன்றி சொன்னார்.

சங்கர் சென்னையில் இருந்த அடுத்த இரு நாட்களிலும், ஜீனியஸ் சிஸ்டம்ஸ் புரோகிராமர்கள் லிஸ்டை வாங்கிக் கொண்டு அந்தப் பட்டியலில் தன் கவனத்தைச் செலுத்தினார். அதில் பலர் வெளி நாடுகளில் வேலை கிடைத்துச் சென்றிருந்தனர். சிலர் வேறு மென்பொருள் நிறுவனங்கள் துவங்கி இருந்தனர். பத்து சதவீதம் பேர் கூட வெகுநாட்களாய் அங்கே வேலை செய்யவில்லை. எப்படி இருந்தாலும் வளவன் சொன்னது போல் பாஸ்வேர்டு சரியாகக் கொடுத்து உள்ளே சென்றது அவரை இப்போது மீண்டும் குழப்பத்திலேயே ஆழ்த்தியது.

அடுத்து எங்கே செல்வது என்ற ஒரு லட்சியமும் இல்லாத நிலை இதுவரை

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

அவருக்கு வந்ததில்லை. மீண்டும் டில்லி திரும்ப வேண்டியது தானா? அங்கே போய் என்ன செய்யப் போகின்றோம்? விசாரிக்க நினைத்த அனைவரிடமும் விசாரித்தாயிற்று. முக்கோணத்தின் அனைத்துப் பகுதிகளும் உடைந்து நொறுங்கி விட்டதே! பாஸ்வேர்டு தெரிந்தவர் டில்லியில் இருக்கின்றார். மென்பொருள் நிறுவனம் சென்னையில் இருக்கிறது. கொள்ளையடித்ததோ பெங்களூரில். அதுவும் ஒருவர் இல்லை சொல்லி வைத்தாற்போல் 400 பேர். 400 பேர் கொண்ட குழு வைத்திருப்பவன் எவ்வளவு பெரிய ஆளாய் இருக்கனும்? அவனுக்கு 1 கோடி பத்துமா? என்ற யோசனையில் இப்போது விழ ஆரம்பித்திருந்தார் சங்கர். இப்போது தான் கேஸ் சரியான பாதைக்குத் திரும்புவதாகக் கணித்துக் கொண்டார். 1 கோடி பத்தாது. அவன் இன்னும் எங்காவது கொள்ளை அடிப்பான். அல்லது முயற்சி செய்வான். அடுத்த முறை தவற விடக் கூடாது என்று எண்ணிக் கொண்டார். மறுநாள் டில்லிக்குத் திரும்ப எத்தனித்திருந்தார்.

அத்தோடு மந்திரியின் விஷயம் முடிந்ததாகத் தான் கருதினார் சங்கர். ஆனால் அடுத்தடுத்து வந்த தகவல்கள் அவரைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியதோடு, எவ்வளவு பெரிய எதிராளியிடம் தான் சிக்கியிருக்கிறோம் என்ற அயர்வைத் தந்தது.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 5

*Down the hall, Berger rises to greet me in his office. An imposing man with a shock of gray hair, Berger, 56, has the thick build of an aging athlete and the no-nonsense manner of a CEO. Can a chunk of silicon really stand in for brain cells? I ask. "I don't need a grand theory of the mind to fix what is essentially a signal-processing problem," he says. "A repairman doesn't need to understand music to fix your broken CD player."*

அன்று காலை சங்கர் டில்லி விமானத்தில் பயணித்திருக்க வேண்டியது. ஆனால் அவரது பயணத்தை ரத்து செய்யுமளவுக்கு இருந்தது சென்னை கமிஷனர் அலுவலகத்தில் இருந்து வந்த தகவல்கள். கமிஷனரே அவருக்கு போன் செய்து வரச்சொல்லி இருந்தார்.

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம். கமிஷனர் அமர்ந்திருக்க எதிரே சங்கர் அமர்ந்திருந்தார். அந்த டைரி கமிஷனர் முன்னால் இருந்தது.

கமிஷனர் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"முதலில் மிஸ்டர் சங்கர், உங்களுக்குத் தான் நாங்க நன்றி சொல்லனும். இந்த டைரியைச் சந்தேகப் பட்டு தோண்டி எடுத்ததில் தான் இந்தக் கேஸ் வெளிச்சத்துக்கு வந்தது. இந்த எண் பற்றி மந்திரியின் மச்சினனிடம் விசாரித்தோம். முதல்வரே நேரில் மந்திரியின் மச்சினனை அழைத்து காவல் துறைக்குத் தேவையான ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்றும் இல்லாவிட்டால் கட்சி அவரைக் காப்பாற்றாது என்றும் கட்டாயமாகச் சொன்னதன் பிறகே அவரது மச்சினனிடம் இருந்து தகவல்கள் வெளி வர ஆரம்பித்தன. இந்த சங்கேத எண் ஒரு ஸ்விஸ் பேங்க் கணக்கு எண்ணாகும். இந்தக் கணக்கு மிக ரகசியமானது. மந்திரிக்குச் சொந்தமான கணக்கு. அவரது மனைவிக்குக் கூடத் தெரியவில்லை. அவரது மச்சினன் மட்டுமே அறிந்திருக்கிறார்."

"விஷயம் என்னவென்றால், இப்போது இந்தக் கணக்கில் இருந்த ஐந்து கோடி ரூபாய் மாயமாக மறைந்து விட்டது என்பது தான்." என்றார் கமிஷனர்.

சங்கரால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. இப்போது தான் நம் கேஸில் 1 கோடி ரூபாய் காணாது. இன்னும் அடுத்த கொள்ளை எங்கே? என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஒரு வேளை அதுவும் இதுவும் தொடர்புடைய கேஸா? என்று மனதுக்குள்ளேயே கேட்டுக் கொண்டார்.

"அது எப்படி சார் மாயமாய் மறையும்? எங்கே போயிருக்கு அவ்வளவு பணமும்?"

கொல்லத் தான் நினைக்கிறேன்.

என்றார் சங்கர்.

"அதைக் கண்டறிவது ரொம்பக் கடினம் சங்கர். ஏற்கனவே இந்தக் கணக்கு மிக ரகசியமானது. இதைப்பற்றி அறிய நாம் அரசாங்க ரீதியாகக் கூட அந்த நாட்டு வங்கியிடம் அணுக முடியாது. அதற்கான பதில் கிடைக்காது. ஆனால் நம்மிடம் இந்த சங்கேத எண் இருப்பதால், அவர்களின் வெப்சைட்டில் சென்று இந்த எண்ணைக் கொடுத்து ஸ்டேட்மெண்ட் வாங்கி இருக்கின்றோம். அதன் படி மொத்தமாக இருந்த ஐந்து கோடி தொகையும் இத்தாலிக்குக் கை மாறி இருக்கின்றது. பணத்தைக் கைமாற்ற வேறு ஒரு பாஸ்வேர்டு கொடுக்க வேண்டும் போல் இருக்கின்றது. இத்தாலி நாட்டு கரன்சியில் செலுத்தப்பட்டிருப்பதால் தான் அதுவும் சொல்ல முடிகின்றதே ஒழிய, அது இத்தாலிக்குத் தான் சென்றது என்று நம்மால் நிரூபணம் செய்ய முடியாது." என்றார் கமிஷனர்.

"சார். எனக்கென்னவோ நான் ஏற்கனவே பார்த்துட்டிருக்குற கேஸுக்கும் இதுக்கும் சம்பந்தம் இருக்கும்னு தான் நினைக்கிறேன். ஒரு சின்ன லிங்க் தான் இருக்கனும். அது மட்டும் கிடைச்சதுன்னா ஈசியா நெருங்கிடலாம் குற்றவாளியை."

"எனக்கு சில தகவல்கள் தெரியணும் சார். இப்போ இத்தாலியில் இருந்து பெரிய தொகைக்கு ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தவங்களோட லிஸ்ட், எப்போ செஞ்சாங்க, எவ்வளவு தொகை, என்ன வந்தது போன்ற எல்லாத் தகவலும் தெரியணும். இந்தியாவில் இருந்து இத்தாலியில் செட்டில் ஆயிருக்கும் பெரிய ஆட்கள் யார்னும் பார்க்கலாம். இது ஏதோ பெரிய கூட்டம் போல் தெரியுது சார்" என்றார் சங்கர்.

அவர் சொன்ன அந்த சின்ன லிங்க் வெகு சீக்கிரத்திலே வந்த் ஒட்டும் என்று அவரே எதிர்பார்க்கவில்லை!

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு: 4

*What the chip is saying is anyone's guess—the content of the conversation is beside the point, Berger continues. It's straight mechanic-talk from the man who has created a prototype of the world's first memory implant, basically a hardware version of the brain cells in your hippocampus that are crucial to the formation of memory. The chip is meant to replace damaged neurons in the same way other prosthetic devices stand in for missing limbs or improve hearing. "If we can mimic even 10 percent of the brain's efficiency and power, it would be humongous," Srinivasan tells me later.*

மந்திரி விசயம் என்பதாலோ என்னவோ மிகுந்த பரபரப்புடன் இயங்கினார்கள் காவல் துறையினர். இத்தாலிக்கும் இந்தியாவுக்கும் இடையே கடந்த ஓராண்டில் நடைபெற்ற அத்தனை வர்த்தகத் தொடர்பு பற்றிய தகவல்களும் இப்போது சங்கர் மற்றும் கமிஷனரின் கைகளில் இருந்தன. 50 லட்ச ரூபாய்க்கும் குறைந்த தொகைக்குச் செய்யப் பட்ட வர்த்தகத் தொடர்புகள் பற்றிப் பொருட்படுத்தாமல் பெரிதாய் நடந்த நிகழ்வுகள் மட்டும் கண்காணிப்பது என்று முடிவு செய்தார் சங்கர்.

அப்படி இருந்தும் 25 பெரிய ஷிப்மெண்டுகள் இருந்தன. சரி ஒவ்வொன்றாய்ச் சரிபார்த்து விட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டார் சங்கர். ஆனால் அவர்களிடம் போய் என்ன கேட்பது? எல்லாரும் பக்காவாக பில் போட்டு, RBI அப்ரூவல் பேமெண்டுகளையும் காட்டினால் என்ன செய்ய முடியும்? நமக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாமே அப்படியானவை தானே? ஆனால் இதில் குறிப்பிடாமல் வேறு வகையிலும் இறக்குமதியோ ஏற்றுமதியோ நிகழ வாய்ப்பில்லை. அண்டர்கிரவுண்ட் வேலை பார்த்தால் தான் ஏதாவது தெரியவரும் என்று முடிவுக்கு வந்தார்.

இந்தப் பட்டியலை மூன்றாய்ப் பிரித்தார் சங்கர். இவர்களில் யாரெல்லாம் அடிக்கடி இத்தாலி நாட்டுடன் வியாபாரப் போக்குவரத்து வைத்திருக்கின்றார்கள் என்று ஒரு லிஸ்டும், மிகப் பெரிய நிறுவனங்கள், பல வருடங்களாக இந்த வர்த்தகம் செய்பவை என்று ஒரு லிஸ்டும், எப்போதாவது ஒரே ஷிப் மெண்டில் பெரிய வர்த்தகம் செய்தவர்கள் என்று ஒரு லிஸ்டும் தயாரித்தார்.

இதில் இரண்டாவது லிஸ்டில் கிட்டத்தட்ட 15 நிறுவனங்கள் விலகின. ஆக, இப்போது அவரிடம் இருந்த முதல் மட்டும் மூன்றாவது லிஸ்டின் படி 10 நிறுவனங்கள் சிக்கின. முதல் பட்டியலில் இருந்த 4 நிறுவனங்களை நேரில் சென்று விசாரிப்பது என்றும், மீதி இருக்கும் 6 நிறுவனங்களை மற்ற காவலர்கள் கொண்டு விசாரிக்கச் செய்வது என்றும் முடிவு செய்தார்.

கொல்லத் தான் நினைக்கிறேன்.

அந்த முடிவின் படி ஒவ்வொரு நிறுவனமாக ஏறி இறங்க ஆரம்பித்தார்.

முதலில் ஒரு டெக்ஸ்டைல் ஏற்றுமதியாளரைச் சந்தித்தார். அவருக்கு இத்தாலிக்கு பொருளை அனுப்புவது மட்டுமே தொழில் என்றும், தன் உற்பத்தி முழுமையும் இத்தாலி நாட்டுக்குச் செல்வதாகவும், தன் தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டினார் அந்தத் தொழிலதிபர். பார்த்ததுமே சங்கருக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லை.

அடுத்ததாக அவர் பட்டியலில் இருந்தது ஹைதராபாத் நியூரோ ரிசர்ச் செண்டர். இது அரசு நிறுவனமாக இருக்கின்றதே? இங்கு கண்டிப்பாகச் செல்லத் தான் வேண்டுமா? இதற்காக ஹைதராபாத் போகவா? என்று அலுத்துக் கொண்டார்.

ஆனால் அங்கே தான் இந்தக் கேஸின் முடிச்சு அவிழும் என்பதை அவர் அறிவாரா என்ன?

(நினைவுகள் கழியும்)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு : 3

*Berger's research team—an all-star roster of neuroscientists, mathematicians, computer engineers and bioengineers from around the country—has so far managed to reproduce only a minute amount of brain activity. Their chip models fewer than 12,000 neurons, compared with the 100 billion or so present in a human brain. Yet researchers within the field say that even this small number represents a stunning achievement in the field of neuro-engineering. "It's the type of science that can change the world," says Richard H. Granger, Jr., a professor of brain sciences who leads the Neukom Institute for Interdisciplinary Computational Sciences at Dartmouth College. "Replicating memory is going to happen in our lifetimes, and that puts us on the edge of being able to understand how thought arises from tissue—in other words, to understand what consciousness really means."*

வேனில் கிளம்பினார்கள் சந்தரும் கதிரும். கதிர் வேனை ஓட்ட சந்தர் அருகில் அமர்ந்திருந்தான். பின்னால் ஹைதராபாத்தில் தரவேண்டிய பெட்டி இருந்தது. ஒரு அப்பாயிண்ட்மெண்ட் கூட கிடையாது இருவரிடமும். இருந்தும் அந்தப் பெரிய நிறுவனத்தில் தலைவரைச் சந்திக்க முடியும் என்ற ஒரு குருட்டு நம்பிக்கையில் இருந்தான் சந்தர்.

அரைநாள் பிரயாணத்தில் வேன் ஹைதராபாத்தை நெருங்கியது. பிரயாண அலுப்பில் தூங்கிய சந்தரை எழுப்பினான் கதிர்.

"டேய் இப்படியே போனா நம்மை உள்ளே கூட விடமாட்டாங்கடா. இங்கே ஒரு லாட்ஜில் ரூம் எடுத்துத் தங்குவோம். வேனை நிறுத்தி விட்டுக் குளிப்போம். நீட்டாக ஒரு டாக்ஸி புடிச்சி அங்கே போய் நம்ம விவரம் சொல்லி அவங்க சரின்னு சொன்னா உள்ளே போய் பார்க்கலாம். இந்தப் பெட்டி டெலிவரியும் கொடுப்போம். மதிக்கலைன்னா, நாம பாட்டுக்கு திரும்பிப் போயிருவோம் பெட்டியோட. அதுவரைக்கும் இந்தப் பெட்டி வேன்லயே இருக்கட்டும்" என்றான் கதிர்.

அவன் சொன்னதும் சரியாகப் பட்டது சந்தருக்கு. எனவே ஒரு லாட்ஜில் ரூம் எடுத்துத் தங்கினார்கள் இருவரும். களைப்புத் தீரத் தூங்கி எழுந்தார்கள். மறுநாள் காலையில் ரிசர்ச் செண்டர் செல்லத் தயாரானார்கள்.

இதோ நெருங்கி விட்டார்கள். கேட்டிலேயே இவர்களுக்கு வில்லங்கம் ஆரம்பித்தது. காவலாளி உள்ளே விட மறுத்தான். சந்தரும் என்னென்னவோ சொல்லிப் பார்த்தான். ஏதேனும் அப்பாயிண்ட்மெண்ட் அல்லது ஐடி கார்ட் இல்லாமல் உள்ளே செல்ல முடியாது என்று சாதித்தான் காவலாளி. கதிர் யோசித்தான். இது என்ன பெரிய கோட்டையா? அரசு நிறுவனம். இதில் நுழையத் தேவை பணம். பேசிக் கொண்டே இருப்பதில் அர்த்தமே இல்லை. உயிரையே விலை கொடுத்து வாங்கியாச்சு. இந்தக்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

காவலாளி என்ன? என்று நினைத்தான். சந்தரை நிறுத்தச் சொல்லி விட்டு தனக்குத் தெரிந்த அரைகுறைத் தெலுங்கில் பேசினான் கதிர். ஏற்கனவே அப்பாயிண்ட்மெண்ட் லெட்டர் இருந்ததாகவும், தொலைந்து விட்டதாகவும், மகேந்தர் ராவ் காத்துக் கொண்டிருப்பார் என்றும் வேண்டுமானால் 1000 ரூபாய் பணம் தருகின்றேன் என்றும் சொன்னதும் தான் காவலாளி மசிந்தான். "இதை முன்னாடியே செஞ்சிருக்கலாம்" என்றான்.

அப்பாடா என்று உள்ளே நுழைந்தார்கள் இருவரும். அவனே நேராக வழிகாட்டினான். தலைவர் உள்ளே தான் இருக்கின்றார் என்றும், குறித்த நேரத்தில் சரியாகப்பார்ப்பார் என்றும் நேராகச் சென்று அவரது பெர்சனல் அசிஸ்டண்ட்டைப் போய்ப் பார்க்குமாறும் சொன்னான் காவலாளி.

கதிர் சந்தரிடம் தானே அவரது பி.ஏ. விடம் பேசுவதாகவும், உள்ளே போகும் போது மட்டும் சந்தர் பேசட்டும் என்றும் முடிவு செய்து கொண்டனர். பி.ஏ. ஒரு ஐம்பது வயது மதிக்கத் தக்கவராக இருந்தார். இத்தனை பெரிய நிறுவனத்தில் ஒரு 1000 ரூபாய் கொடுத்தால் தலைவரின் காரியதரிசியையே பார்கக் முடியுதே என்று நினைத்துக் கொண்டான் கதிர். ஏசியின் சில்லென்ற சத்தம் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. அவர் ஏதோ கம்ப்யூட்டரில் பார்த்துக் கொண்டிருந்தார். கதிர் விறுவிறுவென்று அவரிடம் சென்றான். சுருக்கமாகத் தாங்கள் வந்த விஷயத்தைச் சொன்னான். முதலில் ஏதோ கிறுக்கன் என்று தான் கதிரை நினைத்தார் அந்தக் காரிய தரிசி. ஆனால் விஷயம் முக்கியமானதென்றும், அந்தப் பெட்டியில் மிக முக்கியமான கருவிகள் இருக்கலாமென்றும் தலைவரைப் பார்க்க அனுமதிக்க வில்லை என்றால் அந்தப் பெட்டி கிடைக்காது என்றும் சொன்னதால், ஒரு நிமிடம் பொறுங்கள் என்று உள்ளே சென்றார் பிஏ.

சிறிது நேரத்தில் வெளியே வந்தார் அந்த பி.ஏ. உள்ளே வரச் சொல்றார். உங்களுக்கு 5 நிமிசம் தான் டைம். என்றார் பிஏ. சந்தர் தன் கனவு மனிதர் மகேந்தர் ராவைப் பார்க்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சியுடன் எழுந்தான்.

உள்ளே நுழைந்ததும் மிகுந்த மரியாதையுடன் வணக்கம் செய்தான் சந்தர். கண்ணசைப்பில் ஏற்றுக் கொண்டார் மகேந்தர் ராவ். எடுத்ததுமே தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு சந்தேகங்களைக் கேட்க ஆரம்பித்தான் சந்தர். அவருக்குப் பிடித்த சப்ஜெக்ட் ஆனதால் அவரும் இவர்கள் எதற்கு வந்தார்கள் என்றே மறந்து விட்டார். இரண்டு முறை பி.ஏ. வந்து எட்டிப் பார்த்த போது கூட நான் தான் இருக்கச் சொல்லிருக்கேன் என்று அனுப்பி வைத்து விட்டார். "உங்களைப் போல் இளைஞர்கள்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

இந்தத் துறைக்கு வந்து இப்படி ஆராய்ச்சியில் இறங்குவது மிகுந்த சந்தோசமளிக்கின்றது" என்றார்.

அப்புறம் தான் ஆரம்பித்தான் சந்தர். இந்த மாதிரி ரிசர்ச் செண்டர் பெயரில் பில் போட்டு தாங்கள் சில கருவிகள் வாங்கியதாகவும், அதில் ஒரு பெட்டி தவறியதாகவும், அதைத் தாங்கள் கொண்டு வந்திருப்பதாகவும் கூறினான்.

இது வரை விஞ்ஞானியாகவே பேசிக் கொண்டிருந்த மகேந்தர் ராவ் அந்த நிறுவனத்தின் தலைவராக பேச ஆரம்பித்தார். "வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங். எங்க செண்டர் பில் போட்டு நீங்க இறக்கிட்டீங்களா? என்ன உளர்றீங்க?" என்றார்.

"சார் வாட்ச் யுவர் வேர்ட்ஸ். உங்க ஜீப்ல வந்த ஆளுங்களே இறக்கித் தந்தாங்க சார். அவங்க தான் விட்டுட்டுப் போய்ட்டாங்க" என்றான் கதிர் கடுப்புடன்.

"அப்படிலாம் நடக்கச் சான்ஸே இல்ல. நீங்க போகலாம்." என்றார் மகேந்தர் ராவ் கோபமாக.

"வாடா கிளம்புவோம்." என்றான் கதிர்.

அப்போது தான் பி.ஏ. எட்டிப் பார்த்தார். "என்ன?" என்றார் மகேந்தர் ராவ். "சங்கர்னு ஒருத்தர் ப்ரம் போலீஸ். ஹை அபிசியல். உங்களைப் பார்க்கனுமாம்" என்றார் பி.ஏ. "ஒரு ஐந்து நிமிசம் கழிச்சி வரச்சொல்லு. இன்னைக்கு வர்றதெல்லாம் இப்படித் தான் இருக்கு" என்றார் மகேந்தர் ராவ்.

இருவரும், சரி அந்தப் பெட்டியில் இருப்பதும் நமக்குத் தான் என்று நினைத்துக் கொண்டனர்.

தலைவரின் அறையில் இருந்து வெளியேறினர். சங்கர் பி.ஏ. சீட்டின் எதிரே அமர்ந்திருந்தார். கதிரைத் தான் சட்டென்று பார்த்தார். இவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே. இங்கே எங்கே இருக்கின்றான்? என்று நினைத்துக் கொண்டிருந்தார். கதிரும் அவரைப் பார்த்தான் ஒரு விநாடி. இவர் போலீஸா என்று அவனுக்குள் ஒரு கேள்விக் குறி. "ஒரு ஐந்து நிமிசம் வெயிட் பண்ணுங்க சார். சார் இப்போ கூப்பிடுவாங்க" என்றார் பி.ஏ.

மெல்லத் தலையசைத்தார் சங்கர். அவர் மனதில் இவனை எங்கே பார்த்தோம்? என்றே ஓடிக் கொண்டிருந்தது.

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

அங்கே உள்ளே மகேந்தர் ராவோ, "என்னடா இப்படிக் கோட்டை விட்டு வந்திருக்கீங்க. பாக்ஸ் ஒன்னு சின்னப் பசங்க கையில் சிக்குற மாதிரியா செய்றது? எனக்கு அந்தப் பொட்டி வேணும். அந்தப் பசங்களும் வேணும். உயிரில்லாமக் கிடைச்சா நல்லது" என்று யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார்.

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 2

*Ted Berger has spent the past decade engineering a brain implant that can re-create thoughts. The chip could remedy everything from Alzheimer's to absent-mindedness—and reduce memory loss to nothing more than a computer glitch*

ஒரு நிமிடம் காத்துக் கொண்டிருந்திருப்பார் சங்கர். அவரை உள்ளே அழைத்தார் மகேந்தர் ராவ்.

உள்ளே சென்றதும், பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார். இத்தாலியில் அவர்கள் தற்போது வாங்கிய இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பற்றிக் கேட்க ஆரம்பித்தார். மகேந்தர் ராவின் நெற்றி லேசாகச் சுருங்கியது. அப்போது தான் சங்கரின் செல்பேசியில் அழைப்பு வந்தது.

"சார். நாம் தேடிக் கொண்டிருந்த IMEI எண் கொண்டிருந்த செல்போன் இப்போ ஆன் செய்யப் பட்டிருக்கு. அதிலே இருந்து இப்போ பேசிருக்காங்க." என்றதும் சங்கரின் உற்சாகம் எல்லை மீறியது.

"எந்த ஊரில் எந்த டவர்?" என்றார் சங்கர்.

"ஹைதராபாத் ஊர் சார். நியூரோ ரிசர்ச் செண்டர் டவர்" என்ற பதிலைக் கேட்டதும் ஆடிப் போய் விட்டார் சங்கர்.

"ஹேய். நான் இப்போ இங்கே தான் இருக்கேன். யாருன்னு தெரியலியே. எதுக்கும் நீங்க வாட்ச் பண்ணிட்டே இருங்க" என்று செல்போனை அணைக்கும் போது பர்ஸை சிரித்துக் கொண்டே எடுத்துக் கொடுத்த கதிரேசன் ஞாபகம் வந்தது. அந்த சாப்ட்வேர் கம்பெனியில் ப்ராஜெக்ட் மேனேஜர்ன்ல சொன்னான். அவனோட செல்போனா இருக்குமோ? அவனோட செல்போன் இப்போ இந்த டவருக்குள்ள தானே இருக்கும்? என்று எண்ணிக் கொண்டே மகேந்தர் ராவிடம், "சார் இப்போ வந்துட்டுப் போனாங்களே அவங்க யாரு?" என்றார்.

"யாரோ ரெண்டு பைத்தியக்காரங்க சார். ஏதோ ரிசர்ச் பண்றாங்களாம். எங்க ரிசர்ச் செண்டர் பேர்ல பில் போட்டு இத்தாலியில் இருந்து ஏதோ அண்டர்கிரவுண்ட்ல இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாங்கி இல்லீகலா ரிசர்ச் பண்றாங்க போல. ஏதோ பெட்டி பெட்டின்னு சொல்லிக்கிட்டு இருந்தாங்க. நானே எங்க டிபார்ட்மெண்ட்ல இருந்து நானே கம்ப்ளைண்ட் கொடுக்கலாம்னு இருந்தேன்." என்றார் மகேந்தர் ராவ்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

கைக்கெட்டிய தூரத்தில் இருக்கும் அவர்களைப் பிடிக்கும் அவசரத்தில் இருந்தார் சங்கர். "ஓ. அப்படியா? அவங்களைப் பற்றிய தகவல் தெரிஞ்சா உடனே போலீஸ்க்குத் தகவல் கொடுங்க." என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

வெளியே வந்ததுமே வளவனைத் தொடர்பு கொண்டார் சங்கர். "எனக்கு உங்க டீமில் சீப் ப்ராஜக்ட் மேனேஜர் மிஸ்டர் கதிரேசன் பற்றிய முழுத் தகவலும் உடனே வேண்டும். தர முடியுமா?" என்றார். வளவன் ஆச்சரியத்துடன், "யாரு? கதிரா?" என்றான். "யெஸ் ப்ளீஸ்." என்றார் சங்கர். "உடனே தர்றேன் சார், என்ற வளவன் கதிரின் முழு டேட்டாபேஸையும் சங்கர் சொன்ன எண்ணுக்கு பேக்ஸ் செய்தான். அரை மணி நேரத்தில் ஹைதராபாத்தில் அத்தனை காவல் நிலையத்தின் பேக்ஸ் மிஷினிலும் கதிரின் போட்டோ வெளி வந்தது. அடுத்த அரை மணி நேரத்தில் அனைத்து காவல் அதிகாரிகள் கையிலும் படம் இருந்தது.

சந்தரும், கதிரும் இதைப் பற்றி எதுவும் அறியாதவர்களாக தங்கள் அறைக்குச் சென்று சேர்ந்தார்கள். கிளம்ப வேண்டியது தான் என்று சொன்ன சந்தரிடம், "என் பிரண்டு ஒருத்தன் இருக்காண்டா. வர்றியா போய் பார்த்துட்டு வந்துடலாம். இவ்ளோ தூரம் வந்துட்டு பார்க்காமப் போனேன்னு தெரிஞ்சா அங்கே வந்து அடிப்பான்." என்றான் கதிர்.

"போகும் போது நான் டிரைவ் பண்றேண்டா. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்குறேன். நீ போய்ட்டு வாடா" என்றான் நிலவரம் புரியாமல்.

இருவரும் தங்கியிருந்த ஓட்டலிலும் விசாரிக்க காவலர்கள் வந்தனர். ரிசப்சனில் உள்ளவர்கள் அடையாளம் சொல்லி, அந்தப் புகைப்படத்தில் இருப்பவன் வெளியே போயிருப்பதாகவும், அவனுடைய நண்பன் அறையில் இருப்பதாகவும் சொன்னார்கள். சந்தரைக் கைது செய்தது காவல்துறை. வேனையும் பறிமுதல் செய்தது.

கதிர் வந்ததும் கைது செய்யத் தயாராக இருந்தது போலீஸ். கதிர் ஒரு மணி நேரம் கழித்து திரும்ப வந்தான். வேன் லாட்ஜில் இல்லை என்றதுமே துணுக்கென்றது அவனுக்கு. உடனே சந்தருக்கு செல்போனில் அழைத்தான். வேறு யாரோ எடுத்தார்கள். டக்கென்று கட் பண்ணினான்.

ஏதோ பிரச்னை என்று புரிந்து கொண்டான். உடனே தப்பிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொண்டான்.

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

(நினைவுகள் கழியும்)

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நினைவு : 1




*Anatomy of a Memory: The hippocampus is part of the brain's central processing center. It helps analyze sight, sound, taste, smell and touch and stores the data as memories.*

சங்கர் ரொம்பச் சந்தோசமாய் இருந்தார். கதிரேசன் தப்பித்ததைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்படவே இல்லை. யாரென்று தெரிந்தாலே போதும் அவருக்கு. அப்புறம் இந்த ஒளிந்து விளையாடும் விளையாட்டெல்லாம் அவருக்கு அத்துப்படி. மேலும் இருவரில் ஒருவனைப் பிடித்தாலே இன்னொருவனைப் பிடித்த மாதிரி தான் என்பதும், இருக்கும் ஒருவனிடம் இருந்து கறக்கும் விஷயங்களை விட ஒளிந்திருக்கும் ஒருவன் பயத்தில் செய்யும் குழப்படிகள் இன்னும் வசதி அவருக்கு.

சந்தர். சென்னை கொண்டு வரப்பட்டிருந்தான். எந்த இடம் என்றெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை. முற்றிலும் இருட்டு. எங்கிருந்தோ வரும் சிறு ஒளி. அவனைப் பிடித்ததிலிருந்து மூன்று நாட்கள் ஆகியிருந்தன. தான் ஏன் பிறந்தோம் என்று நினைக்கும் அளவுக்கு அடி வாங்கியிருந்தான். உதடுகள் கிழிபட்டிருந்தன. யார்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

அடித்தார்கள் என்றும் தெரியவில்லை. எங்கே அடித்தார்கள் என்றும் அறியவில்லை. எதற்காக என்றும் புரியவில்லை. வலியின் உச்சங்களைப் பார்த்திருந்தான்.

சங்கருக்கு அடித்து தகவல் வரவழைப்பதே பிடிக்காது. இருந்தாலும் இந்தக் கேஸில் வேறு வழியில்லை. மூன்று நாட்களாயிற்று. இந்தச் சந்தர் சொன்னதே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றான். அவனுடைய வீடு, லேப் எல்லாம் சோதனை செய்தாயிற்று. அனைத்தும் பறிமுதல் செய்தாயிற்று. பணம் கொடுத்தது கதிரேசன் என்று சொல்கின்றான். ஆனால் எப்படி வந்தது என்றால் தெரியாது என்கின்றான். 400 x 25000 ஸ்கீம் என்று கதிர் சொன்னதாய்ச் சொல்கின்றான். அதன் படி பார்த்தால் இவனுக்கு இந்தக் கொள்ளையில் பணத்தைச் செலவிட்ட வகையில் தான் பங்கு இருப்பது போலவும், கொள்ளை அடித்தது கதிர் மட்டுமே என்பது போலவும் தெரிகின்றது. இந்தக் கதிர் எங்கே தான் போனான்? என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

கதிர். ஹைதராபாத்தில் தப்பித்து முதலில் அவனது நண்பனின் இல்லத்துக்கே சென்றான். மறுநாள் காலையில் தலைப்புச் செய்தியில் வந்த செய்தியைப் பார்த்ததும் தான் அவர்கள் எத்தகைய பெரிய வழக்கில் சிக்கியிருக்கின்றார்கள் என்று உணர்ந்தான்.

ஆம் அன்றைய தலைப்புச் செய்தி இது தான். "கோடிக் கணக்கில் கொள்ளை. பெட்டி நிறைய நவீன ரக துப்பாக்கிகளுடன் வேன் பிடிபட்டது. கொள்ளையரில் ஒருவன் தப்பி ஓட்டம்" என்று இவனது படத்துடன் இருந்தது. அந்தப் பெட்டிக்குள் உண்மையில் துப்பாக்கிகள் தான் இருந்ததா? அல்லது போலீஸ் வழக்கைத் திசை திருப்ப இப்படி சோதிக்கின்றதா? என்று யோசித்துப் பார்த்தான்.

போலீஸ் சொல்வது உண்மையாய் இருந்தால் மகேந்தர் ராவ் ஏதோ பெரிய தகிடுதத்த வேலை செய்து கொண்டிருக்கின்றார் என்பது அவனுக்குப் புலனானது. இத்தாலியில் இருந்து மருத்துவ ஆராய்ச்சிக் கருவிகள் என்ற பெயரில் ஆயுதங்களைக் கடத்துவதாய் இருக்க வேண்டும். ஆனால், அந்த ஆளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே? பெட்டி அவருக்குத் தேவையென்றால் நைச்சியமாகப் பேசி நம்மிடமே வாங்கியிருக்கலாமே? என்று நினைத்தான்.

சந்தரை எப்பாடு பட்டும் மீட்க வேண்டும் என்று தனக்குத் தானே சூளுரைத்துக் கொண்டான். மகேந்தர் ராவைக் கண்காணிக்க ஆரம்பித்தான். வெளியே பெரிய ஆராய்ச்சி நிறுவனத் தலைவராய் இருக்கும் அவரது தனி வாழ்க்கை எப்படிப்பட்டது என்று கண்டறியக் கிளம்பினான். அதற்காக இந்த முப்பது நாட்களில் அவன் பட்ட பாடுகள் தான் எத்தனை எத்தனை? அவன் கண்டறிந்த ஒவ்வொரு விஷயமும்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

அவனுக்குப் பேரதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் விளைவிப்பதாய் இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல காவல்துறையின் வீரியமும் குறைய ஆரம்பித்தது. சங்கருக்கே சலித்துப் போய் விட்டது. இந்தக் கதிரேசன் அப்படி எங்கே தான் போய்விட்டான். ஹைதராபாத்தைச் சல்லடையாய்த் தேடியாயிற்று. சென்னையில் பெருவலை விரித்து வைத்திருக்கின்றார்கள். இருந்தும் ஒரு மாதமாய் அவனைப் பிடிக்க முடியவில்லை. ஒரு வேளை தப்பித்து இத்தாலிக்குச் சென்று விட்டானோ? என்று நினைக்க ஆரம்பித்தார். சந்தர் கொள்ளையடித்தான் என்று அவரால் நிரூபிக்கவே முடியாது. இந்தக் கேஸ் கோர்ட்டுக்கு வந்தால் காவல்துறை சந்தி சிரிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

சந்தர் மேல் கொள்ளை கேஸைப் போட்டால் நிரூபிக்க வேண்டும். அதனால் இப்போதைக்கு சந்தர் மேல் போட்டிருக்கும் கேஸ், அவன் சட்ட விரோதமாக பிணங்களை வாங்கி ஆராய்ச்சி செய்தான் என்றும், சட்டவிரோதமாக கருவிகளை இறக்குமதி செய்தான் என்று மட்டுமே. அதற்கு 15 நாள் காவல் கொடுத்திருந்தார்கள். அவன் தந்தையும் முழுமுயற்சியுடன் அவனை ஜாமீனில் மீட்கப் பாடுபட்டார். அடுத்த வாய்தாவில் எடுத்து விடலாம் என்று வக்கீல் உறுதி அளித்திருந்தார்.

சந்தரால் நம்பவே முடியவில்லை. எப்படியும் ஓரிரு நாட்களில் கதிர் வந்து நம்மை மீட்டு விடுவான் என்று தான் முதலில் நினைத்தான். ஆனால் இந்தக் கொள்ளை பற்றி ஒருநாள் சங்கர் அவனிடம் விளக்கிய போது இத்தனை பெரிய கொள்ளை நடத்தித் தன் ஆராய்ச்சி நடக்க வேண்டுமா? என்னிடம் சொல்லியிருந்தானேயானால் நிச்சயம் செய்திருக்க அனுமதித்திருக்க மாட்டேனே? இப்போது எங்கே போனான் என்றும் தெரியவில்லையே? இது தான் உண்மையான நட்பா? என்று எண்ணிக் கொண்டான்.

அத்தனை கேள்விகளுக்கும் விடையாய் கதிர் வருவானா? நாயகன் சங்கரா? கதிரா? சந்தரா? மகேந்தர் ராவா?

**(நினைவு கழியும், உறையும் பின் நிறையும்!)**

ரத்தினகிரி (http://www.rathinagiri.in)

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

நினைவு : 0

கதிர் முதலில் செய்த காரியம் பெங்களூர் சென்றது தான். ஹைதராபாத்தும், சென்னையும் அவனுக்கு அவ்வளவு பாதுகாப்பு இல்லை என்பதை அறிந்திருந்தான். தவிர அங்கே தான் அவனுக்கு கணினித் துறை நண்பர்கள் அதிகமாய் இருந்தனர். மிக நெருங்கிய நண்பர்கள் பத்து பேரைக் கூட்டினான். தன் நிலை முழுமையும் அவர்களிடம் விளக்கினான். மகேந்தர் ராவைப் பற்றிய தகவல்களை அவனுக்குத் தேடிக் கொடுப்பதில் அவர்கள் தான் முழுமையுமாய் உதவி புரிந்தார்கள்.

மகேந்தர் ராவ் ஆந்திராவின் ஒரு கிழக்குக் கடற்கரைப் பகுதிச் சேரியில் பிறந்தவர் என்ற ஒரு தகவல் தான் முதலில் அவனுக்குக் கிடைத்தது. எப்படி முன்னேறினார் என்பதை அவரது பெயரை இணையத்தில் தேடி உருப்போட்டான். அவரை விட அவரது கதை இப்போது அவனுக்குத் தெரிந்திருந்தது. பதினோரு பேரும் முதலில் ஆந்திராவில் அவரது கிராமத்துக்குச் சென்றனர். அந்தக் கிராமம் இருந்த நிலை, அங்குள்ள மக்கள் அவரை மதிக்கும் விதம் ஆகியனவற்றை ஆச்சரியத்துடன் பதிந்து கொண்டான். அவரைப் போய்ப் பார்க்கும் எந்த ஒரு இளைஞரையும் அவர் கை தூக்கி விடுவார் என்று கேள்விப்பட்டான். வாரம் ஒருமுறை தன் கிராமத்துக்கு அவர் எங்கிருந்தாலும் வருவார் என்பதையும் அறிந்து கொண்டான்.

அந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை அவனது நண்பர்களில் 5 பேர் வெவ்வேறு பெயர்களில் உதவி கேட்கப் போயிருந்தனர். அவரது கிராமத்து வீடு. அவர் வந்ததும் அனைவரும் மரியாதையாய் எழுந்து நின்றனர். வந்து உட்கார்ந்தார் மகேந்தர் ராவ். இளைஞர்களுடன் தனித்தனியாகப் பேசினார். அரசாங்கத்தை நம்பி ஒரு பிரயோசனமும் இல்லையென்றும், நாமாகவே தான் முன்னேறிக் கொள்ள வேண்டும் என்றும் புத்திமதிகள் சொன்னார். நீங்கள் என்ன சொன்னாலும் செய்கின்றோம் ஐயா என்று தான் அனைவரும் உறுதியளித்தனர். தைரியமானவர்கள் என்னிடம் வாருங்கள் என்ற வார்த்தைகள் அவரிடம் இருந்து வந்தது.

கூட்டம் கலைந்தது. இருந்தாலும் சிலர் மட்டும் போகாமல் மிஞ்சுவதை அந்த ஐந்து நண்பர்களும் உணர்ந்தனர். தாமும் அவ்வாறு போகாமல் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டனர். ஒரு கட்டத்தில் மகேந்தர் ராவ், நீங்களெல்லாம் தைரியசாலிகளா என்று கேட்டார் மிஞ்சியவர்களைப் பார்த்து. ஆமாம் என்று சின்னதாய் கோஷம் போட்டார்கள் அவர்கள். உயிரையும் கொடுப்பீர்களா? என்று கேட்டார் அவர். கொஞ்சம் கொஞ்சமாய் வெறி ஏறிக் கொண்டிருந்தது. ஒரு நக்சலைட் கூட்டம் எப்படி

நடத்தப் படுகின்றது என்பதைக் கண்கூடாய்க் கண்டனர் அந்த நண்பர்கள்.

ஒவ்வொருவருக்கும் வேறு புதிய பெயர்கள் வழங்கப்பட்டன. பயிற்சி என்ற பெயரில் காட்டுக்குள் அழைத்துச் செல்லப் பட்டனர் அனைவரும். பகலில் குளம் வெட்டுவது போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இரவில் தூக்கம் போக மிகுதி நேரத்தில் துப்பாக்கிகளைக் கையாளுவது சொல்லித் தரப்பட்டது. போலீஸ் எல்லாம் என்ன செய்கின்றார்கள் இந்தப் பகுதியில் என்று நினைத்துக் கொண்டான் கதிர்.

இது ஒரு பெரிய கூட்டமாய் இருக்கின்றது. அடி மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை இவர்களின் ஆட்கள் இருக்கின்றார்கள். இவர்கள் மண்ணின் மைந்தர்களாய் இருக்கின்றார்கள். யாரையும் தேவையில்லாமல் கொடுமைப் படுத்துவதில்லை என்பதையும் கண்டறிந்தான். மகேந்தர் ராவ் பேசிய பேச்சு அவன் கையில் ரிக்கார்டாகி இருந்தது.

"நண்பர்களே, இந்த தேசத்தில் லஞ்சம் தான் ஆண்டு வருகின்றது என்பதை அறிவீர்கள். நான் எத்தனை பெரிய அறிவாளி என்றாலும் இந்தத் தலைவர் பதவிக்கு வர எத்தனை போராடினேன் என்பது எனக்குத் தான் தெரியும். அந்த நிலை இனி வரக்கூடாது என்று போராடப் புறப்பட்டேன் நான். நீங்கள் துணை புரிந்தீர்கள். நாம் அனைவரும் கை கோர்த்தோம். விளைவு? நாம் செய்யும் இந்தப் பணி. நமது இந்தத் திட்டத்தால் எந்த ஒரு நல்ல தனி மனிதனும் பாதிக்கப் படக் கூடாது என்பதை நாம் சத்தியப் பிரமாணமாய் எடுத்துக் கொண்டுள்ளோம்.

இந்த வங்கிகளின் சட்டத்தைப் பாருங்கள். எங்கள் வங்கியில் சேமியுங்கள் என்று அனைத்து வங்கிகளும் அழைப்பு விடுக்கின்றன. சென்று மக்களும் பணத்தைப் போடுகின்றார்கள். அப்படிப் போட்டு விட்டு வேறு வேலை பார்த்துக் கொண்டு மறந்து விட்டவர்களின் பணத்தை வைத்து வட்டி என்ற பெயரில் சம்பாதிக்கும் வங்கிகள் என்ன செய்கின்றன? இந்தக் கணக்குகளை முடக்கி வருடா வருடம் 100 ரூபாய் சர்வீஸ் சார்ஜ் என்று பணத்தைக் கரைக்கின்றன. அதை நிர்வகிக்கும் அதிகாரிகளுக்கு சம்பளம் மட்டும் கூடிக் கொண்டே போகின்றது. பாவம். வங்கியை நம்பிப் பணம் போட்டவன் கதி? மறந்தால் என்ன நடக்கும் என்று தெரிந்து கொள்ளட்டும் என்று தான் அப்படிப்பட்ட கணக்குகளில் இருந்து 1 கோடி ரூபாய் சமீபத்தில் எடுக்கப்பட்டு நம் கிராமத்தில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. மக்களின் பணம் மக்களுக்காக மட்டுமே செலவிடப் பட வேண்டும்.

சமீபத்தில் எங்கள் ஆராய்ச்சி மையத்தில் ஒரு புதிய விஷயம்

## கொல்லத் தான் நினைக்கிறேன்.

கண்டறியப்பட்டிருக்கின்றது. அதன் மூலமாக யார் மூளையிலும் என்ன இருக்கின்றது என்பதைக் கண்டறிய முடியும். அதை இப்போதைக்கு மனிதர்கள் மேல் பயன்படுத்தக் கூடாது. ஆராய்ச்சியிலேயே இருக்கின்றது. ஆனால், நான் அதை உபயோகித்து அந்த மந்திரி கந்தசாமியின் ஸ்விஸ் வங்கிக் கணக்கு நம்பர், பாஸ்வேர்ட், வங்கி அதிகாரியின் பாஸ்வேர்டு போன்றவற்றை எளிதில் அறிந்து கொண்டேன். அவர்களுக்கே அது தெரியாது. நான் கொடுக்கும் மருந்தில் அரை மணி நேரம் மயக்கமாய் இருப்பார்கள். என் கையில் இருக்கும் கையடக்கக் கருவியில் அவர்களது நினைவுகள் சேமிக்கப் பட்டு விடும்! அதைக் கண்டறியவும் கணினியில் என்ன வேண்டுமானாலும் செய்யவும் நம்மிடம் பெரும்படையே இருக்கின்றது.

எனவே மனம் தளராதீர்கள். நாம் ஒரு அரசாங்கம் நடத்துகின்றோம் என்பதை மறவாதீர்கள். நீங்கள் எல்லாம் தேசக் காவலர்கள் என்பதையும் மறவாதீர்கள்.

நம் வெற்றி நம் கையில் என்னும் தாரக மந்திரத்தைக் கைவிடாதீர்கள்" என்று ஓடிக் கொண்டிருந்தது டேப்.

கதிர் ஆச்சரியத்தில் உறைந்திருந்தான். விட்டால் இவனே அவருடன் சேர்ந்து விடுவான் போல் இருந்தது. எல்லா விஷயமும் அவனுக்குத் தெள்ளத் தெளிவாய்த் தெரிய வந்தது.

அவன் கண்டறிந்தது அனைத்தையும் சரியாக டாக்குமெண்ட் செய்து அதைக் காப்பி வைத்துக் கொண்டு, சங்கரிடம் சென்று சேர்க்குமாறு ஒரு கவரும் கடிதமும் தயார் செய்து தன் நண்பனிடம் கொடுத்து விட்டான் கதிர்.

மறுநாள் காலை. சங்கர் வீட்டுப் பால் பாக்கெட்டின் அடியில் அந்தக் கவர் இருந்தது. சங்கரின் மனைவி அதை எடுத்து அவரை எழுப்பிக் கையில் கொடுத்தார்.

"திரு சங்கர் அவர்களுக்கு, கதிரேசனின் வணக்கம். இந்த டேப்பில் இருக்கும் விஷயங்களைக் கேளுங்கள். என்னுடைய இந்த ஒரு மாத உழைப்பில் நான் கண்டறிந்தவை இவை. இவை உங்களுக்கு உதவக் கூடும். என் நண்பனுக்கும், எனக்கும் இந்தக் கொள்ளையில் கிஞ்சித்தும் சம்பந்தம் இல்லை என்பதை இவை விளக்கும். மேலும் விளக்கம் தேவையாயின் அதைத் தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

எங்கே வந்த் சரணடைய வேண்டும் என்று எனக்குத் தகவல் தரவும். என்னுடைய தற்போதைய செல்பேசி எண் ....." என்று முடிந்திருந்தது கடிதம்.

கொல்லத் தான் நினைக்கிறேன்.

மொத்தக் கதையையும் திரும்ப ஓடவிட்டார் சங்கர். அவருக்கு ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனது. உண்மையில் கதிரேசன் தான் இந்தக் கேஸை முடித்துக் கொடுத்திருக்கின்றான் போல இருக்கின்றதே என்று நினைத்துக் கொண்டார்.

ஆந்திர நக்சலைட் கும்பல் ஒன்றின் வேலையா இது? இத்தனை சாமர்த்தியமாகி விட்டார்களா அவர்கள்? என்று எண்ணம் ஓடியது. அன்றே கதிரேசனின் எண்ணுக்கு அழைத்தார் சங்கர். இனிய குரலில், "வணக்கம் சங்கர் சார். பர்ஸ் பத்திரமாக இருக்கா?" என்றது எதிர்க்குரல்.

அன்று இரவு 9 மணி. சிறையில் இருந்து சந்தர் துவண்டு போய் வெளியே வந்திருந்தான். கமிசனர் அலுவலகம். கமிசனர், உயரதிகாரிகள், சங்கர் முன்னிலையில் கதிர் முழுமையாய் விளக்கினான். மகேந்தர் ராவ் ஒரு நக்சலைட் தலைவர் என்றும், அவரின் கீழ் பெரும்படை இயங்குகின்றது என்றும் அவரது தற்போதைய கண்டுபிடிப்பு குறித்தும் அறிவித்தான். அது சாத்தியமே என்று சந்தரும் ஒப்புக் கொண்டான்.

எல்லாம் பேசி முடித்து விட்டு "எங்களுக்கும் இந்தக் கொள்ளைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாத போது சந்தரை இத்தனை கொடுமைக்குள்ளாக்கியதற்கு காவல்துறையைச் சும்மா விடப் போவதில்லை என்று கமிஷனர் முன்னாலேயே சவால் விட்டான்.

சங்கர் பேச ஆரம்பித்தார். "தம்பி நீங்கள் ஆவேசமாய்ப் பேச நியாயம் இருக்கின்றது. நாங்கள் எத்தனையோ நிரபராதிகளையும் அடிக்க நேரிடுகின்றது. அது தெரிய வரும் போது எங்கள் மன நிலை எப்படி இருக்கும் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். அதனாலேயே எனக்கு யாரையும் அடிக்க மனம் வருவதில்லை. ஆனால் இந்தக் கேஸைப் பொருத்தவரை எனக்கு வேறு வழி தெரியவில்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இப்போது நீங்கள் எப்படி ஒரு கோடி சேகரித்தீர்கள் என்று தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றீர்கள்" என்றார்.

"இந்தக் கொள்ளையில் எங்களுக்கு சம்பந்தம் இல்லை என்று அறிந்த பின்னர் நான் எதைப் பற்றியும் எதற்கு விளக்கமளிக்க வேண்டும்? அதை எனது நண்பனின் ஆராய்ச்சி நல்ல படியாய் முடிவடைந்ததும் தான் சொல்வதாய் அவனிடமே வாக்களித்திருக்கிறேன். இப்போது சொல்ல முடியாது" என்றான் கதிர்.

இப்போது சந்தர் நெகிழ்ந்த குரலில் பேச ஆரம்பித்தான். "எனக்கு இப்படி ஒரு நண்பன் கிடைத்ததற்குப் பெருமையடைகின்றேன். என் ஆராய்ச்சி பற்றி சிறிது விளக்கக்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் மூளையில் பில்லியன் கணக்கில் நியூரான் இழைகளின் மூலம் செய்திகள் பரிமாறப் படுகின்றன. ஒரு பக்கம் மூளையின் மின்னதிர்வில் இருந்து எவ்வாறு தகவல் பெறுவது என்னும் ஆராய்ச்சி முழுமை பெற்றது என்றே கொள்ளலாம். ஆனால் இப்போதைக்கு மனித குலம் அறிந்திருப்பது மில்லியன் நியூரான்கள் கூட இல்லை. இந்தப் பில்லியன் கணக்கில் இருக்கும் நியூரான்களில் இந்த நியூரான் தான் இதைச் செய்கின்றது என்பதைக் கண்டு பிடிப்பது என்பது வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவதைப் போன்றது.

அப்படி ஒரு ஊசி எனக்கு கனவா நனவா என்று தெரியாத ஒரு நிலையில் எனக்குத் தென்பட்டது. அது தான் என் ஆராய்ச்சியின் ஆரம்பம். மூளையின் எந்தப் பகுதியில் இருக்கும் எந்த நியூரான் மூலம் நினைவுகள் பரிமாறப் படுகின்றன என்பதைத் தெய்வாதீனமாய் அறிய நேர்ந்தது. இது புத்தி பேதலித்து இருக்கும் மனநோயாளிகளுக்கு மிகவும் உபயோகமாய் இருக்கும். அதற்காகவே பாலா என்னும் மனநோயாளியின் மூளையைச் சோதனை செய்தேன்.

இதைச் சட்டப்படி செய்வதானால் மிகக் கடினம். எனவே தான் சட்ட விரோதமாய்ச் செயல்பட வேண்டியதாயிற்று. முதலில் தான் காவல் துறை என்னை வாட்டியது. அதன் பின் திரு சங்கர் அவர்களின் மனிதாபிமான முயற்சிகள் என்னை ஊக்குவித்தன. அவரது முயற்சியால் சோதனை செய்யும் போது உபயோகப் படுத்திய எனது கம்ப்யூட்டர் எனக்குக் கிடைத்தது.

இந்த பதினைந்து நாட்களில் சிறையில் இருந்தே என் சோதனை வெற்றிகரமாய் நிகழ்ந்திருக்கின்றது. என் ஆராய்ச்சிக் கட்டுரை முடிவுறும் நிலையில் இருக்கின்றது. மருத்துவத் துறையில் இது ஒரு சாதனையாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

எனக்குக் கிடைக்கும் பெயர் புகழ் அத்தனையும் என் நண்பன் கதிருக்குத் தான்" என்றான் கண்ணீருடன்.

அந்த இடமே உணர்ச்சி மயமாய் ஆகியிருந்தது.

கதிர் தான் பேச ஆரம்பித்தான். "மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் சொல்கின்றேன். இந்த சந்தர் எனக்கு வெகுகால பழக்கம் எல்லாம் இல்லை. ஆனால் நெருங்கி விட்டோம். தன் லட்சிய ஆராய்ச்சி பற்றியும் இந்த ஆராய்ச்சி நல்லவிதமாய்

**கொல்லத் தான் நினைக்கிறேன்.**

நிறைவடைந்தால் மன நோயாளிகளை மறதியில் இருந்து காக்கலாம் என்றும் சொன்ன போது இதற்கு எப்படியும் உதவுவது என்ற முடிவெடுத்தேன். மொத்தத் தொகையான ஒரு கோடி என்பதை 400 பேர்களிடம் இருந்து 25000 ரூபாய் வீதம் வாங்குவது என்று முடிவெடுத்தேன். பெங்களூரில் எங்கள் கல்லூரியில் ஒன்றாகப் படித்து இப்போது நல்ல நிலையில் இருக்கும் சீனியர்கள், ஜூனியர்கள், என் நண்பர்கள் என்று தேர்ந்தெடுத்தேன். நண்பன், நண்பனுக்கு நண்பன் என்று மின்னஞ்சல் மூலமாகவே கோரிக்கை எழுப்பினேன். மாதம் 50000 ரூபாய் சம்பாதிக்கும் ஒருவர் 25000 ரூபாய் ஒரு நல்ல காரியத்துக்காகக் கொடுப்பது பெரிதில்லை என்று வாரி வழங்கினார்கள். அந்த நானூறு பேருக்கும் நாங்கள் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம். இது தான் அந்த 400 x 25000 ரூபாய் ஸ்கீம். அனைவரின் மின்னஞ்சல் முகவரிகள், நான் அனுப்பிய மின்னஞ்சல்கள் என்று அத்தனையும் இந்த சிடியில் இருக்கின்றது. நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால் நீங்களே விசாரித்துக் கொள்ளலாம்." என்று சங்கரின் கையில் கொடுத்தான் கதிர்.

இது நடந்து ஒரு வாரமாயிருக்கும்.

அன்றைய செய்தித்தாளில் இரண்டு முக்கியச் செய்திகள் இடம்பெற்றிருந்தன.

1. நக்சலைட் தலைவர் மகேந்தர் ராவ் பற்றியது. 2. சாதனை ஆராய்ச்சியாளர் ஜெயச்சந்திரன் பற்றியது.

மகேந்தர் ராவ் கைது செய்யப்பட்டார். (விரைவில் வெளி வந்து விடுவார்!)

சந்தருக்குப் புகழாரம் சூட்டப்பட்டது.

கதிரிடம் சந்தர் கேட்டான். ஏண்டா அந்த மகேந்தர் ராவ் தான் இத்தனைக்கும் காரணம்னு தெரிய வந்ததும் என்னடா நினைச்சே?

சிரித்துக் கொண்டே கதிர் சொன்னான். "கொல்லத் தான் நினைச்சேண்டா"

(நிறைவு)